விலை ரூபா 20 பக்கங்கள் 32

புலிகளுக்கு உயிர்கொடுக்கும் மஹிந்த ஆதரவாளர்கள்
பக்கம் 16

உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 198 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 30, சனிக்கிழமை 13.06.2015

# சர்ச்சைகளை தவிர்க்கவே திரைமறைவுப் பேச்சுக்கள்

## லண்டன் கலந்துரையாடல் பற்றி இப்படிச் சொல்கிறார் சுமந்திரன் எம்.பி.



யாழ்ப்பாணம், ஜூன் 13
தேவையற்ற சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காகவே அரசு மற்றும் நடுநிலைத் தரப்புகளுடன் திரை மறைவில் பேச்சுக்களை நடத்தினோம் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

அண்மையில் லண்டனில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம், தென்னாபிரிக்கப் பிரதிநிதி மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய கலந்துரையாடல் பற்றிக் கருத்துத் தெரிவித்தபோதே சுமந்திரன் இப்படிக்கூறினார்.

"காணிகள், அரசியல் கைதிகள் விடுவிப்பு சம்பந்தமாகத் தெற்கிலே தேவையில்லாத பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. இந்த விடயத்தை அளவுக்கு மீறி அரசியல் மயப்படுத்துகிறார்கள். மீண்டும் புலிகளுக்கு இடங்கொடுக்க தற்போதைய அரசு முனைகிறது என்று பொய்யாகப் பரப்புரை செய்கிறார்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் அவரது சகாக்களும். இப்படி வீணான சர்ச்சைகளுக்கு இடங்கொடுக்காமல் இருப்பதற்காகவே பேச்சுக்களைத் திரை மறைவில் நடத்தியிருந்தோம்" என்றார் –அவர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாட்டில் நடத்தும் இரகசியக் கூட்டங்கள் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றன என்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலரும் கூறினர்.

சர்வதேச விசாரணையில் இருந்து முன்னைய ஆட்சியாளர்களையும் படைத்தரப்பையும் காப்பாற்றுவதற்காக இந்தப் பேச்சுக்கள் நடைபெறுகின்றதா என்று சில கூட்டமைப்பினரும் கேள்வி எழுப்பினர். பதிலுக்குபுலம்பெயர் நாடுகளில்உள்ள விடுதலைப் புலிகளின்முன்னணி அமைப்புக்கள்

பக்.28

## மேலும் 15 பேருக்கு நேற்றுப் பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்ப்பாண நீதிமன்றத் தொகுதி மீது மே மாதம் நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்கேத்தில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் உள்ளிட்ட மேலும் 15 பேர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மே 20ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்ற தொகுதி தாக் கப்பட்டது. புங்குடுதீவு மாணவி கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடந்த மக்கள் போராட்டங்களின்போது சில அத்துமீறி இந்தத் தாக்குதலை நடத்தினர். இதை நடத்தியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 130க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் மாணவர்கள் உள்ளிட்ட சிலர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 54 சந்தேகநபர்கள்

பக்.28

## ஆட்சியில் இருக்கும்போது ஆட்டம் போடக் கூடாது



யாழ்ப்பாணம், ஜூன் 13
ஆட்சியில் இருக்கும்போது மக்களை மறந்து, நாட்டின் சுபீட்சத்தை மறந்து, பதவி இறுமாப்பில் மற்றவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு, பணத்தைத் தேடுவதில் மட்டும் குறிக்கோளாக இருந்தால், எமக்கு என்ன நடக்கும் என்பதற்கு, கடந்த அரசின் ஆட்சிக் இழப்பு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்திறப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு முதலமைச்சர் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:–

பக்.28

## உள்ளகப் பொறிமுறை குறித்து செப்ரெம்பரில் அரசு அறிக்கை

கொழும்பு, ஜூன் 13
இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு முன்னெடுக்கும் என்று தெரிவிக்கப்படும் உள்ளகப் பொறிமுறை குறித்த அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தல் நேற்று இதனை அறிவித்தார்.

உள்ளகப் பொறிமுறை குறித்து செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதா என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப்

பக்.28

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி

### அங்கீகாரமளித்தது அமைச்சரவை

கொழும்பு, ஜூன் 13
வடக்கு – கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில், போரினால் குடும்பத் தலைவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்காகச் சிறப்பான – தனியான – வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 51 சதவீதமான பெண்களில் 23 சதவீதமானோர் போரினால் விதவை ஆக்கப்பட்டவர்கள் என்று கூறுகின்றார் அமைச்சர் கே.டி.எம். சந்திராணி. அவர்களே இந்த முன்னுரிமை வேலைத் திட்டத்தினுள் உள்வாங்கப்படவுள்ளனர்.

மகளிர் அலுவல்கள்

பக்.28

## புலம்பெயர் தமிழர்கள் பயங்கரவாதிகளல்லர்

### நாடாளுமன்றில் நேற்று வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 13
"புலம்பெயர் தமிழர்கள் பயங்கரவாதிகள் அல்லர்; கொம்பு முளைத்த பேய்களும் அல்லர்; சிவப்புக் குள்ளர்களும் அல்லர்."

இவ்வாறு தெரிவித்தார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர. நாடாளுமன்றத்தில்; நேற்று

பக்.28

## திருத்திய '20'இற்கு நேற்று அங்கீகாரம்

### எம்.பிக்கள் எண்ணிக்கை 237ஆக உயர்வு

கொழும்பு, ஜூன் 13
நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 237ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் உடனடியாகவே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தத்துக்கு அமைய தொகுதிவாரியாக 145 பேரும், விகிதாசார அடிப்படையில் மாவட்டங்களிலிருந்து 55 பேரும், தேசியப் பட்டியல் மூலம் 37 பேருமாக 237 பேர் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

இலங்கை அரசமைப்பின் 20ஆவது

பக்.28

## மாற்றப்பட்ட '20' கூட திருப்தியாக இல்லை

### கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13
அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் மாற்றியமைக்கப்பட்ட வடிவமும் திருப்தியளிப்பதாக இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

"நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை இலக்கத்தில் கூட்டுவதால் எந்தப் பயனும் இல்லை. நாம் கேட்டுக் கொண்டது போல், வடக்கு – கிழக்கில் 15 வருடங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது. அத்துடன், சிறுபான்மையினரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். அதைக் குறைக்கக்கூடாது. இது தொடர்பில் அரசு உத்தரவாதம் வழங்காவிடின், 20ஆவது திருத்தச் சட்டத்தை தற்போதுள்ள வடிவிலும்கூட ஆதரிப்பது கஷ்டமானது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

பக்.28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்துக்கு கிடைத்த முதல் வெற்றி

## ஜனநாயக மக்கள் முன்னணி ம்ற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 13

125ஆக இருந்த தொகுதிகள் 145 ஆக அதிகரிக்கப்பட்டு 20 தொகுதிகள் கூடியுள்ளன. இது எங்கள் உறுதியான விட்டுக் கொடுக்காத போராட்டத்துக்கு கிடைத்துள்ள முதற்கட்ட வெற்றி. அதேவேளை, இரட்டை வாக்கு முறைமை இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது தொடர்பான மற்றும் சிறுபான்மை கட்சிகளின் போராட்டம் தொடரும்.– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

125 தொகுதிகள், 75 மாவட்ட விகிதாசாரம், 25 தேசிய விகிதாசாரம், மொத்தம் 225 ஆக இருந்த தேர்தல்முறை திருத்தன் கணக்கு இப்போது மாறி 145 தொகுதிகள், 55 மாவட்ட விகிதாசாரம், 37 தேசிய விகிதாசாரம், மொத்தம் 237 என அமைச்சரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது 125ஆக இருந்த தொகுதிகள் 145ஆக அதிகரிக்கப்பட்டு 20 தொகுதிகள் கூடியுள்ளன. இது எங்கள் உறுதியான விட்டுக் கொடுக்காத போராட்டத்துக்கு கிடைத்துள்ள முதற்கட்ட வெற்றி. மூன்று நாள்களுக்கு முன்னர் இருந்த நிலைமையைவிட இது முற்போக்கான நிலைமை என்பது நிச்சயம்.

அடுத்த கட்டமாக நாடாளுமன்றத்தில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்படும்போது அவசியமானால் இன்னமும் தொகுதிகளை கூட்டுவோம். அதேவேளை, இரட்டை வாக்குமுறைமை இன்னமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.இது தொடர்பான மற்றும் சிறுபான்மை கட்சிகளின் போராட்டம் தொடரும்.

இது தவிர 'நாட்டின் இன, அரசியல், பொருளாதார, சமூக பன்மைத் தன்மை ய்தார்த்தத்தை பிரதிபலிக்கும் முகமாக தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழு செயற்பட வேண்டும்' எனவும், 'ஒரு மாவட்டத்தில் வாழும் மக்கள் மத்தியில் பெரும்பான்மை இனத்தைவிட மாற்று இன, மத ரீதியான சிறுபான்மை மக்கள் வாழும் பட்சத்தில் அவர்களது பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தும் முகமாக எல்லை நிர்ணய ஆணைக்குழு புதிய தொகுதிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சரவை ஆவணம் உறுதிப்படுத்தியுள்ளது.

தென்னிலங்கையில் பெரும்பான்மை இனத்துடன் கலந்து வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் சார்பாக, இவற்றையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். தேர்தல் திருத்தச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக அனைத்து தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை கட்சிகளும் ஒன்றுபட்டு செயலாற்றிய காரணத்தாலேயே இந்த முதற்கட்ட வெற்றி கிடைத்துள்ளது என நான் நினைக்கின்றேன். முழு வெற்றி கிடைக்க நாம் தொடர்ந்தும் இலக்கை நோக்கி செயற்படத் தயாராக உள்ளோம். தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி நிகழ்ச்சி நிரல்கள் காரணமாக எமது ஐக்கிய முற்போக்கு முயற்சிகளை குழப்ப முயல வேண்டாம் என அனைவரையும் நான் கோருகிறேன். எங்களுடன் இந்தத் தேர்தல் முறை சீர்திருத்த போராட்டத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் மட்டுமல்ல, ஜே.வி.பி., சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி, ஐக்கிய சமவுடைமை கட்சி, நவசமசமாஜக் கட்சி, ஹெல உறுமய ஆகியவையும் இணைந்து கொண்டுள்ளன.

இவற்றையும் இணைத்துக்கொள்ள நாம் அதிகம் சிரத்தைகள் எடுத்துக் கொண்டோம். அந்த முயற்சிகள் நற்பயன்களை அளித்து வருகின்றன. தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் நானும், எங்கள் பிரதி தலைவர்களான அமைச்சரவை அமைச்சர் பழனி திகாம்பரமும் இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணனும் கடந்த மூன்று நாள்களில் பத்துக்கும் மேற்பட்ட இரகசிய கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு ஆளும் மற்றும் எதிரணி அரசியல் கட்சி தலைவர்களையும், ஜனாதிபதியின் தேர்தல் திருத்த வரைவை தயாரிக்கும் விற்பன்னர்களையும் சந்தித்துப் பேச்சில் ஈடுபட்டோம். அந்தப் பேச்சின் முழு விவரங்களையும் பகிரங்கமாக வெளியிட முடியாது என்றாலும், அவை சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவ அவசியங்களை பெரும்பான்மை தலைவர்களுக்கு புரிய வைக்க மிகச் சிறப்பாக வழி செய்து வருகின்றன என்பதை மட்டும் கூறுகின்றேன்.– என்றுள்ளது. (ற)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 13

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்ப பிள்ளை அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ஜெயா தம்பையா கலந்து கொள்வார். (ஐ)

## கம்பன் விழா

மன்னார்,ஜூன் 13

மன்னார் மாவட்ட சைவக்கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் 2015 ஆம் ஆண்டின் கம்பன் விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கும், பி.ப. 2.30 மணிக்கும் மன்னார் நகர சபைமண்டபத்தில்நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகமன்னார் மாவட்ட அரச அதிபர் எல்.வை.எஸ்.தேசப்பிரிய, வட மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் கம்பனே மீண்டும் வா எனும் கவியரங்கமும், காப்பிய நோக்கம் நிறைவேற பெரிதும் துணை நின்ற பாத்திரம் எனும் தலைப்பில் கருத்துக்களமும் இடம் பெறவுள்ளன. (ஐ)

## வருடாந்த அலங்கார உற்சவம்

வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்; ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவடையும். இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ஐ)

## வருடாந்த பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 13

நல்லூர் மூத்த விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம் பெறவுள்ளன. இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திரு விழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

வேம்பிராய் கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ஐ)



*நீர்வேலி மேற்கு மாலை வைரவர் கோயிலடியில் உள்ள கனகலிங்கம் விமலேந்திரன் என்பவரது வாழைத் தோட்டத்தில் வாழை ஒன்றில் இருந்து இரண்டு குட்டிகள் ஒன்றாகப் பிரிந்து வளர்ந்து செல்கின்றன. இந்த அதிசய வாழைக்குட்டியை விவசாயிகள் மக்கள் முண்டியடித்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.* (ற–17)

## முன்பள்ளி வெள்ளிமலர் வெளியீடு

கிளிநொச்சி,ஜூன் 13

கிளிநொச்சி, றோயல் முன்பள்ளியின் 25 அகவையை முன்னிட்டு வெள்ளிமலர் வெளியீடும், விளையாட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி, கனகபுரம் முன்பள்ளி விளையாட்டுத்திடலில் நடைபெறவுள்ளது.

க.அருள்செல்வம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்வார். (ஐ)

## பாலாவி வீதியிலுள்ள தவறணையை வேறு இடம் மாற்றுமாறு கோரிக்கை

### பல சீர்கேடுகள் ஏற்படுவதாக அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜூன் 13

கொடிகாமம் பாலாவி வடக்கில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கும் கள்ளுத் தவறணையை அங்கிருந்து அகற்ற வேண்டும் என அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

கெற்பேலி பாலாவி வீதியில் அமைந்துள்ள இந்தத் தவறணையில் அடிப்படை வசதியானகுடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் இல்லாத நிலையில் தவறணைக்கு வருவோர் வீதியோரத்தை அண்டிய பற்றைக் காடுகளில் இயற்கைக் கடன்களை கழிக்கின்றனர். இதனால் வீதியில் செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது என்றும், தவறணைக்கு வருவோர் வீதியோரத்தில் வைத்து கள் அருந்துவதுடன் வீதியில் செல்வோரை தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பெண்கள் கச்சாய் ஊடாக தமது வீடுகளுக்குச் செல்லவேண்டியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இந்த வீதியூடாகச் செல்லும் பாடசாலை மாணவிகளிடம் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதாகவும் கூறப்படுகின்றது. குறித்த இடத்தில் உள்ள கள்ளுத் தவறணையை வேறு இடத்திற்கு மாற்றுமாறு சாவகச்சேரி நீதிமன்றம், கொடிகாமம் பொலிஸார், சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர், சாவகச்சேரி பிரதேச சபை, தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் ஆகியவற்றுக்கு முறையிட்டுள்ளதாகவும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். (ற–9)

## பனை அபிவிருத்திச் சபையின் ஒடியல் கூழ் தற்போது மீண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பனை அபிவிருத்திச் சபை நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் ஒடியல் கூழ் விற்பனையை ஆரம்பித்துள்ளது.

சபையால் தயாரிக்கப்படும் இந்த சுடச்சுட ஒடியல் கூழை வேண்டி சுவைப்பதில் ஒடியல்கூழ் பிரியர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சபையில் பனம் விற்பனை நிலையத்தில் ஒவ்வொரு வாரத்தின் சனிக்கிழமைகளில் சுடச்சுட ஒடியல்கூழ் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. ஒடியல்கூழ் பிரியர்கள் தமக்கு விரும்பும் சைவ, அசைவ கூழை முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளக் கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையினால் தயாரிக்கப்பட்ட இந்த சுடச்சுட ஒடியற்கூழுக்கு முன்னர் ஒரு காலத்தில்பெரும் வரவேற்பு இருந்தது. இந்த நிலையில் மீண்டும் ஒடியல் கூழ் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ற–17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYK

# பாடசாலை சேவையில் தகுதியற்ற வாகனங்கள்

## நேற்று நடைபெற்ற பரிசோதனைகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் நேற்றுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் அரைவாசிக்கும் அதிகமான தனியார் பேருந்துகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடத் தகுதியானவை அல்ல என்று கண்டறியப்பட்டுள்ளது.



யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றி – இறக்கும் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பன யாழ்.பொலிஸ் நிலையத்தினராலும், யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துக் கிளையினராலும் நேற்றுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்வாறு சேவையில் ஈடுபடும் 100 பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் நேற்றுச் சோதனைக்கு அழைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் 76 வாகனங்களே கொண்டு வரப்பட்டிருந்தன. யாழ்.நூல் நிலையத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் வைத்து நேற்றுக் காலையிலிருந்து சோதனை இடம்பெற்றது.

நேற்று சோதனைக்கு வந்திருந்த 34 முச்சக்கர வண்டிகளில் 17 முச்சக்கர வண்டிகள், சேவையில் ஈடுபடத் தகுதியானவை அல்ல என்றும், 42 பஸ்களில் 27 சேவையில் ஈடுபடத் தகுதியானவை அல்ல என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

சேவையில் ஈடுபடத் தகுதியானவை அல்ல என்று கண்டறியப்பட்ட வாகனங்களினது உரிமையாளர்களது வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் வரி அனுமதிப் பத்திரம் என்பன பெற்றுக் கொள்ளப்பட்டன. குறித்த வாகனச் சாரதிகள், பத்து நாள்களுக்குள் தமது வாகனங்களை திருத்தி, யாழ்.மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் 125 ரூபா பணத்தைச் செலுத்தி, மீளவும் சோதனைக்கு உட்படுத்த வேண்டும். சோதனை நடவடிக்கை செவ்வாய், புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் மாத்திரமே மாவட்டச் செயலகத் தினால் மேற்கொள்ளப்படும்.

முச்சக்கர வண்டிகளில் தேவையற்ற கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருந்தமை, எக்ஸ்ரா பிட்டிங்குகள் பொருத்தப்பட்டிருந்தமை, தேவையற்ற அலங்கார வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும், தனியார் பஸ்களில் கை பிரேக் வேலை செய்யாமை, கம்பிகள் துருப்பிடித்திருந்தமை போன்ற பல்வேறு காரணங்களினாலேயே, சேவையில் ஈடுபடுவதற்கு தகுதியில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பாடசாலை சேவைப் பஸ்கள் உள்ளிட்ட எஞ்சிய வாகனங்கள் வரும் வாரங்களில் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–5)

# வலுவூட்டும் செயற்றிட்டத்தில் வலி.வடக்கை உள்வாங்குக

## பிரதேச சபையின் தவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

பிரதேச சபைகளை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் கீழ் வலி.வடக்குப் பிரதேச சபையையும் உள்வாங்குமாறு கோரி, அரச நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சின் செயலாளருக்கு, பிரதேச சபையின் தவிசாளரினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைகளை வலுவூட்டும் செயற்றிட்டத்தில் வடக்கில் 11 உள்ளூராட்சி மன்றங்கள் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தில் 3 உள்ளூராட்சி மன்றங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன. வலி.வடக்குப் பிரதேச சபை அதில் உள்ளடக்கப்படவில்லை. வருடாந்த வருமானம் 10 மில்லியனுக்கு குறைவாகப் பெற்றுக் கொள்ளும் பிரதேச சபைகளுக்கே குறித்த நிதி வழங்கப்படும் என்று அமைச்சு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், வலி.வடக்குப் பிரதேச சபை 10 மில்லியனுக்கு குறைவான வருமானம் பெறும் சபையாகும். கடந்த ஆண்டு வருமானம் குறைந்த சபை என்பதால், வற்சான்றிதழ் கூட நிதித் திணைக்களத்தால் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

எமது பிரதேச சபை போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிரதேச சபை. பெருமளவான வருமான மூலங்களை இழந்துள்ளது. மேலும் தற்போது மீள்குடியமர்வு எமது பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வீதித் திருத்தம், மயானங்கள் புனரமைப்பு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் பிரதேச சபைக்கான அலுவலகங்கள், நூலகங்கள் என்பனவும் அழிவடைந்த நிலையிலேயே உள்ளன.

இதன் காரணமாக, பிரதேச சபைகளை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் கீழ், மாதாந்தம் ஒரு மில்லியன் ரூபாவை வலி.வடக்குப் பிரதேச சபைக்கும் ஒதுக்க வேண்டும்– என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ந–5)

> “
> *பிரதேச சபைகளை வலுவூட்டும் செயற்திட்டத்தில் வடக்கில் 11 உள்ளூராட்சி மன்றங்கள் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தில் 3 உள்ளூராட்சி மன்றங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன.*

# கொழும்பு - மன்னார் ரயில் சேவை குறைபாடுகளை களைய கோரிக்கை

மன்னார், ஜூன் 13

கொழும்பு– மன்னார் சேவையில் ஈடுபடும் ரயில் சேவையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கோரி மன்னார் பிரஜைகள் குழுவால் கொழும்பு ரயில் போக்குவரத்து முகாமையாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ரயில் போக்குவரத்து முகாமையாளருக்கு அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மன்னாரில் ரயில் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்ட பின்னர் இதுவரை மன்னாரில் 5 இற்கும் மேற்பட்ட விபத்துக்கள் நடைபெற்றுள்ளதுடன், 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த காலங்களில் ரயில் சேவையின் போது விபத்துக்களைத் தடுப்பதற்கு ஏதுவாக ரயில் திணைக்களத்தால் உள்ளூர் மக்களைக் கொண்டு மூங்கில் தடிகள் மூலம் தடுப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக ஓரளவுக்கேனும் விபத்துக்களைத் தடுக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் தற்போது நேரமுகாமைத்துவம் இன்றி ரயில் சேவைகள் இடம்பெறுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனைவிட ரயில்களில் பயணிகளிடம் இருந்து பொருள்கள், உடைமைகள் என்பன களவாடப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் மக்கள் முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமைக்கு அமர்த்தப்படவில்லை. அத்துடன் ரயில் நிலையங்களில் குடி தண்ணீர் வசதி, தேநீர்ச் சாலைகளின் வசதி என்பனவும் இல்லை.

எனவே இந்த விடயங்களை ரயில் திணைக்களம் கருத்தில் கொண்டு ரயில் நிலையங்களில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# பெண் ஒருவரைக் காணவில்லை என கிளி.பொலிஸில் முறைப்பாடு

## விசாரணைக்கு வருமாறு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிப்பு

வழக்கு விசாரணை ஒன்று வருமாறு அழைத்துச் செல் லப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரைக் காணவில்லை என பெண்ணின் உறவினர்களால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி திருநகரை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான சாந்தி மலர் (வயது–48) என்பவரையே காணவில்லை என முறைபாட்டில் கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரப்பகுதியில் இருந்து திருநகரில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பிய பெண்ணை வீட்டுக்கு அருகில் முச்சக்கர வண்டியில் நின்றவர்கள் வழக்கு ஒன்றின் விசாரணைக்கு வருமாறு அழைத்து சென்றதாகவும் பின்னர் இன்றுவரை காணவில்லை எனவும் காணாமற்போன உறவினர்களால் முறைப்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டை அடுத்து கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந–21)

# வாகன விபத்துக்களால் கடந்த வாரம் மட்டும் 84 பேர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கையில் கடந்த வாரம் இடம்பெற்ற 70 விபத்துக்களில் 84 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ள யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி உபபரிசோதகர் ஐ.சி.ஏ.கே. ஜெயவன்ச, பாடசாலை பிள்ளைகள் தொடர்பில் அதிக அக்கறை எடுக்கவேண்டும். என்றும் தெரிவித்தார்.

அவர்கள் விபத்துக்களில் சிக்குவதைத் தவிர்க்கும் முகமாக அவர்களை ஏற்றியிறக்குபவர்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிப்போம். விபத்துக்களைக் குறைக்கும் பொருட்டு அதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்வர்.– என்றும் அவர் தெரிவித்தார். (ந)

# கனகரத்தினம் ம.வித்தியாலய அதிபர் நியமனத்தில் முறைகேடு

## வடக்கு கல்வி அமைச்சுக்கு பரிந்துரைகளை அனுப்பியது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூன் 13

கடந்த 2012 ஆம் ஆண்டு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் நியமனத்தின் போது, தகுதியான ஒருவரை விடுத்து இன்னொருவருக்கு நியமனம் வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கும், வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கும் தனது பரிந்துரைகளை அனுப்பியுள்ளது.

அதில், அதிபர் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபருக்கு குறித்த நியமனத்தை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் தேர்வுக்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இதன் போது நேர்முகத் தேர்வுக்கு சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் தோற்றியிருந்தார். அவருடன் வேறு சிலரும் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியிருந்தனர். இறுதியில், அப்போது பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியவர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.

தனக்கு வழங்கப்பட வேண்டிய நியமனத்தை பாரபட்சமான முறையில் கல்வி அமைச்சின் செயலாளர் வேறொருவருக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் முறைப்பாடு செய்தார். இது தொடர்பில் அப்போதைய கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த எஸ்.சத்தியசீலன், நாம் தகுதியானவருக்கே நியமனம் வழங்கியுள்ளோம். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆண்கள் விடுதியிருப்பதால் [illegible] என்று குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் இடம்பெற்று வந்தது. தற்போது அந்த விசாரணைகள் முடிவுற்றுள்ள நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் பரிந்துரைகளை அனுப்பி வைத்துள்ளது.

அந்தப் பரிந்துரைகளில், குறித்த பாடசாலையின் நியமனத்துக்கு சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் அதிபரே தகுதியானவர். அவருக்கு அந்த நியமனத்தை இந்தப் பரிந்துரை வழங்கப்படும் நாளிலிருந்து ஒரு மாத காலத்தினுள் வழங்கவும். மேலும், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தியில் மாத்திரமே தலையிட முடியும். அதிபர் நியமனத்தில் தலையீடு செய்ய முடியாது என்றும், திணைக்களம் மாத்திரமே முடிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அந்தப் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் குறித்த கடிதம் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கும், வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்போது ஆனி மாத வசந்தகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் வெளிநாட்டுப் பறவைகள் பலவும் வடக்கின் பல பகுதிகளுக்கு வர ஆரம்பித்துள்ளன. கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் உள்ள சதுப்பு நிலங்களில் காலை வேளைகளில் கூட்டம் கூட்டமாக செங்கால் நாரைகளும் வேறு பல வெளிநாட்டுப் பறவைகளும் வந்து சேர்கின்றன. அவை அங்குள்ள குட்டைகளில் மீன்களைப் பிடித்து உண்பதைக் காண முடிகின்றது. (ற-21)

# கிளிநொச்சி மக்களின் வீட்டுத் திட்டக் கடனை உடன் அறவிட உத்தரவு

## மாவட்ட தேசிய வீடமைப்பு திட்ட அதிகாரிகளுக்கு அதிகார சபையின் தலைவர் விடுத்தார்

கிளிநொச்சி, ஜூன் 13

2010ஆம் ஆண்டில் முதல் தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் வீட்டு திட்டத்துக்காக கிளிநொச்சி மாவட்ட மக்களால் பெறப்பட்ட கடனான ரூபா 44 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை உடனடியாகத் திரும்ப அறவிடுமாறு கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு திட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஸாஹர பாலன் சூரிய.

அண்மையில் கிளிநொச்சி மாட்ட காரியாலயத்துக்கு வந்திருந்த தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பொது முகாமையாளர்,பிரதி முகாமையாளர், பொறியியல் சேவைகள் அதிகாரிகள் குழுவினருடன் கலந்துரையாடியிருந்தார். அதன்போதே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

நாடு முழுவதும் 50 ஆயிரம் வீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 197 பயனாளிகளால் பெறப்பட்ட 44 லட்சத்து 30 ஆயிரம் ரூபா கடன் இன்னமும் மீளக் கட்டப்படாதுள்ளது. இந்தக் கடன்கள் 2010 ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டிருந்தன. அதையடுத்தே அதிகார சபையின் தலைவர் உடனடியாக அவற்றை அறவிடுமாறு உத்தரவிட்டுள்ளார்.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையார் நோயல் ஜெயசந்திரன், கடன்களை பெற்ற பயனாளிகள் மொத்தமாக செலுத்தமுடியாத விடத்து பகுதி பகுதியாகவேனும் தங்களது கடன்களை செலுத்தி முடிக்க வேண்டும். – என்றும் தெரிவித்தார்.

அத்துடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் நாடு முழுவதும் 50ஆயிரம் வீடுகள் வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி அறிவியல் நகரில் கட்டப்படும் 25 வீட்டுத்திட்டங்களையும் சென்று பார்வையிட்டதுடன் மக்களுக்கான மேலதிக ஆலோசனைகளையும் வழங்கினார்.

கிளிநொச்சியில் அண்ணளவாக 6 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட உள்ள ஊழியர்கள் தங்குமிட விடுதிக்கான வேலைத்திட்டங்களையும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கே வழங்க உள்ளதாகவும் இதனால் மக்கள் மேலும் பயன்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார். (ற-21)

## அடிப்படை வசதிகளற்று ஐயன்கன்குளம் மக்கள் சிரமம்

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள ஐயன்கன்குளம் கிராமத்தில் அடிப்படை தேவைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாதுள்ளதால் சுமார் 361 குடும்பங்களைச் சேர்ந்த 750 மேற்பட்டோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதி முதற்கொண்டு ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை எந்தவித புனரமைப்பு பணிகளுமின்றிக் காணப்படுகின்றன என்றும், அதனால் போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் தாம் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் – பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதனைவிட மருத்துவ வசதி, மேலதிக கல்வி வசதி என்பவற்றைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும், கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்து வந்த போதும் தமது கோரிக்கை எதனையும் உரிய அதிகாரிகள் செவிசாய்க்க வில்லை எனவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## பாடசாலை ஆய்வுகூடத்தில் தீ விபத்து

அம்பாறை, ஜூன் 13

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள விநாயகர்புரம் மகா வித்தியாலயத்தின் ஆய்வுகூடத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் பொதுமக்களும் இணைந்து தீயணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மின்னொழுக்கு காரணமாக தீ பரவியிருக்கலாம் என்று திருக்கோவில் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். தீவிபத்து தொடர்பில்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். தீ விபத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (ற)

## கிணற்றுள் விழுந்து பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம், குடத்தனை கிழக்கில் கிணற்றுக்குள் விழ்ந்து பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

30 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார். வீட்டில் இருந்தோர் வெளியே சென்றிருந்தனர் என்றும் அவர்கள் வீடு திரும்பிய பின்னர் குறித்த பெண்ணைக் காணவில்லை என்று தேடியபோது கிணற்றில் சடலமாகக் காணப்பட்டார் என்றும் கூறப்பட்டது. (ற)

## முன்பள்ளி விளையாட்டு விழா

தென்மராட்சி, ஜூன் 13

மீசாலை நாவலர் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி தி.அபராஜிதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், ஓய்வுநிலை சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை அதிபர் கா.கந்தசாமி, மருத் துவர் இ.கந்தையா, சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ப.சிறிதரன், கச்சாய் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி பு.சுப்பிரமணியம், தென்மராட்சி தெற்கு லயன்ஸ் கழக லயன் சீமாட்டி திருமதி அ.சறோஜாதேவி ஆகியோரும் கலந்து கொள்வர். (ற-9)

## 12 வயதுச் சிறுவன் தாக்கப்பட்டதாக முறைப்பாடு

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பில் 12 வயதுச் சிறுவன் ஒருவன், கடத்திச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முஹம்மத் அஸ்லம் (வயது–12) என்ற மாணவனே கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் தற்போது ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# போரால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள் வழங்கல் களுவாஞ்சிக்குடியில்

மட்டக்களப்பு, ஜூன் 13

போரால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடமாடும் சேவை, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திலும் புனாணையிலும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு டோபா மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய இந்த நடமாடும் சேவையின்போது, நட்டஈடு பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துமத விவகாரங்களுக்கான அமைச்சின் கீழுள்ள புனர்வாழ்வு அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை நடைபெறுகின்றது.

போரால் உயிரிழந்த மற்றும் காயமடைந்த, சொத்துக்களை இழந்த அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோருக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் சி.பத்மநாதன் தெரிவித்தார்.

இங்கு தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் –

பாதிக்கப்பட்டவர்களால் வழங்கப்பட்ட கோவைகளையே புனர்வாழ்வு அதிகாரசபைக்கு நாம் அனுப்பினோம். அதிலுள்ள குறைகளை நிவர்த்திசெய்து விரைவில் இழப்பீடுகளை வழங்குவதற்காக உங்களது காலடிக்கு வந்துள்ளார்கள். போர் வடுக்களைக் கொண்டிருக்கும் மக்களுக்கு 15 வருடங்களின் பின்பு தனி நபர்களுக்கு 100,000 ரூபாவும் அரச உத்தியோகத்தர்களுக்கு 200,000 ரூபாவும் இழப்பீடு வழங்கப்படவுள்ளது. காயமடைந்த நபர்களுக்கு 50,000 ரூபாவும் காயமடைந்த அரச ஊழியருக்கு 100,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இது தவிர, தொழில் அபிவிருத்திக்காக 250,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளதுடன், இதற்கு 4 சதவீத வட்டி அறவிடப்படவுள்ளது.– என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த பாதையில் செல்கிறார் மைத்திரி

## சாடுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூன் 13

மஹிந்த பயணித்த பாதையில் இன்று மைத்திரியும் பயணிக்க ஆரம்பித்து விட்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அதிகார ஆசை வந்துவிட்டது. – இப்படிச் சாடியுள்ளது மக்கள் விடுதலை முன்னணி.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறிச் செயற்பட வேண்டாம். மோசடிகளை உடனடியாக நிறுத்துமாறும் ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஆட்சி மாற்றத்துடன் இந்த அரசு மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியது. ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை பொய்யாக்கும் வகையில் அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் மஹிந்த ராஜபக்ஷ அரசு தமது அதிகாரத்தைத் தக்கவைக்கும் நோக்கத்தில் எவ்வாறான வழிமுறைகளை கையாண்டதோ அதே வழிமுறைகளை இந்த அரசும் கையாள்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தலைமைத்துவத்தை தக்கவைக்கும் நோக்கில் அமைச்சுப் பதவிகளை லஞ்சமாக கொடுத்து உறுப்பினர்களை வாங்குகின்றார். மைத்திரிக்கும் இன்று அதிகார ஆசை ஏற்பட்டுள்ளது. அதற்காகவே மஹிந்த கூட்டணி உறுப்பினர்களைத் தன் பக்கம் எடுக்கும் நடவடிக்கைகளை கையாள்கின்றார். மஹிந்த அரசில் மஹிந்தவுடன் கைகோர்த்து நாட்டை நாசமாக்கிய அமைச்சர்கள் இன்று மைத்திரி–ரணில் அரசிலும் கைகோர்த்துள்ளனர். ஆகவே இன்று அரசின் செயற்பாடுகளினால் மக்கள் அதிருப்தி அடைந்து உள்ளனர்.

நூறு நாள்கள் மட்டுமே இந்த அரசு ஆட்சியை நடத்த முடியும். அது வரை காலமே மக்கள் இவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்துள்ளனர். ஆனால் மக்களின் வரப்பிரசாதத்தை மீறிய வகையில் இந்த அரசு நடந்து கொள்வது தொடர்பில் எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம். அதேபோல் நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்து தேர்தலை நடத்துவதை அனைவரும் ஆதரிக்கின்றனர். ஆனால் அதற்கு முன்னர் 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். இவற்றை விடுத்து கட்சிகளின் அதிகாரப் போட்டியில் மக்களின் வரத்தை தவறாக பயன்படுத்த வேண்டாம் என அரசை நாம் எச்சரிக்கின்றோம்.

மஹிந்தவின் சர்வாதிகார ஆட்சியில் இருந்து விடுபடவே மக்கள் மாற்று ஆட்சியை ஆதரித்தனர். ஆனால் இவர்களும் மஹிந்தவின் கொள்கைகளையே பின்பற்றுகின்றனர். மஹிந்தவைத் தோற்கடித்தாலும் மஹிந்தவின் கொள்கைகள் இன்னும் தோற்கடிக்கப்படவில்லை. அதைத் தோற்கடிக்கும் வரையில் நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியாது. அதேபோல் மஹிந்தவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கான பாதையை இவர்களே ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

எனவே தெரிந்தே இவர்கள் செய்யும் தவறுகளை உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டும். மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் பிளவு அந்தக் கட்சிசார்ந்தவிடயமாகும். அதைக்காரணம் காட்டி நாட்டில் ஏற்பட விருக்கும் முக்கிய மாற்றங்களை தடுத்து விடக் கூடாது. மஹிந்தவா அல்லது மைத்திரியா கட்சியின் தலைவர் என்பதை கட்சிக்குள் தீர்மானிக்க வேண்டும். இந்தவிடயத்தைநாட்டுமக்களுடன் ஒப்பிட்டுப் பிரிவை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம். – என்றார். (ற)

# பிரதமர் மீதான நம்பிக்கையை பரீட்சிக்க வேண்டியது அவசியம்

## ஜீ.எல்.பீரிஸ் எம்.பி. கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 13

அரசின் தலைவரான பிரதமர் மீதான நம்பிக்கை தொடர்பில் கேள்வியெழுப்பப்படும்போது பிரதமர் மீதான நம்பிக்கையைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டியது அத்தியாவசியமான விடயமாகும் என முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஆகையால் 100க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் குழு அறையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மஹிந்த அணியினரின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்தெரிவித்ததாவது:–

100க்கும் மேலதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளமாட்டோம் என பிரதமர் வெட்கமில்லாமல் கூறுவது ஜனநாயகத்துக்கு எதிரான கருத்தாகும். ஒரு நாட்டில் நாடாளுமன்றத்தின் மீதான நம்பிக்கை பிரதானமான தொன்றாக விளங்குகின்றது.

நாடாளுமன்றத்தினதும், அரசினதும் தலைவராக விளங்குபவர் பிரதமர். எனவே பிரதமர் மீதான நம்பிக்கை தொடர்பில் கேள்வியெழுப்பப்படும்போது, பிரதமர் மீதான நம்பிக்கைத் தன்மையைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

அதனடிப்படையிலேயே பிரதமருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் படுகின்றது. நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பேசப்பட்டபோது, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள மாட்டோம் என்று வெட்கமில்லாமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கின்றார். நாடாளுமன்றத்தின் நம்பிக்கைத்தன்மையை உறுதி செய்யும் இந்தப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியது நாடாளுமன்றத்தின் பொறுப்பாகும். அதனை மீறிய பிரதமரின் கருத்து ஜனநாயகத்திற்கு எதிரான கருத்தாகவே பார்க்கப்படுகிறது.– என்றார்.

**100க்கும் மேலதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளமாட்டோம் என பிரதமர் வெட்கமில்லாமல் கூறுவது ஜனநாயகத்துக்கு எதிரான கருத்தாகும்.**

அத்தோடு பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீளப் பெறப்பட்டதாக அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்திருக்கும் கருத்து முற்றிலும் பொய்யானதாகும். பிரதமருக்குஎதிராகக் கொண்டு வரப்பட்ட இந்த நம்பிக்கையில்லாப் பிரேரயை நாம் மீளப் பெறவில்லை. குறித்த பிரேரணையை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு எந்தவொரு ஆணையையும் ஜனாதிபதி பிறப்பிக்கவில்லை. – என்றார். (ற)

# முதன்முறை மட்டுமே வடக்கில் கறுப்புக் கொடி காட்டினார்கள்



கொழும்பு, ஜூன் 13

யாழ்ப்பாணத்துக்கு தான்முதன் முதலில் சென்ற போது மட்டுமே தமிழ் மக்கள் தனக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டி போராட்டம் நடத்தியதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சுயமரியாதை இருந்தால், நாடாளுமன்றத்தை கலைத்து உடனடியாகத் தேர்தலை நடத்துமாறும் மஹிந்த ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

வெலிகந்த பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில்கலந்து கொண்டுகருத்து வெளியிடும் போதே மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

30 வருடங்களாக நிலவிய கொடூர யுகத்தை நாங்கள் மாற்றியமைத்தோம். இந்தச் சுதந்திரத்தை அனுபவிக்கும் சிலர் சிறிது காலம் சென்ற பிறகு அதனை மறந்து விடுவார்கள். நான் முதல் முறை யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் போது கறுப்பு கொடியை உயர்த்தினார்கள். எனினும் இரண்டாவது முறை செல்லும் போது அவ்விதம் உயர்த்த வில்லை.

குறைந்த பட்சம் புலிகளை தோற்கடித்த பின் நான் யாழ்ப்பாணம் சென்ற போது கூட எவரும் எனக்கு கறுப்பு கொடியை உயர்த்த வில்லை. தற்போது சில பிரதேசங்களில் எனக்கு எதிராக கறுப்புக் கொடி உயர்த்துவது எவருடையதோ அவசியத்துக்காக செயற்படுத்தப் படுவதாகும். எனினும் அதனை நான் கண்டுக்கொள்வதில்லை.

### ரணிலுக்குச் சவால்

தமது பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியானால் அது பெருமை, மக்களின் ஆதரவு, எனினும் மக்கள் ரணிலுக்கு ஆதரவு வழங்க வில்லை. எனவே இந்த அரசுக்குச் சொல்கின் றோம் அனைத்தையும் மேற்கொள்வதற்கு முன்னர், ரணிலுக்கு மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொள்ளுங்கள். அவருக்கு மக்களின் ஆதரவு இல்லை. ரணிலுக்கு ஆதரவு வழங்க வேண்டுமா இல்லையா என்பது குறித்து மக்களுக்கு தெரியும்.

எனவே முதுகெலும்பு உள்ள சுயமரியாதை உடைய ஒருவர் என்றால் ரணில் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும். – என்றார். (ந-ந)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பொதுநலப் பணிகளில் ஆர்வம் கூடும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் காண்பீர்கள். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும்.

**இடபம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் பழக வேண்டாம். உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், பணிச்சுமை அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை ஏற்படும்.

**மிதுனம்:** இனிய பேச்சால், நற்பெயர் பெறுவீர்கள். பகைவரும் பாராட்டும் விதத்தில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். முக்கியமான வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கடகம்:** நீண்ட நாள்களாக நினைத்த திட்டம் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், தடை மறைந்து இலாபம் உயரும். சுபவிடயத்தில், நல்ல முன்னேற்றம் உண்டு. குடும்பத்தினரின் அன்பு கண்டு நெகிழ்வீர்கள்.

**சிங்கம்:** எதிலும் புதுமை படைக்க விரும்புவீர்கள். எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில், நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். இலாபம் சுமார். திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**கன்னி:** பழைய நண்பரைச் சந்தித்து மகிழ்வீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழிலில், போட்டி அதிகரிப்பதால், சுமாரான இலாபமே கிடைக்கும். பிள்ளைகளின் செயல் கண்டு பெருமிதம் கொள்வீர்கள்.

**துலாம்:** சாதுர்யமாகச் செயல்பட்டு, வெற்றி காண்பீர்கள். உறவினர், நண்பர்களிடம், செல்வாக்கு அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் பெருகும். குடும்பத் தேவை அனைத்தும் நிறைவேறும்.

**விருச்சிகம்:** நல்ல மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் அக்கறை தேவைப்படும். பூர்வீக சொத்து மூலம், வருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** வெற்றி மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். சுபவிஷயத்தில், எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வாகன பயணத்தில், மித வேகம் கடைப்பிடிப்பது நல்லது.

**மகரம்:** பொது விடயங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். பணிகளில், தற்காப்பு முறைகளைத் தவறாமல் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில், குளறுபடிகளை சரிசெய்ய முயல்வீர்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகமும், உடலில் புத்துணர்வும் உண்டாகும். பணிகளில் ஆர்வமும், திறமையும் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**மீனம்:** உறவினருடன் கருத்துவேறுபாடு உண்டாகலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான லாபம் கிடைக்கும். மனைவியின் ஆலோசனை, மனநிம்மதிக்கு வழி வகுக்கும்.

# டப்பிங் தொடர்களால் ரொப்பான சனல்

தமிழில் எத்தனையோ சனல்கள் இருந்தாலும் பெண்கள் விரும்பிப் பார்ப்பது ஒரு சில சனல்களைத் தான். அதாவது அவர்கள் விரும்பிப் பார்ப்பது தொடர் நாடகங்களை மட்டும் தான். இதனை மனதில் வைத்து நேற்று வந்த புதிய சனல்கள் கூட நல்லா கண்ணீர் விட்டு அழுவது போன்ற சீரியல்களை எடுத்து பணம்பண்ணி வருகின்றன. காலம் காலமாக குடும்பங்களை அழவைத்து வந்த தமிழ் சீரியல்களுக்குப் போட்டியாக வடஇந்திய சீரியல்களை டப்செய்து வெளியிட்டன சில சனல்கள். விளம்பர இடைவேளைகளில் டப்பிங் சீரியல்களை பார்த்த குடும்பத் தலைவிகள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி தற்போது ஒரு டப்பிங் சீரியலையும் விடாமல் பார்த்து சாதனை புரிந்து வருகின்றனர்.

இந்த சாதனை டப்பிங் சீரியல்களை தடை செய்யுங்கள் என்று நமது சின்னத் திரை கலைஞர்கள் போராடும் அளவுக்குச் சென்றது. இந்த சீரியல்களுக்கு தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் வரவேற்பு உள்ளது.

அந்த வகையில் பொலிமர் என்ற பெயரில் ஒரு சனல் உள்ளது. அந்தச் சனலைத் தூக்கி நிறுத்துவதே இந்த டப்பிங் சீரியல்கள் தான், சனல் ஆரம்பித்து 2, 3 வருடங்கள் கடந் தும் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில் பொலிமர் ஒளிபரப்பிய சில டப்பிங் சீரியல்கள் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற, இப்போது அந்தச் சனலைவாழவைத்துக்கொண்டிருப்பதே இந்த சீரியல்கள்தான்.

மொத்த சீரியல்களின் எண்ணிக்கை 10 ஐக் கூடத் தாண்டாது, ஆனால் ஏராளமான ரசிக, ரசிகைகள் இந்த சீரியல்களுக்கு அடிமையாகி விட்டனர். தற்போது பொலிமரில் ஒளி பரப்பாகும் புதிய சீரியல்களான புது புது அர்த்தங்கள், உறவே உயிரே, இருமலர்கள் ஆகிய மூன்று சீரியல்களும் இளம் பெண்களையும் கவரும் விதத்தில் உள்ளதால், சனலின் டி.ஆர்.பி ரேட் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

# இப்படியும் ஓர் ஆராய்ச்சியா?

முதன் முறையாக விண்வெளியில் இரு ஆபாச நடிகர்கள் உடலுறவில் ஈடுபட உள்ளதாகவும் அதனை வீடியோவாக பதிவு செய்ய உள்ளதாகவும் ஆபாசப் பட நிறுவனம் ஒன்று பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளது.

பூமியைப் போன்று விண்வெளியில் ஈர்ப்புச் சக்தி இல்லை என்பதால், விண்வெளியில் உடலுறவில் ஈடுபட முடியுமா என்பது குறித்து ஆய்வு செய்யுமாறு விஞ்ஞானிகள் கோரிக்கை வைத்து வருகின்றனர். இதுவரை விண்வெளியில் யாரும் உடலுறவில் ஈடுபட்டது இல்லை. விண்வெளியில் உடலுறவில் ஈடுபட முடியுமா என்பதைப் பரிசோதிக்க இந்த அதி முக்கியமான ஆராய்ச்சியில் விண்வெளி நிலையம் ஒன்று மறைமுகமாக ஈடுபட்டு வருகிறது.

இதற்கு அமைவாக முதன் முதலாக மனித வரலாற்றில் 2 பேர் விண்வெளியில் வைத்து உடலுறவில் ஈடுபட உள்ளார்கள்.

இந்த ஆய்வு குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஆபாசப் பட நிறுவனம், விண்வெளி வாழ்க்கை என்ன என்பது குறித்து பலருக்கும் பலவிதமான எண்ணங்கள் இருக்கும். இந்த நிலையில் விண்வெளியில் உடலுறவில் ஈடுபடுவது தொடர்பான ஆய்வை மிகக் கவனமாக மேற்கொள்ள உள்ளோம். விண்வெளியில் உடலுறவில் ஈடுபடுவது சாத்தியமாகும் என நம்புகின்றோம்.


இனப்பெருக்கம் எனபது முக்கியமான ஒன்றாகும். இந்த நிலையில் விண்வெளியில் இவ்வாறான ஒன்றை மேற்கொள்வது மிகப்பெரிய இலக்குத் தான், ஆனால் அந்த இலக்கை அடைய ஒரு வாய்ப்பாக இதைக் கருதுகின்றோம், என்று தெரிவித்துள்ளது.



# வில்லேஜ் விஞ்ஞானிகள்










# எப்பிடியிருந்த நான் இப்படி ஆகிட்டேன்

நயன்தாராவின் ஒளிப்படம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியாகியிருந்தது. அந்தப் படத்தைப் பார்த்த ரசிகர்கள் இரத்தக் கண்ணீர் வடித்தனர்.

ஏன் இவருக்கு என்ன ஆச்சு என்று எல்லோரும் திகைத்துத் தான் போனார்கள். ஏனெனில் மிகவும் மெலிந்து, முகத்தில் பழைய அழகை இழந்து அவர் காணப்பட்டார். இதற்கான காரணம் தற்போது தெரிய வந்துள்ளது.

நானும் ரவுடி தான் படத்துக்காக நயன்தாரா, தான், கொடுத்த கால்ஷீட்டை விட அதிக நாள்கள், குறைந்த சம்பளத்தில் இரவு – பகல் எனப் பார்க்காமல் நடித்துக் கொடுத்தாராம். இதனால், தான் இவரது பழைய அழகு கொஞ்சம் குறைந்துள்ளதாம்.




# சுழலும் கமரா

செல்பி பிரியர்களை ஈர்க்கிறது பபிள்ஸ்கோப் 360 டிகிரி கமரா. செல்போன் பனலோடு இணைக்கும் விதமாக உள்ள இந்த கமரா ஒரே ஷாட்டில் எல்லாத் திசைகளிலும் படம் பிடிக்கும். இதற்காக தனி செயலியும் உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை, கலட்டி

# புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா

## -13.06.2015-



### ஆலய வரலாறு

182 வருடங்கள் சிறப்புமிக்க பருத்தித்துறை கலட்டி புனித அந்தோனியார் ஆலயமானது அதன் வருடாந்த திருவிழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில் பங்குத்தந்தை அருட்பணி ஜோ.ஜோண் மௌலிஸ் அவர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், ஆலய மக்களுக்கும், வெளிநாட்டில் வாழும் மக்களுக்கும், பக்தர்களுக்கும் எமது வாழ்த்துக் களையும், செபங்களையும் கூறி நிற்கின்றோம்.

மேலும் அதன் மகத்தான சிறப்புக்களில் ஒருசிலவற்றைப் பகிர்ந்து கொள்கின்றோம். பருத்தித்துறை கலட்டி புனித அந்தோனியார் ஆலயமானது 1802 ஆம் ஆண்டில் மில் எதிர் ஒழுங்கையில் அமைந்துள்ள காணியில் குடிசை வடிவில் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின் 4ஆம் குறுக்கு வீதியில் நிலம் வாங்கி 1833 ஆம் ஆண்டு சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்டது. இக்காலத்தில் மேல் மாடியைக் கொண்ட அறை வீட்டுடன் இணைந்து பங்குத்தளமாக இயங்கியபோது பின்பு இதனை மாற்றம் செய்த வேளையிலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட்டு வந்தார்கள் எமது ஆலய மக்கள். காலத்துக்கு காலம் அர்ப்பணிப்புமிக்க பங்குத் தந்தையர்களின் மேற்பார்வையிலும் ஆர்வமிக்க பங்கு பொதுச் சேவை ஆலய உறுப்பினர்கள், வெளிநாட்டில் வாழும் அங்கத்தவர்களின் பங்களிப்புடனும் சிறப்பாக வளர்ச்சி கண்டுள்ளது.

1833ஆம் ஆண்டு தியான சபையை (ORITORIAN) சேர்ந்த குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயம் வழிபாட்டி லும், செயற்பாட்டிலும் சிறந்து விளங்கியது. காலங்கள் உருண்டோடின. அதன்பின் 1932 ஆம் ஆண்டு அருட்பணி அல்பிலியோன்சன் அவர்கள் காலத்தில் இந்தியன் சிமெந்தினால் இரண்டாவது கோயில் கட்டப்பட்டது. இது இவ் ஆல யத்துக்கு காரணமாய் அமைந்தது. தொடர்ந்து எமது மூதாதையருக்கு மதிப்பளித்து தற்போது 3ஆவது தடவை கோயில் வேலை செய்து வருகின்றோம். இவை யாவற்றுக்கும் முக்கிய பொறுப்பாக அமைந்தது எமது ஆலய நிர்வாகமும், ஆலய அங்கத்தவர்களும், வெளிநாட்டில் வாழும் உறவினர்களும், ஆலய பக்தர்களுமே ஆகும்.

இவ் ஆலயத்தின் திருநாள் வழிபாடு ஆனி 12ஆம் திகதி மாலையில் புனிதரின் திருச்சுரூப பவனி ஆரம்பிக் கப்பட்டு வழமையான வீதியின் வழியே வந்து ஆலயம் சேர்ந்து இளையோர் ஒன்றிணைந்து நற்கருணை வழிபாடு செய்து இறையா சீருடன் நிறைவேற்றி 13ஆம் திகதி காலை திருவிழாத் திருப்பலி பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் நடைபெறும். இவ்விழா சிறப்புற அமைய வீதிகளும், ஆலய முன்றல்களும் வர்ண விளக்குகளாலும் சோடனைகளாலும் அலங் கரிக்கப் பட்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இச்சிறப்புமிக்க புனித அந்தோனியார் ஆலயம் சார்பாக உங்கள் அனைவரையும் திருவிழாவுக்கு வருகைதருமாறு அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

ஆலய அருட்பணி சபை

### பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி

பருத்தி நகரின் மத்தியில் கம்பீரமாக காட்சியளித்து, தேடிவரும் பக்தர்களுக்கு கோடி அற்புதங்களைச் செய்து வரும் தூய அந்தோனியார் ஆலய வருடாந்த பெரு விழா வுக்கு ஆசிச் செய்தி தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த ஆலயத்தின் நம்பிக்கைப் பயணம் 180 ஆண்டு களைக் கடந்தது. 1833 ஆம் ஆண்டு சுண்ணாம்பினால் கட்டப்பட்ட ஆலயமானது 1932 இல் சிமெந்தினால் அழகுற மறுசீரமைக்கப்பட்டு பல இன சமய மக்கள் ஒன்று கூடி வழிபடுகின்ற வணக்கஸ்தலமாக அமைந்திருக் கின்றது.

இவ்வூர் மக்களின் ஆழமான விசுவாசமும் இம் மக் களின் பல்துறை சார்ந்த அனுபவங்கள் ஆற்றல்கள் ஆல யத்தின் மேல் கொண்ட பற்று இளையோரின் துடிப்புள்ள பங்களிப்பு இவ்வாலயத்தின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கிவருகின்றது.

இத்தெய்வீகப் புனிதரின் மகிமை விளங்க கட்டப் பட்டுக் கொண்டிருக்கின்ற கலைநுட்பம் நிறைந்த பிர மாண்டமான (DOME) பீடமுகப்பு வெகுவிரைவில் முடி வடைந்து இன்னும் பலரை கவர்ந்திழுக்கும் இடமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன், புனிதரின் பாது காப்பும், ஆசீரும் தேடிவருகின்ற ஒவ்வொருவருக்கும் கிடைக்க ஆசி வழங்கி நிற்கின்றேன்.

அருட்பணி ஜோ. ஜோண் மவுலிஸ்


**வரத விநாயகர் பாம்**
கால்நடைகளுக்கான தீவனங்கள், மருந்துகள், ஒரு நாள் இறைச்சிக்கோழி, முட்டைக்கோழி, குஞ்சுகள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தும்பளை வீதி, பருத்தித்துறை.
077 472 7333

**சுரேஸ் ஸ்ரோர்ஸ் & ஆட்டோ சேர்விஸ்**
சகல விதமான பலசரக்குப் பொருள்களையும் பாடசாலை உபகரணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
தும்பளைவிதி, பருத்தித்துறை.
077 869 6927

**பிறின்சிகா மதர் & சைல்ட் கெயர்**
கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அனைத்துப் பொருள்களும் கிடைக்குமிடம்
தும்பளை விதி, பருத்தித்துறை.
021 226 4298, 077 989 3678

**அமல் சட்ரிங் வேக்ஸ்**
உங்களுக்கு விரும்பமான வகையிலும் இலாபகரமான முறையிலும் பிளைவுட், தகரம், பலகை போன்றவற்றில் மிகவும் நேர்த்தியாக சட்ரிங் வேலைகள் மற்றும் மேசன், அலுமினியம், சில்வர், தச்சுவேலை, பெயின்ரிங், வயரிங், பைப்லைனிங், ரெராசோ, மாபிள், நிலக்கல் போன்ற வேலைகளையும் செய்து கொடுக் கின்றார்கள் அமல் சட்ரிங் வேக்ஸ் தாபனத்தினர்.
தொடர்புகளுக்கு: தும்பளை மேற்கு, உடையார் வளவு, பருத்தித்துறை. புலோப்பளை மேற்கு, பளை.
077 8737177, 075 7498 274

**மைக்ரோபானு அலுமினியம்**
4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

**சித்திவிநாயகர் மோட்டோர்ஸ்**
தும்பளை வீதி, பருத்தித்துறை.
077 167 0072

**குமார் மோட்டோர்ஸ்**
மெக்கானிக் அண்ட் சேர்விஸ்
Authorised Dealer for Abans Auto (pvt)Ltd
தும்பளை விதி, பருத்தித்துறை.
077 539 6840

**சென் அன்ரனீஸ் மோட்டோர்ஸ்**
முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தலும் சுத்திகரித்தலும்.
தும்பளை விதி, பருத்தித்துறை.
077 469 4217, 077 856 2174

சகல விதமான ஆடைத் தெரிவுகளுக்கும்
**பிரியங்கா ரெக்ஸ்**
பஸ்நிலையம், பருத்தித்துறை.
077 102 9010

**அபிராமி இரும்பகம்**
மெத்தக் கடைச் சந்தி, பருத்தித்துறை.

**கிசோனி பேக்கறி**
பிரதான வீதி, பருத்தித்துறை.
077 231 2696

**அன்ரோ பஸன் ஹவுஸ் & கிப்ட் சென்ரர்**
ஆண்கள் பெண்களுக்கான ரெடிமெற் ஆடைகள் அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் கவறிங்நகைகள் போன்றவற்றை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, பருத்தித்துறை.
(வேலாயுதம் மகாவித்தியாலயம் அருகில்)
076 657 6321

**ரகு வாகனங்கள் திருத்துமிடம்**
அங்கீகரிக்கப்பட்ட வாகன சுத்திகரிப்பு நிலையம்.
உரிமையாளர்: எட்வின்(ரகு)
பிரதான வீதி, பருத்தித்துறை.
077 728 6315

**சென் அன்ரனீஸ் ரெக்ஸ் ரைல்ஸ்**
சகல வயதினருக்குமான நவநாகரிக ரெடிமேற் ஆடைகள் அழகு சாதனப் பொருள்கள் ஆலயங்களுக்குத் தேவையான பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
உரிமையாளர்: E.ராஜ் அலெக்சாண்டர்
4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

**அற்புதம் மோட்டோர்ஸ் கராஜ்**
உரிமையாளர்: அற்புதம்
077 644 7461
இல:256, காரைநகர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

**அமல் மணப்பந்தல் சேவை**
சென் அன்ரனிஸ் லேன் 4ஆம் குறுக்குத்தெரு, மணல் ஒழுங்கை, பருத்தித்துறை.
077 078 2845

**வைஷ்ணவி ஸ்ரோர்**
4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.
077 923 6943

உங்கள் சகல வைபவங்களுக்கும் சிறந்த முறையிலும் தரமான வகையிலும் ஐஸ்கிறீம் வகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
**V.நாகேஸ் கிறீம்கவுஸ்**
முத்துமாரி அம்மன் கோயிலடி அல்வாய் வடக்கு, அல்வாய்.
T.P:0778285574

**R.M New Look Beuty parlour**
* Cake icing * Bridal make up and Stage makeup * Eye brow threading * Facial and bleaching
Thumpalai Road, Point pedro.
T.P: 021 5618147

**Divi Beuty Parlour**
Cake, Icing, Makeup, Facial
Pointpedro Road, Nelliyadi.
0775045785


ஆலய கட்டட வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால், ஆலய கட்டட நிதிக்கு அன்புடன் உதவிபுரிய விரும்புவோர் எங்களின் இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

பங்குதந்தை:
செயலாளர்: 021 205 6289
பொருளாளர்: 077 645 5258
www.facebook.com\st.Antonys

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் புனித அந்தோனியார் ஆலய பெருவிழா சிறப்பிதழ்

-13.06.2015-



## ஆலய வரலாறு

யாழ் மாவட்டத்தில் தொன்மை வாய்ந்த கிறீஸ்தவ கிராமங்களில் மாதகல் சரித்திரப் பெருமை வாய்ந்ததாகும். இந்தக் கிராமத்தில் 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தற்போது புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ள வளவில் புனித சவேரியார் ஆலயம் கொட்டிலாக அமைந்திருந்தது. புனித அந்தோனியாரின் வாழ்வால் தூண்டப்பட்டு அவரின் வேண்டுதலால் பல அற்புதங்களை அனுபவித்த மக்கள் புனித அந்தோனியாருக்கு ஆலயம் அமைக்க 1868 இல் அடிக்கல் நாட்டி 1888 இல் பூரணப்படுத்தினர். கொத்திக் நாகரீக முறைப்படியான கட்டடமாக இந்த ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

மாதகல்ப் பங்கின் முதல் ஆலயமான இது இறை வழிபாட்டிடமாக மட்டும் அல்லாமல் மாதகலில் கல்வியின் இதயமாய் இருக்கின்ற புனித சூசையப்பர் பாடசாலையின் தோற்றுவாயாகவும் இருந்துள்ளது. பல நன்மக்களின் வியர்வையாலும், பல இறையடியாரின் செபத்தாலும் இறைவன் தந்த இந்தத் தலம் சமய வேறுபாடின்றி மக்களுக்கு அருளின் ஊற்றிடமாக உள்ளது.



## ஆசிச்செய்தி

தந்தை மைந்தன் தூய ஆவியின் உத்தாரத்தில் தாழ்பணிந்து புத்வைப் புனிதரான புனித அந்தோனியாரின் திருநாளைக் கொண்டாடும் இன்றைய நாளிலே புதுமைகள் புரிந்து புத்தொளிவீச பாலகன் இயேசுவை கரங்களில் தாங்கியவருமான புனித அந்தோனியரின் அற்புதங்கள் பலகோடி. கோடி அற்புதர் புனித அந்தோனியார் என்றாலே சிறு குழந்தையும் சுட்டிக் காட்டுவது ''பதுவை அற்புதரை''. பலகோடி பக்தர்களை தன்னகத்தே கொண்டுவிளங்கும் இப் புனிதரின் இறையருள் மகத்தானது.

இறைவனின் சிறிய, எளிய மனிதர்களின் சின்னச் சின்ன தேவைளை பூர்த்தி செய்கின்ற புனிதரின் இரங்கும் மனம் உன்னதமானது. இவ்வாறு அவர் ஏழை, எளியர் மீது கொண்டிருந்த அன்பு, ஏழைகள் ஏழைகளாக இருக்க காரணமாயிருக்கும் அநீத செல்வர்கள் மட்டில் அறச்சினமாக திரும்புகிறது.

இப்புனிதர் இவ்வுலகில் வாழ்ந்த போது இறைவனில் எந்த அளவுக்கு நம்பிக்கை கொண்டு வாழ்ந்தாரோ அந்த அளவுக்கு இறைவனை மகிமைப்படுத்தியுள்ளார். ஆகவே தான் இறைவனும் இவரை சிறப்புடன் உலகமெங்கும் பக்தர்களைக் கொண்டு விளங்கும்படி இவ்வுலகில் மகிமைப்படுத்தியுள்ளார்.

தேவ அன்பின் பெயரால் எரிகின்ற தணலுமாய் மன்னிப்பு வாழ்வான சுவாலையுமாய், ஆண்டவரின் போதனைகளைக் கொண்டு மக்களின் உள்ளங்களை வென்று இயேசுவின் பால் மக்களை வழிநடத்தி அவர்களை மனம் திருப்புபவருமான புனித அந்தோனியாரின் வழிநடத்தல் என்றும் இருக்க ஆசிக்கின்றேன், சிறப்பாக மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்தின் 177ஆவது ஆண்டு நிறைவிலே புனிதரின் திருநாளைக் கொண்டாடும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புனிதரின் பரிந்துரையும், ஆசீரும் என்றும் உங்களோடு இருப்பதாக.

அருட்தந்தை கை.பி. கனிசியஸ் ராஜ்

**சிறப்பிதழ் அனுசரணை: சந்திரசேகரா குடும்பம், றாஜினி அலோசியஸ் குடும்பம்**

ivansuresh@bigpond.com



# வேலம்பிராய் கண்ணகை அம்மன் ஆலயம்

# அருள்மிகு சிவகாமி அம்மன் தேவஸ்தானம்

# மஹோற்சவ சிறப்பிதழ் - 2015

**அம்பிகை அடியார்களே !**

**சிவபூமியாம் இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத்தின் கிழக்கே வயல் சூழ்ந்த இடமாகிய வேலம்பிராய் எனும் ஊரில் அருள் பாலிக்கும் ஸ்ரீ கண்ணகி எனும் சிவகாமி அம்பாளுக்கு மன்மத வருடம் வைகாசி மாதம் 32ஆம் நாள் (15.06.2015) திங்கட்கிழமை கார்த்திகை நட்சத்திரமும் சதுர்த்தசி திதியும் கூடிய முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவம் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பிகையின் அருளைப் பெறுவீர்களாக!**

## கிரியா காலக் கிரமம்

| | | |
|---|---|---|
| 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை | கிராம சாந்தி வழிபாடு | மாலை - 5.00 மணி |
| 15.06.2015 திங்கட்கிழமை | கொடியேற்றம் | மு.ப - 10.30 மணி |
| 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை | வேட்டைத் திருவிழா | மாலை - 5 மணி |
| 22.06.2015 திங்கட்கிழமை | சப்பறத்திருவிழா | இரவு - 7 மணி |
| 23.06.2015 செவ்வாய்க்கிழமை | தேர்த்திருவிழா | மு.ப - 11 மணி |
| 24.06.2015 புதன்கிழமை | தீர்த்தத்திருவிழா | மு.ப - 10.30 மணி |
| 25.06.2015 வியாழக்கிழமை | வைரவர் சாந்தி வழிபாடு | |

**மஹோற்சவ குரு: சிவாகம கிரிஜா ஜோதி சிவஸ்ரீ இ.கஜராஜக் குருக்கள் (மணங்குணப் பிள்ளையார் கோயில்)**

**ஆலய குரு : பிரம்மஸ்ரீ கை.கணேசசர்மா**

**29.06.2015 மணவாளக் கோலம் - 1008 சங்காபிஷேகம் நடைபெற உள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.**

குறிப்பு: அடியார்கள் அனைவரும் கிரியைகளுக்கு வேண்டிய பால்,தயிர், இளநீர்,பூ, மாலை அனைத்தையும் வழங்கி அம்பாளின் திருவருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுகின்றோம்.

கோயிலாக்கண்டி, கைதடி. பரிபாலன சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்து லீக்குகளுடன் இன்று கலந்துரையாடல்

கரணவாய், ஜூன் 13

இலங்கை உதைபந்தாட்டச் சங்க உறுப்பினர்களுக்கும் கிளிநொச்சி, பருத்தித்துறை மற்றும் வடமராட்சி ஆகியவற்றின் உதைபந்தாட்ட லீக்கின் உறுப்பினர்கள், விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள் ஆகியோருக்கிடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் அனுரா டி சில்வா, செயலாளர் அன்ரனி பாலேந்திரா உட்பட 19 உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உதைபந்தாட்ட அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்றுள்ள கழகங்களின் தலைவர், செயலாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி உதைபந்தாட்டலீக்கின் செயலாளர் ரி.வரதராசா தெரிவித்துள்ளார். (ம–108)

## சின்மயாமிஷனின் பயிற்சிப் பட்டறை ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் இளைஞர் பிரிவாகிய சின்மய யுவகேந்திராவினரின் ஏற்பாட்டில் இந்த வருடம் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று கூடல் நிகழ்வு ( எதிர்கால நிர்மாணி பயிற்சிப் பட்டறைக்கான சின்மய சங்கமம் ) இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் மு.ப. 10 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை நடைபெறவுள்ளது. (ற)

## மருதடி ஆலய வழிபடுவோர் சங்க பெயர்ப்பட்டியல்

வலி.வடக்கு, ஜூன் 13

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்கத்தவர்களின் பெயர் பட்டியல் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்று வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 19ஆம் திகதி வரை வழிபடுவோர் சங்கத்தின் உறுப்பினர்களின் பெயர் பட்டியலை யாழ்.மாவட்ட செயலகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மற்றும் மருதடி ஆலய அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

பெயர்ப்பட்டியல் தொடர்பில் ஏதும் ஆட்சேபனைகள் மற்றும் பெயர் மாற்றங்கள், திருத்தங்கள் செய்ய வேண்டுமாக இருந்தால் அதனை எதிர்வரும் 19ஆம் திகதி வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–86)


### தேவை

வெள்ளவத்தையிலுள்ள விநியோக நிலையத்திற்கு (Distributor Agent) பிரதிநிதிகள் (sales Reps) உடனடியாகத் தேவை.

தொடர்பு: 077 825 1892

### வாகனம் விற்பனைக்கு

26 சிறி(Sri) பவர் ஸ்ரேரிங்(Power Steering) அசோக் லேலண்ட் லொறி விற்பனைக்குண்டு. நூறு வீதம் 100% நல்ல பாவனைக்குரியது. Ashok Leyland Lorry தொடர்பு: 077 825 1892

### தேவை

வங்கியில் பணிபுரியும் நால்வர் கொண்ட குடும்பத்திற்கு நல்லூர், திருநெல்வேலி பகுதிகளில் வாடகைக்கு வீடு தேவை.

தொடர்பு: 077 774 2590

### விஷேட விலைக்குறைப்பு

4R(10 படத்திற்கு மேல்) - 10.00
4R(100 படத்திற்கு மேல்) - 9.00
4R(300 படத்திற்கு மேல்) - 8.00
4R(100UP INKJET PRINT) - 6.00
12x30 NT ALBUM PRINT - 200.00
12X30 EMBOSSING PRINT -2000.00

MOORTHY DIGITAL
62/20, STANLY ROAD, JAFFNA.
JAFFNA ROAD, MANIPAY

### பிரத்தியேக வகுப்புக்கள்

தேசிய , மாவட்ட ரீதியாக சிறந்த பெறுபேறுகளை பெற வழிகாட்டும் ஆசிரியர்.
தரம் 06-11 வரை. (கணிதம், வரலாறு)
தொடர்பு : 075 248 0158


### கூறுவிலை கோரல்

இலங்கை மின்சார சபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில்

01. கழிவு டீசல் எண்ணெய் விற்பனை சம்பந்தமாகவும்
02. மின் நிலையத்தை சுத்திகரிப்பதற்கு சுத்திகரிப்பாளர் தேவை சம்பந்தமாகவும்.

கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கேள்விபத்திரங்கள் மற்றும் மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில்பெற்றுக்கொள்ள லாம்.

மேலும்

1. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் திகதி : 13.06.2015 இருந்து 25.06.2015 வரை.
2. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : 25.06.2015 பி.ப 2.00 மணி.
3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இடம் : யாழ். ஒளி மின் உற்பத்தி நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்
4. கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

பிரதம பொறியியலாளர்,
யாழ். ஒளி மின் உற்பத்தி நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

தொலைபேசி இல : 0212242400/ 0212242247

## பருத்தித்துறை நகராட்சிமன்றம் வேலைக்கான மீள் கேள்வி அறிவித்தல்

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் பருத்தித்துறை நகராட்சிமன்றத்தினால் கோரப்படுகின்றது.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 12.06.2015 ஆம் திகதி தொடக்கம் 23.06.2015 ஆம் திகதி பி.ப.3.00 மணிவரை.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 25.06.2015 ஆம் திகதி 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி 25.06.2015 பி.ப. 2.00 மணி
04. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்குமுன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல்வேண்டும்.
05. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் வேலையின் பெயரைக்குறிப்பிட்டு ஒரு பிரதியை "நகரபிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புவதுடன் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.
06. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு

மேலதிக விவரங்களை பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற்வரி | மீளளிக்கப் படாத NBT வரி | ஆகக் குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | வெளிச்சவீட்டு ஒழுங்கை கொங்கிறீற் றோட் அமைத்தல் கட்டம் -1 | 7500.00 | 750.50 | 82.50 | 15.00 | C9 |

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. 12.06.2015 (சி.17637) (45.3.7)

தேசமானிய சபா.ரவீந்திரன் JPUM
நகரபிதா, நகராட்சிமன்றம், பருத்தித்துறை.


### விற்பனைக்கு

- Sony (Japan) CD Player (வோக்மன்சைஸ்)
- காப்பெற் (நிலவிரிப்பு) புதியது
- பழைய மொடல் சிங்கர் தையல் மெசின்.

தொடர்பு : 077 824 7496

### வேலையாள்கள் தேவை

நல்லூரில் இயங்கும் பிரபல விடுதி ஒன்றுக்கு பின்வரும் ஆளணியினர் தேவைப்படுகின்றனர்.

1) சமையல் உதவியாளர்
2) Room boy
3) கன்ரீன் நடத்துநர்
4) வரவேற்பாளர்

விருப்பமுள்ளவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தினக்குரல் விருந்தினர் விடுதி, நல்லூர்.

தொடர்பு : 0212226476

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்.நகர் வேம்படி வீதி, (பாடசாலைக்கு அருகில்) முதலாம் குறுக்குத்தெருவில் 2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 320 3012 (57776) (4.3.7)

### காணி விற்பனைக்கு உண்டு

பெரிய கோயிலுக்கு அருகில் 1¼ பரப்பு 3 பக்கமும் மதிலால் சூழப்பட்ட வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 320 3012


### Vacancies at YMCA Jaffna

The Jaffna YMCA is a Christian, community oriented organization which unites young men and boys together for the development of their physical, social, intellectual, economical and spiritual manhood. The Jaffna YMCA is inviting applications for the post of Liaison Officer and Steward.

1. **Post: Liaison Officer (Programme coordinator), Salary: Rs.20,000/=** (An allowance of Rs.3,000/= will be paid on confirmation).

**Expectations:**

- The applicant should be able to assist the General Secretary in day to day activities of the YMCA.
- Plan and organize, Social events, Seminars, Competitions, Preschool Activities, Cultural Programmes, Relief work and supervising the hostel activities.
- Provide support to organize Meetings, Comfortable working with Youth, Children Club of the YMCA.
- Strong interpersonal and communication skills, ability to work independently, Flexible, adaptable and acceptable to the Management.
- Qualified in English Language both in writing & speaking skills.
- Working knowledge of Microsoft Office (Word, Excel, Power Point and MS outlook) is essential.
- Minimum two years of related experience. Willing to work long hours.
- Age between 22 and 35 years.
- Preferably residing within 10 Km from YMCA.

2. **Post: Steward, Salary: Rs.10,100/=** (An allowance of Rs.3000/= will be paid on confirmation).

- Preferably residing within 10 Km from YMCA.

Please send a cover letter stating why you are suited for this job along with a complete bio-data indicating Tele No, E-mail and the contact numbers of the two referees on or before 20th June 2015 to the undersigned. **Only shortlisted candidates will be notified.**

General Secretary,
109, Kandy Road,
Jaffna

(சி.17628) (45.3.7)


### மணமக்கள் தேவை

- 87 இல் பிறந்த 8இல் செவ்வாய் 27½ பாவமுடைய ஆஸ்திரேலிய பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு BSc இற்கு மேல் மணமகன் தேவை.
- 82 இல் பிறந்த 8இல் செவ்வாய் 16 பாவமுடைய சுவிஸ்பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகன் தேவை.
- 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய MSc இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 18 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 42 பாவமுடைய சொந்த நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.(சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.)
- 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 26½ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப் படமாட்டாது)
- 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 36¼ பாவமுடைய அமெரிக்க பிரஜாஉரிமைபெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச் சோலையடி, முடமாவடி.
077 607 0862

### யாழ் சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.

தொடர்பு : 077 614 6434 (60930) (3.7)

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும், மிகக்குறைந்த விலையில் சுத்தம் செய்யப்பட்டது 450/= 10 Kg இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 430/= மட்டும்.

விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை, (60538)
தொ.பே. 077 868 9500 (45.3.7)

### ஆடுகள் விற்பனைக்குண்டு

உயர்ரக சணல் ஆடு குட்டிகளுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:குலேந்திரன் (பொலிஸார்வீடு)
44/62, பருத்தியோலை, கந்தரோடை.
0212240602

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி , சுத்தம் செய்தது 1kg - 450 /=

தொடர்பு - தாசன் பாம், 158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (60924) (3.7)

### கடைக்கு ஆள் தேவை

யாழ் நகரில் இரும்புக்கடைக்கு ஆள்கள் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 780 5950 (60936)(9,3)

### சமையல் ஆள்கள் தேவை

பருத்தித்துறையிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு பிறைற்றைஸ் மற்றும் சைவ உணவு வகைகளைத் தயாரிப்பதற்கு சமையல் ஆள்கள் தேவை.

(59741)(9,3) தொடர்பு: 071 083 1235

### காணி விற்பனைக்கு

தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் ஒழுங்கையில் 32 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 731 6139

### சீரடி சாய்பாபா ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்

**சாய்ராம் சாஸ்திரிகள்**

ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளி நாட்டு பிரச்சினை, குழந்தைப் பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

காலை 9.00 மணி– மாலை 6.00 மணிவரை
076 809 7406
Land Mark Yaal inn Hotel
இல.46/1, கல்லூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக) (59429)
நீராவியடி, யாழ்ப்பாணம். (4.3.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
06
09
1936

மறைவு
12
05
2015

## திருமதி மனோன்மணி சேனாதிராசா

(வேலணை - 1)

வேலணை, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி மனோன் மணி சேனாதிராசா அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத் திற்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டவர்க ளுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (13.06.2015) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல - 10,
இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



மண்ணில்
29
10
1947

விண்ணில்
11
06
2015

## திருமதி கமலாதேவி பாலசுப்பிரமணியம்

யாழ்ப்பாணம், உடுவில் தெற்கைப் (கண்ணன் கடை) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி பாலசுப்பிரமணியம் 11.06. 2015 வியாழக் கிழமை காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான ஐயாத்துரை-மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும் பத்மநாதன், குகநாதன்,நாகேஸ்வரி,வசந்தாதேவி காலஞ்சென்றவர்களான கணநாதன் ,தேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ருஷானி(சுவிஸ்),பிரசன்னா (சுவிஸ்),யசோதா (பிரான்ஸ்),பிரசாந்தன்(உடுவில்), தர்சினி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் பிரசாந்தினி,ஜெயந்தினி(கனடா) ஆகியோரின் பெரியம்மாவும் ஞானசம்பந்தன், நகுலன், றைசி, துசாகரன், சிவகுமார், சபேசன் ஆகியோரின் மாமியாரும் றக்சன், நிக்ஷன், ரிஷான், ரிசானா, லிசானா, விதுஷனா, ஆத்மிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(14.06.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணி அளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை,உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
T.P: 077 [illegible] 9991

உடுவில் தெற்கு
(கண்ணன் கடையடி)

# மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை திருநாவுக்கரசு(திருநா)

(பழையமாணவர் - யாழ் மத்திய கல்லூரி, உரிமையாளர் - சின்னையாப்பிள்ளை அன்சன்ஸ் கொழும்பு)



தோற்றம்
20
04
1948

மறைவு
07
06
2015

சாவகச்சேரி கோயில்குடியிருப்பு கச்சாய்வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவையும், கொழும்பையும் வதிவிடங்களாகவும் கொண்டிருந்தவரும் சென்னையில்(அடையாறு) வாழ்ந்து வந்தவருமாகிய வேலாயுதபிள்ளை திருநாவுக்கரசு (திருநா) 07.06.2015 அன்று சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேல்டாயுதபிள்ளை - கமலாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும் குமாரசாமி(மாத்தையா) - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுந்தரகலா அவர்களின் அன்புக் கணவரும், திருச்செந்தூர்(கனடா) அவர்களின் பாச மிகு தாந்தையும் சொர்ணகாந்தா, செல்வகாந்தா, திருக்குமார், மகேந்திரன், நிர்மலா ஆகி யோரின் பாசமிகு சகோதரரும் தஷானி, திருமால் முரளிகிருஷ்னா, நரேந்திரன், மயூ ரன், அரவிந்தன், அர்ச்சனா, கீர்த்தனா, கீர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் குமாரதாஸ், யோக தாஸ், சூரியகலா, கந்தசாமி, பஞ்சாட்சரம், ஜெயலஷ்மி, தயாநிதி, ராமநாதன் ஆகியோ ரின் அன்பு மைத்துனரும்.கார்த்திக், சங்கவி, விஷ்ணுகன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை சென்னை அடையாரில் உள்ள அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் பி.ப 03.00 மணியளவில் பெசன்ட்நகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்

திருக்குமார் - கனடா +14162892279,
மகேந்திரன் - இந்தியா +914424421697,
நாராயரன் - இலங்கை +94777788687,
நிர்மலா - இந்தியா +914424465507

வதிவிடம்:
No.4, Rs Compound,
Besant Avenue, Adyar,
Chennai-20

# மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

## வைரவப்பிள்ளை காலிங்கராஜா



தோற்றம் 15.10.1942 மறைவு 12.05.2015

இணுவில் ஸ்ரீகாலிங்கன் படமாளிகைப் பங்காளரும் காலஞ்சென்ற காலிங்கர் வைரவப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புத்திரருமான காலிங்கராஜா கடந்த 12.05.2015 இறைவனடி சேர்ந்தார்.

இவர் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரத்குமார் (ஜின் சன்) மற்றும் சபிதா (லண்டன்), சுஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதர்(லண்டன்), பாலகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனன்யா (லண்டன்), அனுஸ்கா (சுவிஸ்) ,தனுஷியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் லோகநாதன், ராஜேஸ்வரி பொன்னம்பலம் (கனடா), ரகுநாதன்(கனடா), கேசவமூர்த்தி (கனடா), சிதம்பரேஸ்வரி துரைசிங்கம் (ஜேர்மனி), லங்காதேவி விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 13.05.2015 புதன்கிழமை இணுவிலுள்ள அன்னாரின் பூர்வீக இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் இணுவிலில் - கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த மரணச்சடங்கில் கலந்து கொண்டு உதவி, ஒத்தாசைகள் செய்த மற்றும் அனுதாபங்கள் கவலைகளைத் தெரிவித்துக் கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், ஏனையோர் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்

## டாக்டர் சிதம்பரப்பிள்ளை குமாரலிங்கம்



மீசாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மற்றும் ஹொரவப் பொத்தானையை வசிப்பிட மாகவும் கொண்ட டாக்டர் சிதம்பரப்பிள்ளை குமாரலிங்கம் 10.06.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அதிபர் சிதம்பரப்பிள்ளை - ஆசிரியை உமையம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான OA நடராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் கலைமகள், (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், கலைக்குமாரி (லண்டன்), சுரேஸ்குமார் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற டாக்டர் கணேசலிங்கம் மற்றும் நடேசமூர்த்தி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணசீலன் (லண்டன்) மற்றும் கௌரி(இலங்கை) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, கதிர்காமநாதன், பாலேந்திரா மற்றும் ஜெயசோதி, இராசேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரவீன், பவித்திரா (லண்டன்), ஜஸ்மினி, சுவென்ஜா, தர்மினி(ஜேர்மனி), பவித்திரன், பிரியா, பர்மிலா, கவிப்பிரியா, டிலாஷன் ஆகியோரின் பேரனும், ஜெயந்தன் (ஜேர்மனி), தர்சினி, நர்மதன் (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும், நிகேதனன், கீதா, கவிதா, வனிதா மற்றும் தனஞ்செயன்(கனடா),ஜஸ்மினா, சுவேன்ஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை மீசாலையில் இருக்கும் அவரின் இல்லத்தில் மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ஹொரவப் பொத்தானையைச் சேர்ந்த அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 077 170 1095
[illegible] (c.17643)(3,6.9)

தகவல்: குடும்பத்தினர்

## வாரிவன நாத சிவன் ஆலய பெருந்திருவிழா

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரி சந்திரசேகர வாரி வன நாத சிவன் ஆலய பெருந் திருவிழா நாளை மறுதினம் 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை தேர்த்திருவிழா வும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். பெருந் திருவிழாக் கிரியைகள் கிரியாஜோதி சிவஸ்ரீ தேவபால பிரசன்னாக் குருக்கள் தலைமை யில் நடைபெறும். (ந-9)

## பேரம்பல வைரவர் ஆலயப் பொங்கல் விழாவும் வேள்வியும்

தெல்லிப்பழை துர்க்காபுரம் எட்டாம் கட்டை பேரம்பல வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும் வேள்வி யும் இன்று சனிக்கிழமை அதி காலையில் நடைபெறவுள்ளது. அதிகாலையில் நடைபெறும் பொங்கள் படையல்களைத் தொடர்ந்து கடாக்கள், சேவல் கள் பலியிடும் நிகழ்வும் இடம் பெறவுள்ளன. குறிப் பாக வேள்வி சம்பந்த மாக சுகாதார வைத் தியதிகாரியின் பணிப்புரைகள் மற்றும் நீதிமன்றக் கட் டளைகளுக்கு அமை வாக இவை நடை பெறவுள்ளன.

இந்த வேள்வியில் வெட் டப்படும் கடாக்களுக் கான உரிமைச் சான்றி தழ்களை கடாக்களை கொண்டு வருபவர்கள் அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்களிடம் பெற்று வரும்படி ஆலய நிர் வாகத்தினர் சுகாதார வைத்தியதிகாரியின் பணிப்புரைக்கு அமை வாக அறிவித்துள்ளார் கள். (ந-86)

## குப்பை கொட்டுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

காத்தான்குடி, ஜூன் 13

காத்தான்குடி நகர சபை பிரிவிலுள்ள றிஸ்வி நகர் கடற்கரையோரம் குப்பைகளை கொட்டக் கூடாது என்று தெரி வித்து அந்தப் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

காத்தான்குடி நகர சபையினர் நேற்று முன்தினம் மாலை றிஸ்வி நகர் பிரதேசத் தின் கடற்கரை யோரம் குப்பைகளை கொட் டச் சென்றுள்ளனர். அப்போது, மக்கள் ஒன்று திரண்டு குறித்த இடத்தில் குப்பைகளை கொட்டக் கூடாது என தெரிவித்து, குப்பை களை ஏற்றி வந்த வாக னத்தை மறித்து ஆர்ப் பாட்டம் நடத்தியுள் ளனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இண்டர்நெட் வேகம் குறைவாக இருந்தாலும் பேஸ்புக்கைத் தடையின்றிப் பயன்படுத்தலாம்!



இண்டர்நெட் வேகம் குறைவாக இருக்கும் நேரத்திலும் பேஸ்புக்கைத் தடையின்றிப் பயன்படுத்த வசதியாக லைட் என்ற அன்ட்ரோய்ட் அப்ஸ் ஐ வெளியிட்டிருக்கிறது பேஸ்புக் நிறுவனம். முதற்கட்டமாக ஆசியாவில் மட்டும் வெளியிடப்பட்டுள்ள இந்த அப்ஸ், விரைவில் ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் வெளியிடப்பட உள்ளது. இதுபற்றி பேஸ்புக் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வளர்ந்த நாடுகளிலும் கூட பல்வேறு இடங்களில் நெட்வேர்க் வேகமாக இருப்பதில்லை. இதனால், பேஸ்புக்கின் அனைத்து வசதிகளையும் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. அதற்குத் தீர்வாக இந்த பேஸ்புக் லைட் அப்ஸ் இருக்கும். இந்த அப்ஸ் 1 எம்.பி.க்கும் குறைவான அளவே கொண்டது. இதை எளிதாகத் தரவிறக்கி மொபைல்களில் இன்ஸ்டால் செய்து கொள்ளலாம். மிகக் குறைவான இண்டர்நெட் வேகத்தில் பேஸ்புக்கின் நியூஸ் பீட், ஸ்டேட்டஸ் அப்பேட், போட்டோ மற்றும் நோட்டிபிக்கேஷன்களை எளிதாக எந்தத் தடையுமின்றிப் பார்க்க முடியும் என தெரிவித்துள்ளது. இந்த அப்ஸை அன்ட்ரோய்ட் மொபைல்களில் மட்டுமே பயன்படுத்த முடியும். பிளே ஸ்டோரில் இருந்து இதனை டவுன்லோட் செய்து கொள்ளலாம்.

# செல்பி எடுப்பதற்கு புதிய அப்ளிகேசன்

செல்பி மோகம் தற்போது நகரம் முதல் கிராமம் வரை அதிகரித்து வருகின்றது. மக்களிடையே இருக்கின்ற இந்த மோகத்தை வைத்து பல செல்போன் நிறுவனங்கள் செல்பிகாகவே செல்போன்களை தயாரிக்கின்றனர். மேலும் செல்பிக்காகவே பல அப்ளிகேசன் உருவாக்கிவருகின்ற நிலையில் தற்போது எளிதாக செல்பி எடுக்க புதிய அப்ளிகேசன் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ட்ரிகர்டிராப் ஷெல்பி(Triggertrap) என்ற புதிய அப்ளிகேசன், ஒலி மூலமாக செல்போன் கமராவை இயக்குகிறது இது. தற்போது ஐஓஎஸ் (IOS) ஸ்டோரில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ள லாம்.



# இணையத் தளம் வழியாக கைபேசியை சார்ஜ் செய்யலாம்



வை–ஃபை இணையத் தளம் வழியாக கைபேசியை சார்ஜ் செய்யும் புதிய தொழில்நுட்பம் குறித்து வொஷிங்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். 30 அடி தூரம் வரையில் காற்றலை வழியாக வயர்கள் ஏதுமின்றி வை–ஃபை இணையதளம் மூலம் கைபேசிகளை சார்ஜ் செய்யும் power over WiFi என்ற நவீன தொழில்நுட்பம் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். இந்தத் தொழில்நுட்பமானது வழக்கமாக வை–ஃபை ரூட்டர்களில் இருந்து அனுப்பப்படும் ரேடியோ பிரிக்வன்ஸி பவரை பயன்பாட்டுக்கான நேரடி மின்சாரமாக (usable direct current (DC) power) மாற்றுவதன் மூலம் மொபைலுக்கு சார்ஜை ஏற்றுகிறது.

ஆனால், தற்போதுள்ள வை–ஃபை தொழில்நுட்பத்தைக் காட்டிலும் இதற்கு சற்று மேம்படுத்தப்பட்ட வன்பொருள் தேவை. ஒரு ரூட்டரிலிருந்து எவ்வளவு மின்சாரத்தை அவுட்புட்டாக எடுக்க முடியும் என்பதைக் கண்டறிய புதிய சாப்ட்வேர் ஒன்றும் உருவாக்கப்பட்டு ஆராய்ச்சி நடந்து வருகிறது. இந்தத் தொழில்நுட்பத்தை ஏற்கனவே கமராவில் 17 அடி தூரத்தில் இருந்து ஆராய்ச்சியாளர்கள் சோதனை செய்து பார்த்துள்ளனர். அதிகபட்சமாக 28 அடி தூரத்தில் டெம்பரேச்சர் சென்சார்கள் பட்டரியை சார்ஜ் செய்வது உறுதியாகியுள்ளது. அதேநேரத்தில், சார்ஜ் ஏறும்போது வை–ஃபை இணையத் தள வேகத்திலும் எவ்வித தடங்கலும் ஏற்படவில்லை. இதை யடுத்து, ஆராய்ச்சியாளர்கள் வெகுவிரைவில் இந்தத் தொழில் நுட்பத்தை அன்றாட பயன்பாட்டுக்குக் கொண்டு வர முயற்சி செய்து வருகின்றனர்.

# பாடசாலை மைதானத்துக்குரிய காணியை மீட்டுத் தரக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்




அம்பாறை, ஜுன் 13

அம்பாறை, பெரிய நீலாவணை விஷ்ணு மகா வித்தியாலத்துக்கு சொந்தமான மைதானக் காணியை மீட்டுத்தருமாறு கோரி அவ்வித்தியாலத்துக்கு முன்பாக மாணவர்களும் பெற்றோரும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.

இந்தக் காணியை தனி நபர்களும் சில கழகங்களும் ஆக்கிரமித்துள்ளன. பெரிய நீலாவணை பிரதேசத்திலுள்ள ஒரேயொரு மைதானம் இதுவே. விளையாட்டுத்துறையில் திறமை காட்டக்கூடிய எங்களது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி இம்மைதானத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீட்டுத்தர வேண்டுமென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரினர்.

இதன்போது, பிரதேச செயலாளரிடம் கையளிப்பதற்கான மனுவை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கல்முனை பொலிஸாரிடம் வழங்கினர். (ற)

# கிழக்கு முதலமைச்சரின் வாகனத் தொடரணி விபத்து

## 6மாத குழந்தை உட்பட நால்வர் படுகாயம்





மட்டக்களப்பு, ஜுன் 13

கிழக்கு மாகாண முதலமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகள் பயணம் செய்த வாகனத் தொடரணி நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு ரெதீதென்ன என்ற இடத்தில் விபத்துக்குள்ளானதில் 4 பேர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு, பொலொன்னறுவை மாவட்டங்களின் எல்லைக் கிராமமான ரெதீதென்னையில் நடந்த சுய தொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்பு உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்புகையில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

வாகனத் தொடரணியில் பாதுகாப்பு அதிகாரிகள் பயணம் செய்தவாகனம் மழைத்தூறல் காரணமாக வீதியிலிருந்து வழுக்கி அருகிலிருந்த பஸ் தரிப்பிடத்தில் மோதியுள்ளது. அந்தச் சமயம் பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்த தாயொருவரும் அவரது மகளும் விபத்தில் காயமடைந்துள்ளனர்.

புணாணைக் கிராமத்தைச் சேர்ந்த சாமித்தம்பி சரோஜா (வயது 25) மற்றும் அவரது 6 மாதக் கைக்குழந்தையுமே படுகாயமடைந்துள்ளனர்.

அதேவேளை பாதுகாப்பு அதிகாரிகளின் வாகனத்தில் பயணம் செய்த கிழக்கு மாகாண முதலமைச்சரின் ஊடகப் பிரிவு இணைப்பாளர் எஸ்.எல்.முனாஸ் (வயது 45) மற்றும் ஊடகப் பிரிவு படப்பிடிப்பாளர் ஏ.எம்.மஹ்சூம் (வயது 29) ஆகியோரும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர் அனிஸ்டஸ் ஜெயராஜா தெரிவித்தார்.

இச் சம்பவம் குறித்து வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ற)

# முன்பள்ளி மாணவர்களின் சிறுவர் சந்தை

வலி.வடக்கு, ஜுன் 13

தரம் 5 மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலையப் பள்ளியில் சிறுவர் சந்தை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தனும், சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஹரிகரன், சம்பத் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் கே.சுரேஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சிறுவர் சந்தையில் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்துகொண்டு பொருள்களை வாங்கிச் சென்றனர். (ந–86)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## நேபாளத்தில் நிலச்சரிவு:55 பேர் சாவு

காத்மண்டு,ஜூன் 13
நேபாளத்தில் கனமழை காரணமாக 6 கிராமங்களில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அதில் 15 பேர் இறந்திருக்கலாம் என முதலில் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நிலச்சரிவால் 55 பேர் உயிரிழந்திருப்பதாகவும், 40 பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த நாட்டின் டப்லேஜுங் மாவட்டத்தில் 6 கிராமங்களில் இரவு மக்கள் உறங்கிக்கொண்டிருந்த நிலையில், திடீரென நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அப்போது வீடுகளில் உறங்கிகொண்டிருந்த மக்களில் 55 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை 21 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியைச் சேர்ந்த பலரைக் காணவில்லை. எனவே உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.
இராணுவம் மற்றும் பொலிஸார் மீட்புப் பணியில் ஈடுப்பட்டு வருகின்றனர். ஆனால் அந்தப்பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் கனமழை மற்றும் வெள்ளத்தால் மீட்புப் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
நேபாளத்தில் ஏற்பட்ட அண்மைய நிலநடுக்கங்களால் அங்கு புவியியல் தன்மை மாறுபட்டுள்ளது. எனவே இந்தப் பருவமழைக் காலத்தில் நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு சம்பவங்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கங்களால் கடும் சேதத்தை சந்தித்துள்ள நேபாளத்தில், தற்போது நிலச்சரிவாலும் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டிருப்பது அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# 20 தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்த இந்தியா திட்டம்

புதுடில்லி,ஜூன் 13
மியன்மார் எல்லையில் உள்ள மேலும் 20 தீவிரவாத முகாம்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்த இந்தியா திட்டம் வகுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
அந்தத் தாக்குதல் திட்டத்தை மியன்மார் நாட்டுடன் இணைந்து கூட்டாகச் செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அது குறித்து விரிவாக ஆலோசித்து முடிவு எடுக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மியன்மார் செல்லவுள்ளார். இதனிடையே மியன்மார் நாட்டு எல்லைக்குள் புகுந்து தீவிரவாத முகாம்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்திய இந்திய இராணுவம் அதே போன்று தாக்குதலை பாகிஸ்தான் தீவிரவாதிகள் மீதும் நடத்தும் என பகிரங்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் இந்திய மத்திய அமைச்சர் ராஜ்யவர்தன் ரத்தோர், மியான்மாரில் தீவிரவாத குழுக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இந்தியா மீது மறைமுகமாக தாக்குதல் தொடுக்கும் பாகிஸ்தான் உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும். தேவைப்படும் நேரத்தில் அது போன்ற தாக்குதல் நடத்தப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜிஜுவும் அதே



கருத்தை முன்வைத்துள்ளார். நாட்டின் பாதுகாப்புக்காக எத்தகைய நடவடிக்கையையும் மத்திய அரசு எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் எச்சரிக்கையால் அதிர்ச்சியடைந்துள்ள பாகிஸ்தான் தாங்கள் ஒன்றும் மியன்மார் கிடையாது என்றும், எந்த நாட்டுக்கும் பதிலடி கொடுக்கும் திறன் தங்களுக்கு இருப்பதாகவும் கூறியுள்ளது.
இது தொடர்பில் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சவுத்ரி நிசார் அலி தெரிவிக்கும் போது, இந்தியா பகல் கனவு காண்பதாகவும் அதனை நிறுத்திக் கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். இதற்கிடையே மியன்மார் பகுதியில் இந்திய இராணுவத்தின் தாக்குதலை அசாம் முதலமைச்சர் தருண் கோகய் வரவேற்றுள்ளார்.
மணிப்பூரில் கடந்த வாரம் இராணுவ வாகனங்களைக் குறிவைத்து நாகாலாந்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவங்களின் போது 18 வீரர்கள் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.
இரு இடங்களிலும் தாக்குதல் நடத்திய நாகாலாந்து வடகிழக்கு மாநில தீவிரவாதிகள், மியன்மா எல்லைப்பகுதியில் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து இந்திய இராணுவத் தலைமைப் படையினர் அங்கு அதிரடித் தாக்குதல் நடத்தியது. அதில் 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஜெயலலிதாவை விமர்சிப்பு இருவர் கைது

சென்னை,ஜூன் 13
சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டதை விமர்சிக்கும் விதமாக சுவரொட்டி ஒட்டிய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
சொத்துக்குவிப்பு வழக்கில், சிறப்பு நீதிமன்றத்தால் சிறைத் தண்டனைக்குள்ளான தமிழக முதல்வர் ஜெயலலிதா, கர்நாடக உயர் நீதிமன்றத்தால் கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்டார். இதனைச் சிலர் வரவேற்றனர். அதேசமயம் சிலர் எதிர்த்துக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
இந்த நிலையில் ஜெயலலிதாவின் விடுதலையை விமர்சனம் செய்து கோவை, சாய் பாபா காலனிப் ப்குதியில், சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அந்த சுவரொட்டிகளைப் பார்த்ததும், அதை ஒட்டியவர்களை பொலிஸார் தீவிரமாகத் தேடத் தொடங்கினர்.
இது தொடர்பாக, ஜனநாயக தொழிலாளர் முன்னணி அமைப்பின் மாநில துணைத் தலைவர் ராமசாமி மற்றும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி தலைவர் தீலீபன் ஆகியோரை, பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# மெகி நூடில்ஸை சோதிக்கிறது அமெரிக்கா

வொஷிங்டன்,ஜூன் 13
இந்தியாவில் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மெகி நூடில்ஸில் கூடுதலாக காரீயம் மற்றும் வேதிப் பொருள்கள் கலந்து இருப்பது பற்றி சோதனை செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது. அந்த நாட்டின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு இந்தச் சோதனையை மேற்கொள்ள இருப்பதாகத்தகவல் வெளியாகியுள்ளது.
இது பற்றி நெஸ்லே நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளதாவது: அமெரிக்காவில் மெகி நூடில்ஸ் உற்பத்தி அல்லது நேரடி விற்பனையில் நாங்கள் ஈடுப்படவில்லை. கடைகள் மூன்றாம் நபர் மூலமாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்கின்றன எனத் தெரிவித்துள்ளார். நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்பான மெகிநூடுல்ஸ் துரிதஉணவு பொட்டலங்கள் இந்தியாவின் சகல பகுதிகளிலும் பர பரப்புடன் விற்பனையாகின. அதில் அனுமதிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக காரீயம் மற்றும் வேதிப் பொருளகள் கலந்து இருப்பதாக முறைப்பாடு தெரிவிக்




கப்பட்டுள்ளது.
இதையடுத்து மாநில அரசுகள் மெகி நூடுல்ஸ் பொட்டலங்களை கைப்பற்றி ஆய்வு செய்தன. அதில் அதிக அளவு காரீயம் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டதால் மெகிக்கு பல்வேறு மாநில அரசுகள் தடை விதித்தன. பின்னர் மத்திய அரசின் உணவுத் தர நிர்ணய ஆணையம் நாடு முழுவதும் மெகிக்கு தடை விதித்தது. அதனால் மெகி விற்பனை அடியோடு தடைப்பட்டதுடன் உற்பத்தியும் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இந்திய அரசியல்வாதிகளைக் குற்றஞ்சாட்டும் பாகிஸ்தான்

இஸ்லாமாபாத்,ஜூன்13
இந்திய அரசியல்வாதிகள் ஆத்திரம் மற்றும் விரோதத்தை ஏற்படுத்தும் வகையில் பேசிவருவதாக கூறியுள்ள பாகிஸ்தான், அதனைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ள குறித்த தீர்மானத்தில் பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தின் போது, பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்த கருத்து வெறுப்பைப் பரப்புவதாகவும், இரு நாடுகளுக்கு இடையிலான உறவுவைச் சீர்குலைப்பதாகவும் உள்ளது எனக் கூறப் பட்டுள்ளது.
மேலும் மியன்மார் தாக்குதல் தொடர்பில் மத்திய இணையமைச்சர் ராஜ்யவரதன் ரத்தோரின் கருத்து வெளிப்பாடு, தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் அணைத்து அண்டை நாடுகளுக்கும் ஒரு எச்சரிக்கை என்ற கருத்துக்கும் தீர்மானத்தில் கண்டனம் தெரிவிக்கப்படுள்ளது.
இந்திய அரசியல்வாதிகளின் ஆத்திரம் மற்றும் விரோதத்தை ஏற்படுத்தும் பேச்சுகள், இந்தியாவின் மேலாதிக்க மனப்போக்கையே காட்டுவதாகவும், இது போன்ற எதிர்மறையான அறிக்கைகளால் பிராந்திய அமைதி, இறையாண்மை மற்றும் ஸ்திரத்தன்மை என்பன பாதிப்படையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பாதுகாப்புத் தலைவருக்கு ஆயுள் தண்டனை

பீஜிங், ஜூன் 13
ஊழல் வழக்கில் சீனாவின் முன்னாள் பாதுகாப்புத் தலைவர் ஜோ யோங்காங்குக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
73 வயதான ஜோ யோகாங், சீனாவின் முன்னாள் ஜனாதிபதி ஹூ ஜிந்தோவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்பட்டவர். அவரது ஆட்சிக் காலத்தில் அதி



காரமிக்க தலைவராகவும் வலம் வந்த ஜோ மீது அரச இரகசியங்களை கசிய விட்டமை, ஊழல் குற்றச்சாட்டு மற்றும் அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக குற்றச் சாட்டுகள் தொடுக்கப்பட்டன. இந்த வழக்கு பீஜிங்கில் இருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தியான்ஜின் மக்கள் நீதிமன்றத்தில் நடைபெற்றது. தன் மீதான குற்றத்தை ஜோ ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சீனாவில் அண்மைக் காலங்களில் போசிலாவுக்கு அடுத்த படியாக ஆயுள் தண்டனை விதிக்கப்படும் பெரிய தலைவர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல நடிகர் கிறிஸ்டோபர் லீ சாவு

லண்டன்,ஜூன் 13
பிரிட்டனின் பிரபல நடிகரான கிறிஸ்டொபர் லீ கடந்த 7 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.



இவர் டிராகுலா படத்தில் டிராகுலாவாக நடித்து அனைவரையும் தனது நடிப்பின் மூலம் பயமடையச் செய்தார். பின்னர் ஏராளமான திகில் படங்களில் நடித்து திகில் படங்களின் மன்னன் என்ற பெயரைப் பெற்றார்.
அதே வேளையில் லார்ட் ஒப் ரிங்க்ஸ், ஸ்டார் வார்ஸ், ஜேம்ஸ் பொண்ட் போன்ற படங்களிலும் நடித்து ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தவர். 1948 ஆண்டு திரைப் படத்துறைக்கு வந்த லீ கிட்டத் தட்ட ஏழு தசாப்த காலத்தில் 150 படங்களில் நடித்துள்ளார்.
கடந்த சில நாள்களாகவே இதயத்தில் கோளாறு மற்றும் மூச்சுவிடுவதில் சிரமம் போன்றவற்றால் அவதிப்பட்டு வந்துள்ளார்.
இந்த நிலையில் லண்டனின் செல்சியா மற்றும் வெஸ்ட்மினிஸ்டர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் கடந்த 7ஆம் திகதி சாவடைந்தார். எனினும் 4 நாள்களுக்குப் பின்னரே இந்தத் தகவல் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இறந்து போன லீக்கு அவருடன் நடித்த நடிகர்களும் ரசிகர்களும் சமூக வலைத்தளங்களில் அஞ்சலி செலுத்திவருகின்றனர். (ஐ)

# ஆயுதங்களை அதிகரிக்கும் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பு



மெல்போர்ன்,ஜூன் 13
ஈராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளைக் கைப்பற்றித் தனிநாடு அமைத்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆயுதங்களை பெருக்குவதே தங்களது அடுத்த நோக்கம் என தங்களது பத்திரிகையில் தெரிவித்துள்ளனர்.
இந்த நிலையில் ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கடந்த வாரம் பெர்த் நகரில் நடைபெற்ற நிகழ்வொன்றில், ஈராக் மற்றும் சிரியாவின் பெரும் பகுதிகளை கைப்பற்றியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் கதிரியக்கத்தை ஏற்படுத்தும் பொருள்களை பறிமுதல் செய்து தங்கள் வசம் வைத்துள்ளனர். அவற்றை வைத்தியசாலைகள் மற்றும் ஆராய்ச்சிக்கூடங்களில் இருந்து எடுத்துள்ளனர். அவற்றை வைத்து பேரழிவை உண்டாக்கும் அணு குண்டு தயாரிக்க முடியும்.
ஏற்கனவே பாகிஸ்தானில் இருந்து அணுகுண்டு கடத்தியுள்ளனர். அதன் மூலம் இன்னும் ஒரு வருடத்தில் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர். அதனைநேட்டோ படையினர் தங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இது தவிர அவர்கள் விஷ வாயுக் குண்டுகளையும் தயாரிக்கக் கூடும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# தற்கொலைப்படைத் தாக்குதல் பொலிஸார் உட்பட 18 பேர் சாவு



பாக்தாத்,ஜூன் 13
ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் இரு நாடுகளிலும் தொடர்ந்து நாச வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.
தலைநகர் பாக்தாத்தின் வடக்கு பகுதியில் சூல்லா மாவட்டத்தில் நேற்று முன்தினம் பொலிஸ் சோதனைச்சாவடி மீது வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட காருடன் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் 3 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர். பொது மக்கள் 22 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.
சிறிது நேரம் கழித்து அன்பார் மாகாணம் பலூஜா நகரின் கிழக்கு பகுதியில் உள்ள கார்மா என்ற இடத்தில் உள்ள பொலிஸ் முகாமைக் குறிவைத்து மற்றொரு தற்கொலைப் படைத் தாக்குதலை தீவிரவாதியொருவர் தாக் குதல் நடத்தினார். அதில் 9 பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்ததுடன் 10 பேர் படுகாயம் அடைந்தனர். (ஐ)

# ஐ.நா. அமைதிப்படையின் அட்டூழியம்

ஜெனிவா,ஜூன் 13
ஹைத்தியில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த ஐ.நா அமைதிப் படை வீரர்கள் அந்த நாட்டின் பெண்களிடம் பாலியல் உறவுக்கு ஒப்புக்கொண்டால் மட்டுமே உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வோம் எனக் கட்டாயப்படுத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



வட அமெரிக்காவில் உள்ள ஹைத்தியில் ஏழை மக்களுக்கு தேவையான உதவிகளை கடந்த 2004ஆம் ஆண்டில் இருந்து ஐ.நா. அமைதிப் படைவீரர்கள்வழங்கி வருகின்றனர்.
இந்தநிலையில்அமைதிக் குழு வீரர்கள் பண்டமாற்று உறவில் ஈடுபட்டதை ஐ.நா. கண்காணிப்புக் குழு கண்டு பிடித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.
அதன்படி, வட அமெரிக்காவில் உள்ள மிகவும் ஏழ்மையான நாடுகளில் ஒன்றான ஹைத்தியில், ஐ.நாவின் அமைதிக் குழு பணியாற்றியபோது அங்கிருந்த பெண்களிடம் அவர்களுக்கு தேவையான உணவு, உடை, தண்ணீர், குழந்தைகளுக்கான வசதிகள் போன்றவற்றை பெறவேண்டுமென்றால் தங்களுடன் பாலியல் உறவு கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஏழை நாடான அங்கு கிராமப்புறப் பெண்களுக்கு உணவு, உறைவிடம், குழந்தைகளுக்கான தேவைகள், மருத்துவப் பொருள்கள், வீட்டு உபயோக பொருள்கள் என எதுவும் இல்லை.
எனவே இது போன்ற தேவைகளை வழங்குவதற்கு மாறாக அந்தப் பெண்களிடம் உறவுகொள்ளும் வழக் கத்தை அமைதிக் குழுவினர் வைத்துள்ளனர். மேலும் செல்போன், நகை, பணம் உள்ளிட்ட பொருள்களையும் அங்குள்ள பெண்களுக்கு குழுவினர் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஹைத்தியில் 231 பெண்களிடம் மேற்பார்வைக் குழுவினர் நடத்திய ஆய்வின் மூலமாக இந்த தகவல் தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது ஐ.நா. அமைதிப் படைக் குழுவில் உலகெங்கும் சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# துனிஸியாவில் அகதிகள் கைது

துனிஸ்,ஜூன்13
பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமாக படகுகள் மூலம் பயணம் செய்து ஐரோப்பிய நாடுகளில் குடியேறி வருகிறார்கள். குறிப்பாக லிபியாவில் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய கும்பல்களால் நடத்தப்பட்டு வரும் பயங்கரப் போரால் அந்த நாடே போர்க்களமாகியுள்ளது. அதனால் பொது மக்களில் பெரும்பாலானவர்கள் அங்கு இருந்து வெளியேறி வருகிறார்கள். இவ்வாறு வெளியேறும் அவர்கள் மேற்கொள்ளும் கடல் பயணம் பாதுகாப்பற்றதாகவுள்ளது.
இதற்கிடையே லிபியாவில் இருந்து 350 அகதிகளை சட்டவிரோதமாக ஏற்றிக்கொண்டு இத்தாலி நாட்டின் தீவுப்பகுதியான லேம்பெடுசா நோக்கி நேற்று முன்தினம் படகு ஒன்று சென்றது. துனிசியா கடல் பகுதியில் சென்றபோது, துனிசியா நாட்டு கடற்படையினர் அகதிகள் 350 பேரையும் படகுகளுடன் கைதுசெய்துள்ளனர். பிடிபட்டவர்கள் சிரியா மற்றும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள் ஆவர். (ஐ)

# குழந்தை பெற்றுக்கொண்டால் 5 ஆயிரம் யூரோ பரிசு

## போர்த்துக்கல் அரசு அறிவிப்பு

லிஸ்பன்,ஜூன் 13
போர்த்துக்கல் நாட்டில் உள்ள ஒரு கிராமத்தில் குழந்தை பெற்றுக் கொள்ளும் தம்பதியருக்கு 5 ஆயிரம் யூரோ பரிசு பரிசாக வழங்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.
சர்வதேச பொருளாதார நெருக்கடியில் சிக்கி போர்ச்சுக்கல் நாடு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடும் நிலையும் ஏற்படுகிறது. மேலும், அவர்கள் திருமணம் செய்து கொள்ள மறுப்பதால் அங்கு பிறப்பு விகிதம் குறைவாகவே உள்ளது.



அதிலும் அல்கோடிம் என்ற கிராமத்தில் 0.9 என்ற மிகவும் குறைவான அளவிலேயே பிறப்பு விகிதம் உள்ளது. அங்கு கடந்த 20 வருடங்களில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் இறந்து விட்டனர். அதைத் தொடர்ந்து அந்த நாட்டு அரசு அந்தக் கிராமத்தில் உள்ள தம்பதிகள் குழந்தை பெற்றுக் கொண்டால், 5 ஆயிரம் யூரோ பரிசு வழங்கப்படும் என்று அதிரடியாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் பிறப்பு விகிதம் நிச்சயம் கூடிவிடும் என்ற நம்பிக்கையில் அதிகாரிகள் உள்ளனர். (ஐ)

# நைஜீரியாவின் தலைமையில் போர் நடத்துவதற்கு ஜனாதிபதி முஹமது புஹாரி கோரிக்கை

அபுஜா,ஜூன்13
போகோ ஹராம் தீவிரவாதிகளுக்கு எதிரான போரை நைஜீரியாவின் தலைமையில் நடத்த வேண்டும் என அந்த நாட்டின் ஜனாதிபதி முஹமது புஹாரி கருத்துத் தெரிவித்துள்ளார்.
தீவிரவாதக் குழுவான போகோ ஹராமை எதிர்த்துப் போராடக் கூட்டாக ஒரு உத்தியை உருவாக்க வழி செய்யும் ஓர் கூட்டம் நைஜீரியத் தலைநகர் அபுஜாவில் நடைபெற்றது.
அந்தக் கூட்டத்தில் ஐந்து மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்
இதன் போது நைஜீரிய ஜனாதிபதி முஹமது புஹாரி, போகோ ஹராம் தீவிரவாதிகளுக்கு எதிரான போரை நைஜீரியாவின் தலைமையில் நடத்துவதுதான் சரியாக இருக்கும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தலைமையை மாற்றுவது நடவடிக்கையில் இடையூறை ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவில் எமது மண்வாசனை

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுருநாதன் ராகவனுக்கும், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட குமுதினி இராசரத்தினத்துக்கும் பிறந்த மகன் சேயோன், இவர்களை நான் ஆஸ்திரேலியாவில் சிட்னி என்ற இடத்தில் சந்தித்த வேளை எமது மண்வாசனையை சிட்னியில் கண்டு அகமகிழ்ந்தேன். எமது மாணவர்களில் ஒரு பிரிவினர் கல்வியைத் தொலைத்து, கலாசாரத்தை தொலைத்துவிட்டு வாள்வெட்டுக் கலாசாரத்தில் மோகங்கொண்டுள்ள இந்த வேளையில், ஆஸ்திரேலியாவில் எமது மண்ணின் பெருமையை சேயோன் பறைசாற்றுவது எமக்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது. இந்தக் குடும்பத்தை நான் சந்தித்ததையிட்டு பெருமையடைகின்றேன். எமது மண்ணும் பூரிப்படைகின்றது. இவர் தொடர்ந்தும் எமது மண்ணுக்கு வளம் சேர்க்க வேண்டும் என சிட்னி முருகனை வேண்டுகின்றேன்.

இவர் கல்வியில் மட்டுமன்றி, கலைத்துறையிலும் பெரும் ஈடுபாடு கொண்டவர். இசையில் ஆர்வமுள்ள இவர், பொது வைபவங்களில் எமது பக்திப் பாடல்களைப் பாடி வருகின்றார். இதனூடாக கடல் கடந்து வாழும் தமிழர்களின் உள்ளங்களில் தமிழ்ப்பாடல்களை வசப்படவைப்பிக்கத் தன்னை ஈடுபடுத்தி வருகின் றார். இதற்கு அவரது பெற் றோரும் உந்துசக்தியாக விளங்குகின்றனர்.

ஆஸ்திரேலியாவில் சர்வதேச ஒலிம்பியாட் போட்டி இடம்பெற்று வருகின்றது. இதில் 9 ஆவது வகுப்பிலிருந்து 12 ஆவது வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவர்களில் கணித பாடத்தில் சிறந்து விளங்கும் ஆறு மாணவர்களை மட்டும் தேர்ந்தெடுத்து போட்டியை நடத்துவார்கள். சேயோன் 2 தடவைகள் இந்தப் போட்டியில் பங்குபற்றி எமது மண் வாசனையைப் பரப்பியுள்ளார்.

2013 ஆம் ஆண்டு 9 ஆவது வகுப்பில் கல்விகற்கும்போது தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பியா எனும் நாடு சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியை நடத்தியது. இதில் சேயோன் பரிசாக வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண் டார். 2014 ஆம் ஆண்டு 10 ஆவது வகுப்பில் கல்வி கற்கும் போது தென்னாபிரிக்கா நடத்திய இந்தப் போட்டியில் சேயோன் மீண்டும் வெண்கலப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டார்.

தாய்லாந்து நாடு 2015 ஆம் ஆண்டு ஆடி மாதம் 4 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இந்தப் போட்டிகளை நடத்தவுள்ளது. இந்தப் போட்டியில் சேயோன் மூன்றாவது தடவையாக ஆஸ்திரேலியாவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். இதனூடாக எமது மண் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

எல்லா நாடுகளும் இதற்கான பயிற்சிகளை உரிய மாணவர்களுக்கு வழங்கி வருகின்றன. இவருக்கும் இதற்கான விசேட பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன. கடந்த இரு வருடங்களிலும் கலந்து கொண்ட 600க்கும் மேற்பட்டவர்களில் சேயோன் மட்டும் தான் ஒரேயொரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பியாட் போட்டியில் தெரிவாகி வெற்றிபெறும் மாணவர்களுக்கு ஆஸ்திரேலிய நாடாளுமன்ற கட்டடத்தில் அந்த நாட்டு இலச்சனையுடனான பரிசுகள் கல்வி அமைச்சரால் வழங்கப்படுவது வழமை. இந்த வருடம் இந்த நிகழ்ச்சி கன்பராவில் நடைபெறவுள்ளது. சேயோனுக்கு அதில் பரிசுபெறும் வாய்ப்புக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான பயிற்சிகள் முழுமூச்சில் நடைபெற்று வருகின்றன.

> “எமது மாணவர்களில் ஒரு பிரிவினர் இங்கு கல்வியைத் தொலைத்து, கலாசாரத்தை தொலைத்துவிட்டு வாள்வெட்டுக் கலாசாரத்தில் மோகங் கொண்டுள்ள இந்த வேளையில் ஆஸ்திரேலியாவில் எமது மண்ணின் பெருமையை சேயோன் பறைசாற்றுவது எமக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

கல்வியில் மட்டுமன்றி, சங்கீதத்திலும் மிகவும் ஆர்வமுள்ளவர் சேயோன். கர்நாடக சங்கீதம், மேற்கத்தைய சங்கீதம் இரண்டிலும் நாட்டமுள்ளவர். இரண்டிலும் நன்றாகப் பாடுவார். ஆலய நிகழ்வுகள், பொது வைபவங்களில் பங்கு கொண்டு எந்தப் பிரதி உபகாரங்களையும் எதிர்பாராது தமிழ் மணம் கமழ சிறந்த பாடல்களைப் பாடி கடல்கடந்த தமிழர்களின் மனங்களை நிறைத்துள்ளார்.

மிருதங்கம் வாசிப் பதிலும் சிறந்து விளங்குகின்றார். கடந்த சித்திரை மாதம் நான்காம் திகதி இவரது மிருதங்க அரங்கேற்றம் சிட்னியில் நடந்தேறியது.

சேயோனைப் போன்று கடல் கடந்து வாழும் எமது உறவுகள் எமது மண்ணின் பெருமையை வேற்று நாட்டில் பரப்புவதன் மூலம் தமிழர்கள் மட்டுமன்றி யாழ். குடாநாடும்கூட பெருமையடைகின்றது. இதனூடாக எமது மண் வாசனை மேலும் கடல்கடந்து நுகரப்பட பெற்றோர்கள் கூடிய கவன்மும், அக்கறையும், ஈடுபாடும், ஆர்வமும் கொள்ள வேண்டும். இது அவர்கள் எமது மண்ணுக்கு செய்யும் கடமைகளில் ஒன்றாக அமையும், அமையட்டும்.


## தலைமுடி அதிகமாக உதிர்கிறதா? பயோட்டினெக்ஸ் ஈ பாவியுங்கள்

'பயோட்டினெக்ஸ் ஈ' துணை கொண்டு நிரந்தரமான அழகைப் பெற்றிட இன்றே அதனைப் பாவியுங்கள்.

பண்டைய காலகட்டத்தை விட அண்மைக் காலமாக தலைமுடி உதிர்வு, தலைமுடி நுனி வெடிப்பு இவை இப்போது அதிகளவில் இருந்து வருகின்றது. என்ன காரணம் என வினவுகின்றீர்களா?

* தலைமுடியின் பராமரிப்பு குறைவு
* நாகரிக மோகத்தினால் வெவ்வேறு வகை எண்ணெய்களை நாளுக்கு நாள் பாவிப்பது.
* இரசாயனக்கலவை கொண்ட பல வர்ணக் கலவைகளைப் பாவிப்பது.
* செயற்கைச் சிகை அலங்காரங்கள்.
* முறையற்ற உணவுப்பழக்கம்.
* அதிக மன அழுத்தம்.
* உளரீதியான பாதிப்புக்கள்.



இப்படியான முறைகேடான செயற்பாடுகளினால் நாம் எமது அழகுதரும் கூந்தலை இழக்க நேரிட லாம். ஆகையினால் நாம் எப்போதும் சரியான முறை யான பராமரிப்பை எமது தலைமுடிக்கு அளிப்பது அவசியமாகும்.

நாம் உட்கொள்ளும் உணவு, உயிர்ச்சத்துக்கள் அடங்கியதாக இருப்பது நல்லது. கிடைக்கத் தவறிய உயிர்ச்சத்துக்களை சிறந்த தயாரிப்பான பயோட்டினெக்ஸ் ஈ போன்ற வில்லைகளைப் பாவிப்பதன் மூலம் பெற்று குறுகிய காலப்பகுதியில் நல்ல பிரதிபயனை எம்மால் பெற முடிகின்றது. விசேடமாக தலைமுடி வளர்ச்சிக்குத் தேவையான பயோநியூட்ரா போமுலா அடங்கிய தரமுயர்ந்த ஒரிஜினல் தயாரிப்பாகும்.



இந்த வில்லைகளை தினம்தோறும் காலை மாலை உணவின் பின் உட்கொண்டு வர நாம் இழந்த தலைமுடி சருமப்பொலிவு என்பவற்றைத் திரும்பப்பெறும் வாய்ப்பு கிட்டுகிறது. மென்மையான மிருதுவான சருமத்தைப் பெற்றுக் கொடுக்கும்.

செயற்கை அழகை விட இயற்கை அழகே சிறந்தது. ஆகையினால் நாம் அனைவரும் இயற்கை அழகைப் பெறும் வழிமுறைகளைக் கையாள்வது சிறந்தது. இதற்கு இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் தயாரிப்புக்களை இன்றே நாடுங்கள்.

உங்கள் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவு பெற பயோட்டினெக்ஸ் ஈ வில்லைகள் என்றும் உறுதுணையாகும். 15 வருட காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இந்தத் தயாரிப்புக்கள் என்றென்றும் எமது பாவனையாளர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு சிறந்த தயாரிப்பு என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை.ஆரோக்கியமன நீளமான கருமையான தலைமுடி வளர பயோட்டினெக்ஸ் ஈ வில்லைகளைப் பாவியுங்கள். பயன் அடையுங்கள்

கோதுமை விதை எண்ணெய், சன்ஸ்கிரீன், விற்றமின் ஈ, சிலிகோன் கண்டிசனர் இந்த மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சிறந்த ஒரு எண்ணெய் றியல் ஈ ஆகும். தலைமுடியின் அடி முதல் நுனிவரை வழங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவசியமான கேசப்பராமரிப்புப் பொருள்களின் கலவை இதுவாகும். ஸ்கால்ப் மஸாஜ் முறையில் தலையில் தடவி விரல்களால் 5–10 நிமிடங்கள் மஸாஜ் செய்துவர தலைமுடியின் வேர்களுக்கு நல்ல போசாக்குக் கிடைக்கும்.

நாம் எப்போதும் தலை முடிகளுக்கு மட்டுமன்றி முடிவேர்களுக்கும் முடியின் நுனிகளுக்கும் எண்ணெய் தேய்த்து மஸாஜ் செய்யப்பழகிக்கொள்ள வேண்டும். இப்படியான சரியான முறைகளை நாம் கையாள்வதனால் சிறந்த பிரதிபயனை எளிதில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்தோடு தலைமுடி நுனி உடைதல், தலைமுடி வெடிப்பு, தலைமுடி நிறமாற்றம் இவற்றையும் படிப்படியாக நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு சிறந்த கலவை தான் றியல் ஈ.

இன்றைய நாள்களில் பெண்களுக்குரிய தனி அழகை மெருகூட்டுவது அவர்களது கூந்தல் தான். ஆகவே தான் பெண்கள் பல செயற்கை இரசாயன மூலிகைகளைக் கொண்ட தயாரிப்புக்களை நாடி அதன் மூலமாக பல பாதகமான விளைவுகளை எதிர்நோக்குகின்றார்கள். அத்தோடு நாம்விரைவாக எந்த ஒரு பிரதிபயனையும் எதிர்பார்ப்பதைக் கைவிட்டு எப்போதும் இயற்கைத் தயாரிப்பை நாடுவது சாலச் சிறந்தது.

மேலதிகமாக சூரியக்கதிர்களிலிருந்து தலைமுடியின் நிறத்தை அதிகளவில் பாதுகாக்கும் தன்மை றியல் ஈ இன் ஒரு தனி சிறப்பம்சமாகும்.

நிஜமான போஷாக்குக்கு, நிஜமான தீர்வு என்பது போல பல வர்ணங்களை தலை முடிக்குப் பூசி அதன் விளைவுகளை எதிர்நோக்காமல் என்றும் தலைமுடியின் இயற்கை நிறத்தை தனதாக்கி எமது அழகை மெருகூட்டுவோம். (த)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோ(ஹ்)லி

மேலே குறிப்பிட்டுள்ள பெயர் ஆங்கிலத்தில் Kohli. இது ஒரு அந்நிய மொழிப்பெயர். அதற்காக நாம் எமது விருப்பத்துக்கு ஏற்ப தமிழ்ப்படுத்த முடியாது. கோஹ்லி என்றுதான் குறிப்பிட வேண்டும். கிரிக்கெட் ஆட்டத்தில் ஆர்வமுள்ள யாவருக்கும் இது நன்கு தெரியும். நேர்முக வர்ணனையாளர்களும் அவ்வாறே தான் குறிப்பிடுவர். நேர்முக வர்ணனையைக் கூடச் செவி மடுக்காத ஒருவரை உங்களது பத்திரிகையில் விளையாட் டுப் பகுதியின் ஆசிரியராக சம் பளம் கொடுத்து வைத்திருப்பது ஏனோ என்றுதான் எனக்குப் புரியவில்லை. அவர் Kohli என்ற பெயரை ஹோக்லி என்றுதான் இன்றும் தமிழில் எழுதுகிறார். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் உள்ளது என்ற எண்ணத்தில் வாழ்கின்றார் போலும்.


நான் முன்பு ஒரு தடவை இந்தப் பிழையைப் பற்றி உங்களது கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தேன். அது விழலுக்கு இறைத்த நீராய்ப் போனது தான் நான் கண்ட மிச்சம். K எனும் ஆங்கில எழுத்துக்கான தமிழ் வடிவம் க என்பதைத் தெரியாதவர் எப்படித் தான் பத்திரிகைத் துறையில் நுழைந்தார் என்றுதான் தெரியவில்லை. KO என்பதன் தமிழ் வடிவம் கோ என்பதைத் தெரியாத ஒருவரால் பத்திரிகைத் துறைக்கே இழுக்கு. KOHLI தமிழில் கோஹ்லியாகத் தான் அமைய வேண்டும் ஹோக்லியாகவல்ல. எமது தமிழ் மாணவ சமுதாயத்தின் தமிழ் ஞானத்தைச் சோதிக்க வேண்டாம். தவறான பாதையில் வழி நடத்த வேண்டாம்.

கோஹ்லியென்று தமிழில் எழுதி தமிழை வாழவிடுங்கள். மெல்ல மெல்லக் கொல்ல வேண்டாம். இது இடம்பெறுவது அதிகளவிலான வாசகர்களைக் கொண்ட உதயன் பத்திரிகையில் தான். இனிமேலாவது இந்தத் தவறை உதறிவிடுங்கள். அல்லது தவறான அந்தச் சொல்லைப் பயன்படுத்தும் கட்டுரையாளரை உதறிவிடுங்கள். இந்தத் தவறைத் திருத்திக் கொள்ளும் வரையிலும் நான் தொடர்ந் தும் சுட்டி எழுதுவேன். உங்க ளால் என்னைக் கட்டுப்படுத்த முடியாது.

தமிழ்மொழி சரியாகப் பயன்படுத்தப்படுவதை விரும்பும்

*த.துரைசிங்கம், அரியாலை.*

# வாசகர் திருமுகம்



## உதயன் சேவை ஓங்கி வளர வேண்டும்

என் இனிய உதயன் நாளிதழ் உரிமையாளர், ஊழியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், வணக்கத்தையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 31.05.2015 அன்று யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டம் அனைவரது மனதையும் நெகிழ்வுறச் செய்தது. அங்கு சென்றிருந்த போது போட்டியாளர்கள் மட்டுமல்லாது அங்கு வந்த அனைவரையும் அவர்கள் வரவேற்றவிதம், உபசரித்த விதம் எத்தனை அருமை. நானும் அதில் ஒரு பரிசு பெற்ற போட்டியாளர் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். உண்மையிலேயே எந்த ஒரு நிகழ்வையும் இப்படி ஒரு பத்திரிகை செய்ததில்லை. அங்கு வந்திருந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா பேசுகையில், இந்தச் சமுதாயம் எப்படி சீர்கெட்டுக் கிடக்கிறது என்பதையும் அந்தச் சமுதாயத்தை இளைஞர்கள், யுவதிகள், மாணவ மணிகள் எப்படி எச்சரிக்கையுடன் கையாண்டு சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் உணர்த்தினார். மிகவும் அருமை. அரசியல்வாதிகள் எங்கே ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் பேசுவதற்கு என்று இருக்கின்ற இந்தக் காலத்தில் அரசியல் சம்பந்தமாக ஒரு வார்த்தைகூட பேச வில்லை. எந்த மேடையில் எதைப் பேச வேண்டும் என்று தெரிந்து கொண்டுள்ள அவருக்கு நன்றிகள். மேலும் சிறுமிகளின் நடனம் அருமையானதாய் அமைந்திருந்தது. அத்தோடு யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஐயா பேசுகையில் நாம் மக்களையே நம்புகிறோம். மக்கள் உதயனை நம்புகின்றனர் என்ற வார்த்தை எவ்வளவு உண்மையானது என்பதைப் பற்றியும் விளக்கியது. அடுத்ததாக வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் ஐயா உரையாற்றுகையில் தமிழர் மத்தியிலே விழிப்புணர்வின் அவசியம் பற்றியும் பேசினார். மேடையில் உரையாற்றிய ஒவ்வொருவருடைய உரையும் சிந்திக்க வைத்ததுடன் சுவாரஸ்யமாகவும் அமைந்தது. மேலும் நலனோம்புத் திட்டத்தினூடாக உதவிகளையும் வழங்கினார்கள். அதுமாத்திரம் அல்லாது பார்வையாளர்களிடையே தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. உதயன் பத்திரிகையின் ஊழியர் ஒருவரின் கவிதை மெய்சிலிர்க்க வைத்தது. அந்தக் கவிதையில் எவ்வளவு உண்மையுள்ளது. அவருக்கும் எனது வாழ்த்துக்கள். தொடக்கம் முதல் முடிவு வரை சலிப்பில்லாது நடந்தேறியது உதயனின் உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டம். உதயனின் வளர்ச்சி இன்னும் மேலோங்கி வளர வேண்டும். சேவை இன்னும் சிறப்புற வேண்டும் என்பதோடு தமிழன் அழிந்து போனாலும் தமிழ் அழிவதில்லை, தடைகள் எதுவாயினும் தகர்த்தெறியும் தமிழ் பத்திரிகை உதயன் நாளிதழ் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஜி.எஸ். எஸ். குலேந்திரன்*
*வவுனியா*

## கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# வேதாளம் முருங்கை மரம் ஏறத் தொடங்குகின்றதா?

யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருளை இல்லாதொழிக்கும் நோக்கத்துடனும், மதுபாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் வடக்கு மாகாண ஆளுநர் பளிக்கார நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இந்தப் பொறிமுறையுடன் தொடர்புடைய அதிகாரிகளை அவர் தனது ஆளுநர் அலுவலகத்தில் கடந்த புதன் கிழமை சந்தித்துப் பேசியுள்ளார்.

இதன்போது போதைப் பொருள் பாவனையை இல்லாது ஒழிப்பதற்கு எவ்வாறான நடவடிக்கை எடுக்க வேண்டும், மது பாவனையைக் கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர். அத்துடன் வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் எடுக்கும் நடவடிக்கை வரவேற்கத்தக்கது. இது அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயமுமாகும். ஆனால் ஆளுநர் இந்த நடவடிக்கையை எடுத்த விதமே இங்கு பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது. கடந்த ஆட்சியில் - மஹிந்தவின் காலத்தில் வடக்கு ஆளுநராக இருந்த மேஜர் ஜெனரல் சந்திரசிறி கையாண்ட நடை முறையைக் கையாள்கின்றாரா என்ற சந்தேகத்தை உரு வாக்கியுள்ளது.

போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் விடயத்திலும், மதுபாவனையைக் கட்டுப்படுத்தும் விடயத்திலும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முழு ஈடுபாட்டுடன் இதனைச் செய்து வருகின்றார். தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் நடந்த உயர்மட்டக் கலந்துரையாடலிலும் வடக்கு முதல்வர் பங்கெடுத்திருந்தார்.

போதைப் பொருள் பாவனை போரின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று என்பதை ஆணித்தரமாக அவர் முன்வைத்ததுடன், போரின் பின்னர் வடக்கு மாகாணத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இராணுவத்தினரே அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்று தெரிவித்திருந்தார் முதலமைச்சர், இந்தச் செயற்பாடுகள் திட்டமிட்ட நடவடிக்கை என்பதைக் குறிப்பிட்டதுடன், இவை இராணுவத்தினர் ஊடாக முன்னைய காலங்களில் முன்னெடுக்கப்பட்டது என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

போதைப் பொருள் பாவனை ஒழிப்பு விடயத்தில் முதலமைச்சரை உள்ளடக்கிய உயர் மட்டக் குழு அமைப்பது தொடர்பில் கொழும்பு கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னரே, வடக்கு மாகாணத்தின் தற்போதைய ஆளுநராக இருக்கும் பளிக்கார இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அதாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசின் முதல்வர் ஒரு நடவடிக் கையை ஆரம்பித்த பின்னர், ஆளுநர் தனியே ஒரு நடவடிக் கையை ஆரம்பித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் இதுவே நடந்தது. வடக்கு முதல்வர் தலைமையிலான வடக்கு அரசு ஒரு நடவடிக்கை எடுக்கும் போது, அதிகாரிகளைப் பயன்படுத்தி ஆளுநர் தனித்து இன்னொரு நடவடிக்கை எடுத்து வந்தார். இதனாலேயே, கடந்த காலத்தில் வடக்கு அரசுக்கும் - வடக்கு ஆளுநருக்கும் இடையில் நேரடியான முரண்பாட்டு நிலைமை இருந்தது. இதனாலேயே வடக்கு ஆளுநரை மாற்ற வேண்டும் என்ற கோஷம் பலமாக முன் வைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் புதிய அரசு வடக்கு ஆளுநரை மாற்றியிருந்தது. அதன் பின்னர் வடக்கு ஆளுநரும், வடக்கு மாகாண சபையும் பெருமளவு முரண் படாமல் ஒன்றாக இணைந்து பணியாற்றி வந்து கொண்டிருந்தனர். கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற செயலாளர் களின் இடமாற்றத்தின் போது, வடக்கு ஆளுநருக்கும் - வடக்கு அரசுக்கும் இடையில் முரண் நிலை ஏற்படுத்துவதற்கான தோற்றப்பாடுகள் தலைதூக்கியிருந்தன. பின்னர் அது சாத்தியப்படவில்லை.

இந்த நிலையில் மீண்டும் முரண்பாடு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுதான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. வடக்கு அரசு நடவடிக்கை எடுக்க, வடக்கு அரசைப் புறக்கணித்து, ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிகாரிகளுடன் கூட்டம் கூட்டி நடவடிக்கை எடுக்க முற்படுவது நல்லதொரு செயற்பாடாகத் தெரியவில்லை.

சில வேளைகளில் வடக்கு முதலமைச்சரின், போதைப் பொருள் பாவனையின் பின்னால் திட்டமிட்ட நடவடிக்கையும் - இராணுவத்தினரும் இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு ஆளும் வர்க்கத்துக்கு உறைக்கின்றதோ தெரியவில்லை. அதனால் தான், வடக்கு முதலமைச்சரை ஓரம் கட்டி, ஆளுநர் தலைமையில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்க விளைகின்றனரோ தெரியவில்லை. எது எப்படியோ வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறாமல் இருந்தால் சரி.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எந்த முடிவினது வெற்றியும் செயலுருப் பெறுவதைப் பொறுத்ததே

அண்மையில், பிரிட்டனில் இலங்கை அரசின் அதிகாரிகளுக்கும், புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பிரச்சினைக்குரிய விடயமாக மாறியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதனை ஓர் இரகசியப் பேச்சாக ஊதிப் பெருப்பிக்கும் பணியில், முந்தைய மஹிந்த அரசின் அங்கங்கள் அதிதீவிரமாகவும், வேகமாகவும் செயற்படுகின்றன.

அதன் நிமித்தம், அரச தரப்பில் மறுப்பும் விளக்க உரையும் விடுக்க வேண்டிய தேவை மேலெழுந்து உள்ளது என்று கருத வேண்டி உள்ளது.

நல்லிணக்கத்துக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு முன்வரும், அனைவரின் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கு அரசு தயாராக உள்ளது --என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்னே தெரிவித்திருக்கிறார்.

புலம்பெயர்ந்தோருக்கான விழாவை ஆண்டு தோறும் நடத்துவதற்கு வெளிவிவகார அமைச்சு முடிவு செய்துள்ளதாகவும், ஆண்டுக்கு ஆண்டு அந்த விழாவை வெவ்வேறு வெளிநாடுகளில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பேச்சாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அத்தோடு, இன, மத பேதமின்றி, நல்லிணக்கத்தை நாடி ஒத்துழைப்பையும் உதவிகளையும் நல்க முன்வருவோருக்கு அரசு ஊக்கமளிக்கும் என்றும் மஹேஷினி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தரிக்காது, தனிநபர்கள் அல்லது அமைப்புகள் இத்தகைய விழாக்களை நடத்துவதைவிட, அரசு தானே முன்னின்று அதனைச் செய்யவே விரும்புகிறது என்றும் அவர் விவரித்துள்ளார்.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து இனங்களைச் சேர்ந்தவர்களுடனும் பேச்சு நடத்துவதற்கு அரசு தயாராக உள்ளது என்ற தகவலையும் அவர் வெளிப்படுத்தினார்.

புலம்பெயர் தமிழர்களுடன், இலங்கை வெளிவிவகார அமைச்சு, லண்டனில் பேச்சு வார்த்தை ஒன்றை அண்மையில் நடத்தியதும் --

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டில் புலம்பெயர்ந்தோருக்கென ஒரு விழாவை, தலைநகர் கொழும்பில் நடத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

நாட்டில் இன நல்லிணக்கத்தை உற்பவிப்பதற்கு அனைத்து இனங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும் என்ற எடுகோள், கருத்து வரவேற்கத்தக்கதே.

அதற்கு இப்போதைய அரசு தயாராக உள்ளதாக அறிவித்துச் செயற்படுவது நல்ல சகுனம் எனக் கருதலாம்.

ஆயினும் அது எந்த அளவுக்கு செயல் ரீதியாகச் சாத்தியமாகும் என்பது பெரும் கேள்விக் குறியாகவே உயர்ந்து நிற்கிறது.

இது தொடர்பில், யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பெரு நாட்டின் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் எட்வாடோ கொன்ஸாலெஸ் தெரிவித்தவை கருத்தில் கொள்ளத் தக்கவை.

நீதி, உண்மையை நாடுதல், இழப்பீடு ஆகியவை புறக்கணிக்கப்பட முடியாதவை. அவை அனைத்துலக மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டவை --

அந்த விடயங்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வரவேண்டும். அப்போதுதான் நீதி கோரும் விசாரணையை உள்நாட்டில் மட்டுமல்லாது அனைத்துலக மட்டத்திலும் கோர இயலும் --

வெளிநாடுகளில் என்ன நடந்தது என்பதைக் கொண்டு, அதனைக் கற்றுக் கொள்ளமுடியும் -- என்று அவர் எடுத்துக் கூறியிருந்தார்.

மொத்தத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களது உடனடித் தேவைகள் குறித்து பிரிட்டனில் நடத்தப்பட்ட செயலமர்வு ஒரு முன்னோடியாக அமையுமா? அதற்கான பதிலோ, விளைவோ உடனடியாக செயல்வடிவாகுமா? அதனை நிச்சயமாக எதிர்பார்க்க முடியாத ஒன்றெனலாம்!

# புலிகளுக்கு உயிர்கொடுக்கும் மஹிந்த ஆதரவாளர்கள்

வந்தியத்தேவர்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு முன்னாள் விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அவரது தரப்பினர் இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடுசெய்துள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஊடாக மஹிந்தவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவதில் எந்த அளவு உண்மை உள்ளது என்பது கேள்விக்குரியதே. கடந்த போரின் பின்னரான நாள்களில் புலிகளை முற்றாகத் தொலைத்தழித்து விட்டேன். பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்துவிட்டேன். இலங் கையை மீட்டெடுத்துள்ளேன். என்றெல்லாம்மார்தட்டிக்கொண்ட மஹிந்தருக்கு இப்போது புலிப் பயம் எழுந்துள்ளது என்றால் புலிகளை முற்றாக அழித்து விட்டேன் என அவர் மார் தட்டி வெற்றிவிழா கொண்டாடியதன் அர்த்தம் தான் என்ன?

அவர் மட்டுமல்ல, அவரது சகோதரர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போன்ற அனைவருமே தமது எதிர்கால நன்மைக்காக மக்களை ஏமாற்றியுள்ளனர் என்பது இதன்அர்த்தமாகாதா? புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் முள்ளிவாய்க்காலில் சரணடைந்த பின்னர் அவர்களையும் கொன்றொழித்தபின் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் என்று கூறிக்கொள்பவர்களான கே.பிஎனப்படும் குமரன்பத்மநாதன் போன்றவர்களை அரவணைத்து பெரும் பாதுகாப்பு வழங்கி கைக்குள் வைத்துக்கொண்டு அடிமட்டத்தில் உள்ள அப்பாவிகளை மட்டும் விட்டுவிட்டு இப்போது முன்னாள் புலிகளால் உயிருக்கு ஆபத்து என்று கூறி அப்பாவிகளான தென்பகுதி மக்களைத் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பிவிடும் ஒரு சூழ்ச்சி இது என்பது மக்களுக்குப் புரியமாட்டாதென இந்தப்புதிய புரளியைக் கிளப்பிவிட்டவர்கள் கருதுகின்றார்கள் பேரலும்.

ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைச் செய்யலாம் என்பதற்கிணையாக ஆயிரம் பொய்யைக் கூறியாவது அதிகாரத்துக்குள் நுழைய வேண்டும் என மஹிந்தவும் அவர்து விசுவாசிகளும் முடிவெடுத்துள்ளார்கள் போல் தெரிகின்றது. அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாக அவர்களின் கரங்களுக்குப் புலிப் பாத்திரம் அகப்பட்டுள்ளது போலும். மக்கள் மத்தியில் அனுதாப அலையை உருவாக்க ஒரு முன்னோடி நடவடிக்கையாகவும் இது அமைவதாகக் கொள்ளலாம் தானே? எதைச் சொல்லி யாவது மக்கள் மனதில் நீங்காத இடம் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாகிய கட்டுக்கதையாகவும் இது இருக்கலாம்.

மஹிந்தரே, நீங்கள் பழிவாங்கும் நபரல்ல என்று கூறிப் பெருமிதப்பட்டுள்ளீர்கள். அது கூடப் பொய்யா?

நீங்கள் திரும்ப அதிகாரத்துக்குள் வந்தால் பழிதீர்ப்பீர்கள் என்பது குறித்துச் சிங்கள அரசியல்வாதிகள் தான் அச்சமடைந்துள்ளனர். உண்மையில் நான் பழிவாங்கும் நபரல்ல என்று நீங்கள் கூறினாலும் உங்களது குழுவை நம்பமுடியாது. அவர்கள் அனைவரும் நல்லாட்சி குறித்து கடும் கோபத்தில் இருக்கிறார்கள். என்ன நடக்கும் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது. ஆனால் பழி வாங்குபவர்களைத் தடுக்கமாட்டேன் என ஒரு தேசியப் பத்திரிகை ஆசிரியரிடம் நீங்கள் கூறியதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. அதாவது நான் பழிவாங்கமாட்டேன். என் சார்பில் பழிவாங்குபவர்களைத் தடுக்கவும் மாட்டேன் என்பதாக உங்கள் கருத்து அமைகிறது. குரங்கு பலாக் கொட்டை எடுத்ததைப் போன்று இன்னொருவரைக் கொண்டு பழி வாங்குவேன் என்பதைச் சூசகமாகத் தெரிவித்துள்ளீர்கள். கடந்த இருபது வருடங் களுக்கு முன்னர் அம்பாந்தோட் டையில் இடம்பெற்ற ஒரு கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய மஹிந்த வைப் பிரதமராக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பவில்லை எனப் பேசப்படுவதாக கால்நடை அபிவிருத்தி அமைச்சர் றஞ்சன் ராமநாயக்க அதனைத்தான் குறிப்பிட்டுள்ளார் போலும்.


கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் உங்களுக்கு வாக்களிக்காததால் ஏற்பட்ட பதவி இழப்புக்காக நீங்கள் ஆட்சி பீடம் ஏறும் வாய்ப்புக் கிடைத்தால் அவர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் எதிர்பார்க்கக் கூடியதுதான். மீண்டும் நீங்கள் பதவியேற்றால் உங்கள் சார்பாக உங்களது கையாள்கள் தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களைக்கூடப் பழிவாங்கத் தயாராக உள்ளதையும் உங்கள் கருத்து உறுதிப்படுத்தியுள்ளது. உங்களது சுயரூபத்தை வெளிப்படுத்துகின்றது.

கிருமிகளை சுதந்திரமாக நடமாட விட்டால் நோய்த்தொற்றுக்கள் அதிகரிக்கும். சுகாதாரத்துக்கே பெரும் சவாலாகி அவை மனித அழிவுக்கே காரணமாகிவிடும். இலஞ்ச ஊழல் மோசடிகள், வன்முறைகளும் மனிதனை ஆசைக்கும் அதிகாரத்துக்கும் உள்ளாக்கக்கூடிய வலுவான ஒரு கிருமிதான். இந்தக் கிருமி ஒட்டிக்கொண்டவர் நாட்டைச் சூறையாடி மக்களை ஓட்டாண்டிகளாக்கி வறுமைக்குள் மடிய விடும் அபாயம் நிச்சயமானது. மஹிந்தவையும் அவரது விசுவாசிகளையும் மட்டுமன்றி விசுவாசிகளின் துணைவிமாரையும் இப்போது இது பிடித்துள்ளது. சசி வீரவன்ஸ போல வேறு பலரும் இந்தக் கிருமித் தொற்றுக் கொண்டவர்களாக வலம் வரு கின்றனர். இவை அனைத்தும் ஒன்றிணைந்து ஜனநாயகத்துக்கும் சாதாரண மக்களின் எதிர்காலத்துக்கும் குழிபறிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. அரசு, நாட்டைப் பாதுகாக்கும் ஜனநாயக சுகாதார அமைச்சாகச் செயற்பட்டு மோசடி இலஞ்சம், வன்முறை போன்ற கிருமிகள் நாட்டில் வளரவோ, நடமாடவோ விடாதுகளையெடுத்து ஜனநாயக சுதந்திரப் பயிர்கள் வளரக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தேர்தல் காலம் பயன்தரும் மேக மூட்டமாக அழைய வேண்டும்.

> ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைச் செய்யலாம் என்பதற்கு இணையாக ஆயிரம் பொய்யைக் கூறியாவது அதிகாரத்துக்குள் நுழைய வேண்டும் என மஹிந்தவும் அவரது விசுவாசிகளும் முடிவெடுத்துள்ளார்கள் போல் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது ரணில் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயங்குவாரென்றால் அவரது இலட்சியம் ஒருபோதுமே நிறைவேறப் போவதில்லை. மஹிந்த என்ற விருட்சம் ஜனாதிபதித் தேர்தலின் போது தறிக்கப்பட்டாலும் அது இன்னமும் முழுமையாக விழுந்து விடவில்லை என்பதுதான் உண்மையான நிலைப்பாடாகும்.

# ரணிலின் தவறான நடவடிக்கைகளால்

## ஆதாயம் தேடப்போகும் மஹிந்த

சேரலாதன்

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பான விசாரணைகள் மந்தகதியில் இடம்பெற்று வருவதைக் காண முடிகின்றது. குற்றச் செயல்கள் தொடர்பான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் மைத்திரி தலைமையிலான அரசு, மஹிந்தவை விசாரணை வட்டத்தினுள் கொண்டு வருவதில் ஏனோ தாமதம் காட்டி வருகின்றது. இதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்புக்கூற வேண்டுமென ஜே.வி.பி. கூறி வருகின்றது.

அண்மையில் மஹிந்தவின் மனைவியான ஷிரந்தியிடம் சபாநாயகரின் இல்லத்தில் வைத்து குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னணியிலும் ரணில் விக்கிரமசிங்கவே சம்பந்தப்பட்டிருப்பதாக ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பகிரங்கமாகக் குற்றஞ் சுமத்தியிருந்தார். ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்தபோது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, ரணிலை அழைத்து இரகசியமாக என்ன கூறினார் என்பது இன்னமும் மூடுமந்திரமாகவே உள்ளது. ரணிலும் அதனைப் பகிரங்கப்படுத்தவில்லை. ஆனால் தம்மையும் தமது குடும்பத்தவர்களையும் கைது செய்ய வேண்டாமென மஹிந்த ரணிலிடம் வேண்டுகோள் விடுத்ததாகச் செய்திகள் கசிந்துள்ளன. இது உண்மையாக இருக்குமாயின், இந்த நாட்டின் எதிர்காலம் மீண்டுமொரு இருண்ட யுகத்தினுள் தள்ளப்படுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவே காரணமாகிறார் என்பது தெளிவாகிவிடும். ஆனால் அவர் எதற்காக இவ்விதம் செயற்படுகின்றார் என்பதுதான் புரியாத மர்மமாக உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோதுரணிலை ஒருபொருட்டாகவே மதிக்கவில்லை. தன்னிடம் தோல்வியைத் தழுவியவர் என்ற இளக்காரம் ரணில் மீது அவரிடம் எப்போதுமே மிகுந்து காணப்பட்டது. மேலும் அவர் பல்வேறு வகையிலும் ரணிலைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியைப் பலவீனப்படுத்துவதில் குறியாக இருந்து செயற்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மஹிந்தவினால் அரசுப் பக்கம் இழுத்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டன.

இதைவிட வேறு வரப்பிரசாதங்களும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இறுதி யில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்கவும் மஹிந்தரால் கவர்ந்திழுக்கப்பட்டார். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியை உடைப் பதில் மகிந்த தீவிரமாகச் செயற்பட் டார். இன்று தாம் முன்னர் விதைத்த வினைகளை மஹிந்தவே அறுவடை செய்து கொண்டிருக்கின்றார். ஆனால் அவர் தமது வினைப் பயன்களை முழுமை யாக அனுபவிப்பதற்கு ரணில் தடையாக உள்ளமை தெரிகின்றது.

ஊழல், மோசடிகள் ஆட்சியில் இருக்கும் அரசியல்வாதிகளுக்குப் புதிதான ஒன்றல்ல. ஆனால் மஹிந்த ஆட்சியில் இவை சர்வசாதாரணமாகவே நடந்தன. இந்த விடய த்தில் மஹிந்த தம்முடன் சேர்ந்து இருந்தவர்களுக்கு வஞ்சகம் புரியவில்லை. அவர் தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் அனுபவிக்க வழி அமைத்துக் கொடுத்தார். இதனால்தான் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தோற்ற பின்னரும் அவரைச் சுற்றி ஒரு கூட்டம் இன்றளவும் ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் மைத்திரி அரசின் மெத்தனப் போக்கு மஹிந்தவுக்குச் சாதகமாகவே அமைந்து விட்டது. இதில் ரணில் வேறு, அவர்மீது கருணை காட்டிக்கொண்டிருக்கின்றார். இதன் பாதகமான விளைவுகளை மைத்திரி அரசு அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. சிலவேளை மஹிந்தவின் கை ஓங்கி விடுமாயின் முழு நாடுமே இன்னல்களை எதிர்கொள்ளப்போகின்றது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் நியமிக்கப்பட்டதே ஒரு விபத்துச் சம்பவம் போன்றது. ஏற்கனவே தி.மு. ஜயரட்ண பிரதமர் பதவியில் இருந்த நிலையில், ரணில் மைத்திரியிடமிருந்த நிறைவேற்று அதிகாரங்களின் துணையுடன் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார். இன்றுவரை அவர் தமது பதவிக்கான நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோரவில்லை. இதற்கு எதிர்மாறாக மஹிந்தவின் ஆதரவு பெற்ற எதிரணியினர் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதில் துடியாய்த் துடித்து நிற்கின்றனர். ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து அகற்றிவிட்டு மஹிந்தவுக்கு ஆதரவான ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்துவதே இதன் முக்கிய நோக்கு மாகும். ஏற்கனவே பிரதமர் பதவியில் மஹிந்த ஒரு கண் வைத்துள்ள நிலையில் அதற்கு முன்னோடியாகவே இது இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.



மஹிந்த சிலவேளை அதிகாரத் துக்கு வந்துவிட்டால் தற்போதைய அரசில் அங்கம் வகிப்பவர்கள் மற் றும் ஆதரவு தெரிவிப்பவர்களின் நிலை பற்றிச் சொல்லத் தேவையே இல்லை. மேலும் மஹிந்த ஆதர வாளர்களின் முக்கிய இலக்காக ரணில் விக்கிரம சிங்கவே காணப்படுகின்றார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அவர்மீது அளவு கடந்த கோபம் கொண்டுள்ளனர். ஆனால் அடுத்து இடம் பெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே அமோக வெற்றிபெறு மெனவும், தாமே தொடர்ந்தும் பிரதமர் பதவியை வகிக்கப் போவதாகவும் ரணில் கூறி வருகின்றார்.

ஆனால் குற்றச்செயல்களில் ஈடுபட் டவர்கள் மீது ரணில் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயங்குவாரென்றால் அவரது இலட்சியம் ஒருபோதுமே நிறைவேறப் போவதில்லை. மஹிந்த என்ற விருட்சம் ஜனாதிபதித் தேர்தலின் போது தறிக்கப்பட்டாலும் அது இன்னமும் முழுமை யாக விழுந்து விடவில்லை என்பதுதான் உண்மையான நிலைப் பாடாகும்.

ஆகவே ரணில் தமது மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாத வகையில் செயற்பட வேண்டிய கட்டத்தில் உள்ளார். அவர் அவ்வாறு செயற்படும்போதுதான் தற் போ தைய அரசையும், தம்மையும் காப்பாற்றிக்கொள்ளமுடியும்.

அதைவிடுத்து மஹிந்தவையும் அவரைச் சேர்ந்தவர்களையும் அவர் காப்பாற்ற முனைந்தால் நிலைமை விபரீதமான கட்டத்தை எட்டிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

வைகாசி—31
ஞாயிற்றுக்கிழமை 14.06.2015
**திதி:** திரயோதசி மு.இ. 10.10 வரை
**நட்சத்திரம்:** பரணி கா.07.30 வரை
**சுபநேரம்:** 08.53-10.23 வரை
**இராகுகாலம்:** 04.23-05.53 வரை
பிரதோச விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சாஸ்திரங்கள் கூறும் உண்மைகள்

எமது சாஸ்திரங்கள் இரண்டு வகையான உண்மைகளைக் கூறுகின்றன. ஒன்று, மனிதனின் அழியாத இயல்பை அடிப்படையாகக் கொண்டது; இறைவன் ஆன்மா, இயற்கை – இவற்றுக்கிடையிலான மாறாத உறவைப்பற்றி ஆராய்கிறது. மற்றொன்று, வட்டாரச் சூழ்நிலைகள், காலச் சூழ்நிலைகள், குறிப்பிட்ட அந்தக் காலத்தின் சமுதாய அமைப்புகள் முதலியவற்றைப் பற்றியதாகவுள்ளது. முதல்வகை உண்மைகள் பெரும்பாலும் எமது சாஸ்திரங்களான வேதங்களில் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவது வகை, ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் கூறப்படுகின்றன. எல்லாக் காலங்களுக்கும் வேதங்களே இறுதியான லட்சியம், முடிவான அதிகாரம் உள்ளவை என்பவை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எதிலாவது புராணங்கள் வேதங்களிலிருந்து மாறுபடுமானால் புராணத்தின் அந்தப் பகுதியை இரக்கமின்றி ஒதுக்கிவிட வேண்டும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | | | |
| | | 3 | 8 | 4 | | 7 | | |
| 4 | | | | | 7 | | 8 | 6 |
| 3 | | | | | 1 | | 4 | 2 |
| | | 8 | | 6 | | 1 | | |
| 7 | 4 | | 9 | | | | | 3 |
| 9 | 2 | | 7 | | | | | 1 |
| | | 5 | | 9 | 6 | 4 | | |
| | | | 3 | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங் குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள் ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என் பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 9 | 2 | 8 | 5 | 4 | 1 | 7 |
| 5 | 1 | 4 | 7 | 9 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 7 | 2 | 3 | 4 | 1 | 9 | 6 | 5 |
| 4 | 3 | 5 | 8 | 7 | 2 | 1 | 9 | 6 |
| 2 | 9 | 6 | 5 | 1 | 3 | 7 | 4 | 8 |
| 7 | 8 | 1 | 9 | 6 | 4 | 3 | 5 | 2 |
| 6 | 5 | 7 | 4 | 3 | 9 | 2 | 8 | 1 |
| 1 | 4 | 3 | 6 | 2 | 8 | 5 | 7 | 9 |
| 9 | 2 | 8 | 1 | 5 | 7 | 6 | 3 | 4 |




| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 700 | 700 | 550 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 550 | 550 | 600 | 500 | 700 | 500 |
| பாரை | 600 | 500 | 500 | 600 | 600 | 370 |
| சுறா | 600 | 500 | – | 700 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 450 | 300 | – |
| விளை | 650 | 400 | 400 | 500 | – | 350 |
| முரல் | 300 | 350 | 400 | 350 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 500 | 400 | 350 |
| கிழாக்கன் | 650 | 700 | 300 | 450 | – | 350 |
| ஓரா | 400 | 400 | – | 300 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 370 |
| நகரை | 200 | 400 | 200 | 250 | 200 | – |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 70 |
| ஒட்டி | 300 | 250 | 200 | 200 | 150 | 70 |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 150 | 140 |
| பாலை | 450 | 300 | 300 | 400 | 400 | 350 |
| வாளை | 100 | 200 | – | 300 | 200 | 350 |
| கொய் | 150 | 200 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 300 | – | 250 | – | 250 |




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 120 | 60 | 70–80 | 70 | 80 | 30 |
| கத்தரி | 80 | 80 | 80 | 80 | 80 | 70 | 80 | 45–60 |
| கரட் | 200 | 160 | 240 | 160 | 220 | 200 | 250 | 240 |
| மரவள்ளி | 50 | 50 | 60 | 40 | 50 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 140 | 140 | 120 | 100 | 140 | 120 | 160 | 130 |
| பாகல் | 160 | 200 | 120 | 120 | 140 | 140 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | 80 | 100–80 | 120 | 160 | 65 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 100 | 90 | 120 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 90 | 140 | 140 | 160 | 200 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 30 | 30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 40 |
| வாழைக்காய் | 70 | 50 | 30 | 40 | 40 | 40 | 60 | 30 |
| கீரை | 10 | 30 | 20–40 | 10 | 30–40 | 40 | 35 | 35 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 30 | 30–40 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 120 | 80 | 80 | 100–120 | 120 | 200 | 160 |
| புடோல் | 80 | 120 | 80 | 80 | 80 | 60 | 100 | 70 |
| கோவா | 100 | 100 | 80 | 100–140 | 80 | 120 | 120–80 | – |
| வெண்டி | 120 | 120 | 80 | 100 | 100–140 | 120 | 120 | 60 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 160 | 200 | – | 220 | 180 |
| லீக்ஸ் | 160 | 180 | 200 | 120 | 160–170 | 200 | 160 | 180 |
| தேங்காய் | 50 | 25–40 | 60 | 50 | 40–50 | 40 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 100–120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 120 | 120 | 160 | 120 | 140–170 | 200 | 160 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 30 | 20 | 10 |
| கறிமிளகாய் | 130 | 180 | 120 | 160 | 200 | 120 | 250 | 180 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 120 | 80–100 | 160 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 240 | 200 | 250–300 | 80–100 | 160 | 250 | 170 |

# மிளகின் மருத்துவ குணம்

(தொடர்ச்சி)

இது ஒரு அதி சிறந்த நிவாரணி. சோம்பலாகவும், மந்தமாகவும் இருப்பவர்களும், ஞாபக மறதிக் குழந்தைகளும் மற்ற வயதுக்காரர்களும் ஒரு தேக்கரண்டித் தேனில் ஒரு சிட்டிகை மிளகு தூளைக் கலந்து காலையும் மாலையும் சாப்பிட்டு வர சோம்பல் பறந்துவிடும். மிளகில் உள்ள பொஸ்பரஸ் மூளையை விழிப்புடன் வைத்திருக்கும். உடம்பு வலி, பற்சொத்தை உள்ளவர்களும், மிளகைத் தினசரி உணவில் சேர்ப்பது நல்லது. ஆண்மைக் குறைபாடு உள்ளவர்களும், பெண்மைக் குறைபாடு உள்ளவர் களும் தினமும் நான்கு பாதாம் பருப்பு களுடன் ஆறு மிளகுகளைத் தூளாக்கி பாலுடன் இரவில் அருந்தி வருவது நல்லது. குறைபாடுகள் குணமாகும். குழந்தையும் பிறக்கும்.

பற்சொத்தை, பல்வலி, பேசும் போது நாற்றம், பல் கூச்சம் உள்ளவர்கள் சில நாள்களுக்கு மிளகுத் தூளும் உப்பும் கலந்த பற்பொடியை வீட்டில் தயாரித்துப் பல்துலக்கி வரவும். மிளகு இரசமும், மிளகு சேர்ந்த உணவு வகைகளும் ஆரோக்கியத்தைத் தருவதுடன் மூளையின் கூர்மையையும் அதிகரிக்கும் என்பது உறுதி. திரி கடுகு எனப்படும் மிளகு திப்பிலிஸமருந்தை காலை மாலை உணவுக்குப்பின் தேனில் 500 மி.கி அளவு சாப் பிட வயிற்று நோய் களும் சுவாசம் சம்பந்தமான நோய் களும் அணுகாது. மிளகுடன் வெற்றிலை சேர்த்து லேசாக இடித்து நீரில் கொதிக்க வைத்து வடித்த குடிநீரை குடித்துவர மருந்துகளால், உணவுப்பண்டங்களால் ஏற்பட்ட நச்சுத் தன்மை நீங்கும். மிளகுத்தூள் வெங் காயம் 10 உப்பு இவற்றை கலந்து அரைத்து புழு வெட்டு உள்ள இடத்தில் தொடர்ந்து பூசிவர முடிமுளைக்கும்.



**மிளகு ஊறுகாய்:**

பச்சை மிளகு கிடைக்கும் சீசனில், வாங்கி கட்டித் தயிரில் உப்புப் போட்டு ஊற வைத்து அப்படியே உபயோகிக்கலாம். அல்லது மோர் மிளகாய் போல் காயவைத்தும் தயிர் சாதத்துக்கு தொட்டுக் கொள்ளலாம். மிளகு உடம்புக்கு மிகவும் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாதை கலந்த அங்கீகாரம்



பொதுவாகவே திருமணம் முடிந்தவுடன் கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் வாழ்க்கையைத் தொடங்குவார்கள். அப்புறம் இவர் தனக்கானவர், இவள் தனக்கானவள் எனும் எண்ணம் மனதுக்குள் ஆழமாகப் பதிந்து விடும். இது நல்ல விடயம் தான். ஒரே ஒரு சிக்கலைத் தவிர. அதாவது கணவனோ மனைவியோ என்ன தான் செய்தாலும், இது அவருடைய கடமை, இது அவளுடைய கடமை என மனம் நினைக்கத் தொடங்கி விடுவது தான்.

அந்தச் சிந்தனை மனதில் இருக்கும் போது, ஒரு செயலுக்கான மரியாதையைக் கொடுக்க நினைக்க மாட்டோம். அலுவலகத்தில் வேலை செய்கிறீர்கள். ஒரு பாராட்டோ, அங்கீகாரமோ, செயலுக்கான மரியாதையோ கிடைக்காவிட்டால் என்ன செய்வீர்கள்? மரியாதை தெரியாத மனிதர்களோடு மாரடிக்கவேண்டியிருக்குஎனப் புலம்புவீர்கள் தானே. ஒரு ஆராய்ச்சி முடிவு சில வருடங்களுக்கு முன்பு வெளியானது. ஏன் மக்கள் அடிக்கடி தங்களுடைய வேலையை மாற்றிக் கொள்கிறார்கள்? என்பது தான் ஆய்வுத் தலைப்பு. நல்ல பணம் கிடைக்கிறதனால் வேலையை மாற்றுவது தான் நமக்குத் தோன்றும் பதில். உண்மை அப்படியில்லையாம். செய்கிற வேலைக்கான மரியாதை கிடைக்கவில்லை என்பது தான் முக்கியமான காரணமாம்.

அத்தகைய சிந்தனை உறவுகளிடையேயும் நிச்சயம் எழத் தான் செய்யும். மென்மையாக உங்களுடைய சட்டையை ஒரு நாள் உங்கள் நண்பனோ, சகோதரனோ அயர்ன் பண்ணிக் கொடுத்தால் ரொம்ப நன்றி சொல்கிறீர்கள். அதே வேலையைத் தினமும் உங்கள் மனைவி செய்தாலும் நீங்கள் நன்றி சொல்லாமல், அல்லது அதை மனைவி செய்ய வேண்டிய கடமை போல நினைத்துக் கொள்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அங்கேதான் இந்தச் சிக்கலின் முதல் சுவடு பதிகிறது. அதற்காக அலுவலகத்தில் சொல்வது போல டியர் மனைவி என ஆரம்பித்து ஒரு நீளமான மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. ஒரு புன்னகை, ஒரு அரவணைப்பு, ஒரு நன்றி வார்த்தை, ஒரு பாராட்டு.. இப்படி சின்னச் சின்ன விடயம் தான். அதைக் கவனத்தோடு செய்ய ஆரம்பிப்பதில் இருக்கிறது வாழ்க்கையின் வெற்றி.

வார்த்தைகளை விட, எமது செயல்களில், எமது நடவடிக்கைகளில் அந்த மரியாதை வெளிப்படுவது இன்னும் அதிக பயன் தரும். உதாரணமாக, மனைவி சமையல் செய்து வைத்திருக்கிறார் என வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சமையலுக்கான மரியாதை என்ன தெரியுமா ? ஆர்வத்துடனும், பொறுமையுடனும் அதை ருசித்துச் சாப்பிடுவது தான். ஹோட்டலுக்குச் செல்லும்போது உணவுகளின் ருசியைப் பாருங்கள். விலையைப் பாருங்கள். இல்லங்களில் சாப்பிடும்போது சாப்பாடு தயாரித்தவரின் மனதையும், உழைப்பையும், அன்பையும் பாருங்கள். அதுவே முக்கியமானது ! உப்பு இல்லை, காரம் இல்லை என்று சொல்லி உணவை நிராகரிப்பவர்களும், விலக்கி வைப்பவர்களும் அதிகபட்ச அவமரியாதையைச் செய்கிறார்கள்.

இன்னொரு முக்கியமான விடயம் பேச்சு. மரியாதை இல்லாத பேச்சு ரொம்ப ரொம்பத் தப்பு. குறிப்பாக பிறர் முன்னிலையில் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் பேசும்போது ஒருமையில் அழைத்துப் பேசுவது, அதிகாரத் தொனியில் பேசுவது, எரிச்சலுடன் பேசுவது, இளக்காரமாய்ப் பேசுவது, மரியாதைக் குறைவாய் பேசுவது போன்றவையெல்லாம் ரொம்பவே தவறான விஷயங்கள். கணவன் தானே, மனைவி தானே என நீங்கள் நினைப்பதில் தவறில்லை. ஆனால் அவர்களும் இந்தச் சமூகத்தில் ஒரு தனி மனிதர், அவருக்கும் உணர்வுகள், சுயமரியாதை உண்டு என்பதை மனதில் கொண்டிருங்கள்.

ஒரு விடயத்தை முடிவு செய்து விட்டு உங்கள் வாழ்க்கைத் துணையிடம் சொல்வதற்கும், வாழ்க்கைத் துணையுடன் இணைந்து பேசி ஒரு விடயத்தை முடிவு செய்வதற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. ஆமாம், எல்லாவற்றையும் முடிவு செய்து விட்டு சொல்ல வந்துட்டாங்க என்ற சலிப்பு உறவுக்கு நல்லதல்ல. வெறும் தகவல் சொல்லும் ஒரு மனிதராகவோ, உங்கள் கட்டளை களை ஏற்று நடக்கும் ஒரு மனிதராகவோ மட்டும் அவரைப் பார்க்கவே பார்க்காதீர்கள். அது அவரை அவமரியாதை செய்வதற்குச் சமம். இருவரும் சேர்ந்து ஒரு விடயத்தைப் பேசி முடிவெடுப்பதே நல்லது.

கிராமப் புறங்களில் வசிப்பவர்களுக்குத் தெரியும். இரவு முழுக்க குடித்து விட்டுச் சண்டை போடும் கணவனைக் கூட விட்டுக் கொடுக்காமல் பேசுவாள் மனைவி. வீட்டில் எப்போதுமே அடங்காப் பிடாரியாய் பிடரி சிலிர்க்கும் மனைவியைக் கூட பொது இடத்தில் அன்பானவள் என பறைசாற்றுவான் கணவன். வேறு யாரேனும் தனது வாழ்க்கைத் துணையை தரக்குறைவாய் பேச அனுமதிக்க மாட்டார்கள். இது ஒருவகையில் கணவன் மனைவியிடையே இருக்கின்ற மனவருத்தங்களைத் தாண்டி ஒருவரை மற்றவர் மதிக்கும் மனப்பான்மை என்று எடுத்துக் கொள்ளலாம்.

கணவன் மனைவியராய் இருந்தால் கூட ஒவ்வொருவருக்குமான சில தனித்தனி விருப்பங்கள் இருக்கும் என்பதை மனதில் கொள்ளுங்கள். பெரும்பாலான தம்பதியர் சண்டையிட்டுக் கொள்ளும் விடயம் இது தான். அல்லது இது தான் மனவருத்தங்களை தோற்றுவிக்கும் ஒரு மிகப்பெரிய காரணியாய் இருக்கிறது. உதாரணமாக, உங்கள் வாழ்க்கைத் துணைக்கு ஒரு குறிப்பிட்ட தலைவரைப் பிடிக்கலாம், நடிகரைப் பிடிக்கலாம், ஆன்மிக வழிகாட்டியைப் பிடிக்கலாம். அது அவருடைய தனிப்பட்ட விருப்பம் என அதற்கான அங்கீகாரத்தையும் மரியாதையையும் கொடுங்கள். உங்களுக்குப் பிடிக்கும் விடயம் தான் உங்கள் கணவருக்கோ, மனைவிக்கோ பிடிக்க வேண்டும் என முரண்டு பிடிக்காதீர்கள். இருவருக்குமான தனிப்பட்ட சில விடயங்கள் இருப்பதில் தவறில்லை. அது ஒட்டு மொத்த குடும்ப உறவைப் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பது மட்டுமே கவனிக்கப்பட வேண்டிய விடயம்.



> ஒரு புன்னகை, ஒரு அரவணைப்பு, ஒரு நன்றி வார்த்தை, ஒரு பாராட்டு.. இப்படி, சின்னச் சின்ன விடயம் தான். அதைக் கவனத்துடன் செய்ய ஆரம்பிப்பதில் இருக்கிறது வாழ்க்கையின் வெற்றி.

கண்ணை மூடிக்கொண்டு இதெல்லாம் தப்பு எனச் சொல்லும் ஒரு விடயம் கை நீட்டி அடிப்பது, அல்லது மனதைக் காயப்படுத்தும்படி பேசுவது. ஆணாதிக்கம் பெண்ணாதிக்கம் என்றெல்லாம் இல்லாமல் இதில் சமத்துவம் வீசுகிறது. கையால் அடிக்கும் அடி வலிப்பதில்லை, ஆனால் அடித்துவிட்டாரே எனும் நினைப்புத் தான் வலிகொடுக்கிறது. சொல்லும் சொல்லும் அப்படியே. என்னைப் புரிந்து கொண்ட இந்த மனுஷி இப்படிச் சொல்லிட்டாளே என்பது தான் வலிகொடுக்கும்.

(தொடரும்)

## ஜூன் மாத இராசி பலன்கள்



### மீனம்

இந்த ராசிக்கு 3இல் இருக்கும் சூரியன்,செவ்வாய் முன்னேற்றப் பாதைக்கு அழைத்து செல்வர். சுக்கிரன் மிதுனத்தில் இருந்து கடகத்துக்கு மாறினாலும் மாதம் முழுவதும் நன்மை தருவார். ராசிக்கு 7 இல் இருக்கும் ராகு,1இல் உள்ள கேது, 3இல் உள்ள புதன் ஆகியோரால் சுமாரான பலனே கிடைக்கும். 5ஆவது இடமான கடகத்தில் இருக்கும் குரு மகிழ்ச்சியைத் தருவார். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை குடும்பத்தில் நடத்தி வைப்பார். பொருளாதார வளத்தை அதிகரிக்கச் செய்வார். பெண்களால் நன்மை உண்டாகும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மனதில் உற்சாகம் கூடும். தற்போது சனிபகவான் சாதகமற்ற இடத்தில் இருந்தாலும், ஜூன் 12 முதல் வக்கிரம் அடைந்து துலாம் ராசிக்கு வருவதால் நன்மை அதிகரிக்க வாய்ப்புண்டாகும். தடைகளை எளிதில் முறியடிப்பீர்கள். மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். பொருளாதார வளம் கூடும். லாபம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியம் மேம்படும். குடும்பத் தேவை பூர்த்தியாகும். சுக்கிரனால் மக்கள் மத்தியில் மதிப்பு அதிகரிக்கும். உறவினர்களிடம் இணக்கமான சூழ்நிலை ஏற்படும். உறவினர்களால் உதவி கிடைக்கும். பெரியோர் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும்.

**வியாபாரம்,தொழில்:** சிறப்படையும். குறைந்த முதலீட்டில் தொழில் தொடங்கலாம். ஜூன் 6 இற்கு பின்னர் பகைவர்களால் இடையூறு ஏற்பட்டாலும் பாதிப்பிருக்காது. பணியாளர்களால் அலைச்சல் ஏற்படும். பொலிஸ், இராணுவத்தில் பணிபுரிபவர்கள் உயர்ந்த நிலையை அடைவர். சக பெண் ஊழியர்கள் ஆதரவுடன் இருப்பர்.

**கலைஞர்களுக்கு:** உற்சாகமான பலனைக் காண்பர். புதிய ஒப்பந்தம் எளிதில் கிடைக்கும்.

**அரசியல்வாதிகளுக்கு:** எதிர்பார்த்த பதவியைப் பெறுவர்.

**மாணவர்களுக்கு:** ஜூன் 13 இற்குப் பின்னர் விரும்பிய கல்வி நிறுவனத்தில் சேரும் வாய்ப்பு கிடைக்கும்.

**விவசாயிகளுக்கு:** பொருளாதார வளத்தில் சிறப்படைவர்.புதிய சொத்து வாங்கலாம்.

**பெண்களுக்கு:** மகிழ்ச்சியுடன் இருப்பர்.

அதிர்ஷ்ட எண்: 3, 9

நிறம்: வெள்ளை, செந்தூரம்

பரிகாரம்: தினமும் மாரியம்மனை வணங்குங்கள். புதன்கிழமை ஏழைகளுக்கு பாசிப் பயறு தானம் செய்யலாம். பிரதோஷ நாளில் நந்தீஸ்வரரைத் தரிசியுங்கள்.

திலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிவான பொருள்




ஒரு தடவை துருக்கி மன்னர் – காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். அவருடைய பரிவாரத்துடன் முல்லாவும் சென்றார். மன்னர் பரிவாரத்துடன் சமையல்காரர்கள் குழு ஒன்றும் சென்றது.
சமையல்காரர்கள் குழுவின் தலைவன் காட்டில் கூடாரமடித்து சமையல் செய்வதற்கான ஏற்பாடுகளில் முனைந்தபோது அரண்மனையிலிருந்து உப்பு எடுத்து வர மறந்துவிட்டமை தெரிந்தது. சமையற்காரர்களின் தலைவன் மன்னர் முன்னால் சென்று அச்சத்தோடு தலை கவிழ்ந்து நின்றான். என்ன விடயம் என்று மன்னர் விசாரித்தார். சமையல் குழுத்தலைவன் நடுங்கிக்கொண்டே, தான் உப்பு எடுத்து வர மறந்துவிட்ட தகவலைக் கூறினான். மன்னர் சமையல் குழுத் தலைவனைக் கடுமை யாகக் கண்டித்தார். பின்னர் தனது வீரர்களில் ஒருவனை அழைத்து நீ குதிரை மீதேறி அண்மையிலிருக்கும் கிராமத்துக்குச் சென்று எவருடைய வீட்டிலாவது கொஞ்சம் உப்பு வாங்கிவா என உத்தரவிட்டார்.
அப்போது முல்லா முன்னால் வந்து மன்னரை வணங்கினார். என்ன முல்லா ஏதாவது சொல்ல வேண்டுமா? என்று கேட்டார் மன்னர். ஆமாம் மன்னவா, படை வீரனிடம் கொஞ்சம் காசு கொடுத்து அனுப்புங்கள், குடிமக்களிடம் உப்பு இனாமாகக் கேட்க வேண்டாம் என்றார் முல்லா. ஏன் குடிமக்கள் ஒரு கை உப்பை இலவசமாகக் கொடுக்க கூட முடியாத நிலையிலா இருக்கிறார்கள் என மன்னர் ஆச்சரியத்தோடு கேட்டார். மன்னர் பெருமானே நான் சொன்னதன் உட் பொருளைத் தாங்கள் அறிய விரும்பின் கூறுகிறேன் மக்கள் ஒரு மூட்டை உப்பைக்கூட இனாமாகக் கொடுப்பார்கள். ஆனால் மக்களுக்கு உங்கள்மீது இருந்த மரியாதை போய்விடும் என்றார் முல்லா. ஏன்? என்று கேட்டார் மன்னர். என்ன காரணத்தினால் நாம் உப்புக் கேட்கிறோம் என்று மக்களுக்குத் தெரியாது. உப்பு மிகவும் மலிவான பொருள். பரம ஏழை வீட்டிலும் உப்புக்குப் பஞ்சமிருக்காது. மன்னரிடம் உப்பு இல்லாமல் இல்லை. உப்பு கேட்கிறார் என்றால் அந்த அளவுக்கு அவர் நிலை கேவலமாகிவிட்டது என்றுதான் மக்கள் உங்களைப்பற்றி நினைப்பார்கள். பின்னர் அவர்கள் உங்களை எவ்வாறு மதிப்பார்கள்? அதனால் நமக்குத் தேவையான உப்பின் விலை மதிப்புக்கு அதிகம் பொருளை உப்புத் தருபவருக்கு கொடுத்துவிட்டு உப்பை வாங்கிவரச் சொல்லுங்கள் என்றார் முல்லா. அவர் சொன்ன தத்துவம் சரிதான் என்று துருக்கி மன்னருக்குத் தோன்றியது. ஆகவே பணம் கொடுத்தே உப்பை வாங்கிவருமாறு படை வீரனுக்கு உத்தரவிட்டார்.

## பொதுஅறிவுத் தகவல்கள்

- வாத்துக்கள், அதிகாலை நேரத்தில் மட்டுமே முட்டையிடுகின்றன.
- வானவில்லில் 7 நிறங்கள் உள்ளன என்பதைக் கண்டுபிடித்தவர், ஐசாக் நியூட்டன்.
- வரிக்குதிரை, ஆபிரிக்கக் கண்டத்தில் மட்டுமே காணப்படுகிறது.
- சிப்பியில் முத்து உருவாக சுமார் 15 ஆண்டுகள் ஆகும்.
- இந்தியாவிலேயே அதிக நூலகங்களைக் கொண்ட மாநிலம், கேரளா.
- செவாலியர் விருதை வழங்கும் நாடு, பிரான்ஸ்.
- வண்ணப் புகைப்படத்தைக் கண்டு பிடித்தவர், ஜார்ஜ் ஈஸ்ட்மன்.
- ஹோர்மோன்களே இல்லாத உயிரினம், பக்ரீரியா.
- அரபிக்கடலின்ராணி என்று வர்ணிக்கப் படும் நகரம், கொச்சி.
- நீரைவிட இரத்தத்துக்கு 6 மடங்கு அடர்த்தி அதிகம்.
- ஒரு நெருப்புக்கோழியின் முட்டை, 22 கோழி முட்டைகளுக்குச் சமம்.
- ஒரு புள்ளியில் சுமார் 70 ஆயிரம் அமீபாக்களை நிரப்பலாம்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க





# அன்பு காரணமான கோபம் உறவைப் பாதிக்காது



கோபம் மனித உணர்ச்சிகளில் ஒன்று. உணர்ச்சியின் அளவைப் பொறுத்து கோபத்தின் தாக்கமும் அமையலாம். குறிப்பாக கோபம் அன்பின் வெளிப்பாடாக அமையும் போது அதன் தாக்கம் குறைவாகத் தான் இருக்கும். அதேபோல் ஆணவத்தின் வெளிப்பாடாக அமைந்தால் அதன் தாக்கமும் அதன் விளைவுகளும் சற்று அதிகமாகவே அமைந்து விடுகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு தாய் தன் குழந்தை சரியாக படிக்கவில்லையென் றாலோ அல்லது தான் சொன்னதைச் சரியாகச் செய்யவில்லை என்றாலோ அவள் தன் கோபத்தின் காரணமாக அடிக்கவோ, திட்டவோ செய்கிறாள். இது அன்பின் விளைவாக அமைகிறது.
அதேபோல் கணவன், மனைவியிடையே சில நேரங்களில் கோபம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. கணவன் மனைவியைக் கோபத்தினால் திட்டினாலோ அல்லது சண்டைப் போட்டாலோ தன் கணவர் அன்பினால் தான் கோபப்படுகிறார் என்று அதனை மனைவி எடுத்து கொண்டால், அவர்களது உறவில் எந்தவிதச் சிக்கலும் ஏற்படுவதில்லை. அதேபோல் மனைவி, ஓர் ஆணவத்தில் கணவர் தன்னைத் திட்டுகிறார் என எடுத்துக்கொண்டால் உறவில் சிக்கல் ஏற்படுகிறது. அவள் அதை அன்பின் நோக்கத்தோடு பார்க்காமல் ஆணவத்தின் நோக்கத் தோடு பார்த்தால் தான் இந்த நிலை. எனவே தான் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் பல உறவுகள் பிரிந்து போகவேண்டிய நிலை உருவாகிறது. கணவன் அன்பினால் திட்டும்போது அதை மனைவி ஆணவத்தின் கோபத்தால் நோக்கும்போது, உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. இதேபோல் தான் அண்ணன் – தம்பி, அக்கா – தங்கை, நண்பர்கள் தங்கள் ஆண வத்தின் கோபத்தில் பிரிந்து வாழ்ந்து கொண்டிருக் கின்றனர். ஏன் உறவுகளில் விரிசல்கள் ஏற்படுகின்றன என்று சற்றுச் சிந்தித்து பார்த்தால் அன்பு இல்லையென்றே சொல்லலாம்.



அன்பு தன்னலம் நாடாது. சினம் கொள்ளாது. அன்பு எமது மனத்தில் இருந்தால் நாம் எதையும் ஆணவத்தின் நோக்கத்தோடு பார்க்க மாட்டோம். அன்பு குறையும் போது அங்கு ஆணவம் மேலோங்கி நிற்கிறது. அன்பு வளரும் போது தான், நான் என்ற நிலைமாறி நாம் என்ற நிலை வரும். ஆனால் ஆணவம் வளரும் போது நாம், நம்மில் என்ற நிலை மாறி தான் மட்டும் என்ற நிலை வரும். தான் என்ற நிலை வரும்போது பிரிதல் என்ற சூழ்நிலை உருவாகிறது.
இன்றைய சூழ்நிலையில் நாம் கோபத்தினால் நாளைய உறவுகளில் பாதிப்புகளை ஏற்படுத்திக் கொள்கிறோமா? இல்லை, அந்தக் கோபத்தை அன்பின் வெளிப் பாடாக எடுத்துக் கொண்டு உறவை வளர்த்துக் கொள்கிறோமா! என்பதை நாம் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## மழையே!.. மழையே!...

மழையே மழையே வருவாய்
குழைகளை நனைக்க வருவாய்
குழிகள் தோண்டி நாமும்
குசும்பாய் விளையாட வருவாய்!

மண்ணை நனைத்துக் கூழாக்கி
சின்ன விரல்களில் அப்பிட
குழைத்து மண்ணைப் பிசைந்திட
மழையே மழையே வருவாய்!

மழைநீர் குழியுள் நிறைய
மகிழ்வோம் எமது கிணறென்று
கவட்டைக் கம்புகள் இரண்டு
கிணறு அருகில் ஊன்றுவோம்.

அச்சுலக்கையோடு சிலுவையாக்கும் தடி
அமரும் துலாவாகக் கவட்டையில்
கயிறு வாளி தேடியிணைத்து
கிணறு இறைப்போம் மகிழ்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மாவிட்ட புரம் தெற்கு பட்டிக் கடவையில் 7 பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம்.

தொடர்பு : 077 169 8487

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை மகாஜன கல்லூரி வீதியில் யூனியன் கல்லூரிக்கு மிக அருகாமையில் 5 பரப்புக்காணி உடனடிவிற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம். நேரில் வரவும். தொடர்பு : 077 276 1259


Majestic Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் CEYLON THEATRES




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

FROM 19 JUNE




விசாரணை ☎ 021-2227712

CeylonTheatres www.ceylontheatres.com


## யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்க பொதுக்கூட்டம்

எமது பழையமாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.06.2015 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பவளவிழா மண்டபத்தில் நடைபெறும். எனவே அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுவதுடன், புதிய அங்கத்தவர்களாக சேர விரும்புவோர் படிவத்தை 19.06.2015 முன்னர் கல்லூரியில் பெற்று இணைந்து கொள்ளவும். (60875) -செயலாளர்

## கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் இணையம்(வது) பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரல்

பதவி : பொதுமுகாமையாளர் -101 -11 (சுற்று நிருப இலக்கம் 4/2012ன் படி)

சம்பள அளவுத்திட்டம் 10450 -100X10 -110X10- 12550 (66/2006 சுற்றுநிருபம்)
66/2006 இன் படி சேர்க்க வேண்டிய 10%
02/2015(1) இன் படி சேர்க்க வேண்டிய 30% உள்ளடங்களாக

வாழ்க்கை செலவுப்படி ரூபா 7800/= (05/2015 சுற்று நிருபத்திற்கமைவாக வழங்கப்படும்)

தகைமைகள்

அ). கூட்டுறவுப்பணியாளர் 12வது சம்பளத்திட்ட பதவியில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் ஆகக்குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்.

ஆ). அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு சமமானது

அல்லது

இ).கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 01 வருட கால அனுபவம்/க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டதிலான பதவியில் ஆகக்குறைந்தது 01 வருடம் சேவையாற்றிய அனுபவம்.

வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை
கூட்டுறவுச்சங்கங்களில் சேவையில் உள்ளோர்கள் சேவை செய்யும் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கலாம். சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை தேவையில்லை.

விண்ணப்பங்கள் அனைத்தும் தங்களது சுயவிவரத்துடன் தலைவர் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் ஏ9 வீதி கரடிப்போக்கு கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 25.06.2015

கூட்டுறவு சேவையிலுள்ள
சி.முத்துக்குமார்,தலைவர். (57122) திகதி 12.06.2015


## ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி மாரி அம்மன் பண்டிதர் ஸ்ரீ ராமலு

T.P 076 770 0820

மெய்யன்பர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிடர் வல்லுநர் கைரேகை மூலம் துல்லியமான நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை, சாதகம், கல்வி, உத்தியோகம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப்பயணம் பற்றிய விவரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

இல 185, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
(நியூ லலிதா மாளிகை) மீனாட்சிதங்கமாடம்
நேரம் காலை 7.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை பார்க்கப்படும்.


## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாள்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10/= ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்கு 29.06.2015ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

01. பதவி: சந்தைப்படுத்தல் முகாமையாளர் (நிரந்தரம்)
பதவி இல: 165/88 இன் படி சம்பள குறி இல:106/09
வெற்றிட எண்ணிக்கை : 01
சம்பள அளவுத்திட்டம்: 66/06 இன் படி 10950-130x10-140x10-13650.00

(மேற்படி சம்பளத்திட்டங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட 10% சம்பள உயர்வு, 15% சம்பள உயர்வு, 30% சம்பள உயர்வு என்பனவும் இலாபம் வரும் மாதங்களில் மட்டும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கு அமைவான வாழ்க்கைச் செலவுப்படியும் சேர்த்து வழங்கப்படும்)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 10 ஆம் சம்பளத்திட்ட முகாமை/தொடர்புபட்ட துறையில் மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 11ஆம் சம்பளத் திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் விற்பனவு/பொருள்கள் வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தல்/பொருள்கள் ஏற்றுமதி/இறக்குமதி அலுவல்கள் ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் முகாமைமட்ட பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த.(உயர்தரம்) சான்றிதழ் பரீட்சையில் மூன்று (3) பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் விற்பனவு/பொருள்கள் வழங்குதல் மற்றும் இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் முகாமைமட்ட பதவியொன்றில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

பொதுவான நிபந்தனைகள்:

1. வயது 29.06.2015 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றறிக்கைக்கமைவாக ரொக்கபிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. சங்க பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
6. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும் இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

13.06.2015 (C/17642)(10.6) தலைவர்.


# வெளிவந்துவிட்டது

# இந்து மத மாத இதழ்




* நாகம் பூசித்த நாகம்மாளின் முகப்புப் படம்
* நாகமணிப் புலவரின் நயினை மாண்மியம்
* அமுதசுரபியின் அன்னதானம்
* முத்துக்குமாரசுவாமியாரின் தரிசனம்
* ஏன் அக்கினிப்பிரவேசம்
* ஈழத்தில் வீரசைவம் என நவரசம் ததும்பும் பல்வேறு பகுதிகளுடன்

## "ஞானக்கதிர்"

பிரதிக்கு முந்துங்கள்

வர்ணப்படங்கள் - வாழ்வுக்குகந்த சிந்தனைகள் வயது வேறுபாடின்றி

எல்லோரும் வாசிக்கக் கூடிய கையடக்கமான சஞ்சிகை

பிரபல புத்தகசாலைகள் 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகை விற்பனை முகவர்களிடம் கேட்டுவாங்குங்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கை மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

இந்திய அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை மீனவர்கள் ஐவரையும் விடுவிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறித்த மீனவர்கள் ஐவரும் தற்போது சென்னையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் லால் டி சில்வா தெரிவித்துள்ளார்.
இதேவேளை– 25 இந்திய மீனவர்களும் அவர்களின் 37 ட்ரோலர் படகுகளும் இலங்கை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், இதனால் மீனவர்களின் விடுவிப்பு தொடர்பில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (த–ரி)

## மரண அறிவித்தல்கள்

### பாலசுந்தரம் குமாரரத்தினம்

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் கனடா றொரன் ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் குமாரரத்தினம் (குமார்) 09.06.2015 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் சவுந்தரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் அன்புக் கணவரும், மதனகுமார், பாலகுமார், பகீரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தர்ராசா, மகேசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி, காரைநகர்
T.P: 077 609 3061 (60858)(10.6.3) தகவல்: K. சிவம்

### சீனித்தம்பி ஈஸ்வரன்



குரும்பசிட்டியைப்பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சீனித்தம்பி ஈஸ்வரன் 11.06.2015 வியாழக்கிழமை கால மானார்.
அன்னார் குகராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற துவாரகன் மற்றும் சிந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலீபனின் (Swiss) அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.06.2015) வெள்ளிக்கிழமை சிங்கப்பூரில் நடைபெற்றன.
அன்னாரின் இரங்கல் நிகழ்வு எதிர்வரும் 19.06.2015 வெள்ளிக்கிழமை நீர்வேலி தெற்கு நீர்வேலியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
தொடர்பு:- 006 585 513 874
or (075 042 0577)
(60873)
தகவல்:-
மனைவி, மகள்,
மருமகன்.

### கதிர்காமு சின்னத்துரை



இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் ஆரம் பகால உறுப்பினரும், மாவட்ட அபி விருத்திச் சபையின் முன்னாள் அங்கத்தவரும் புத்தூர் கிராம சபையின் முன் னாள் தலைவரும், பல பொது நிறு வனங்களின் ஆரம்ப கர்த்தாவும் ''தமிழரசு'' என எல்லோராலும் அழைக்கப்பட்டவருமான ஆவரங்கால் சின்னத்துரையின் இறுதிக்கிரியையும், அதை ஒட்டிய அஞ்சலி நிகழ்வும் நாளை (14.06.2015) ஞாயிற்றுக் கிழமை அன்று ,இலங்கைதமிழரசுக் கட்சி கோப்பாய் தொகு திக்கிளை யினால் நடத்த ஏற்பாடாகி உள்ளது. கட்சி உறுப் பினர்கள், நண்பர்கள், அபிமானிகள், யாவரையும் கலந்து அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

அ. பரஞ்சோதி
கோப்பாய் தொகுதிக்கிளையின் செயலாளர்.
உறுப்பினர் வட மாகாண சபை

### பொன்னம்பலம் செங்கமலம் (கண்மணி)

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர், Green Memorial Hospital Manipay)



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பொன்னம்பலம் செங்கமலம் (கண்மணி) நேற்று (12.06.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, லெட்சுமி, மாரிமுத்து, கனகம்மா மற்றும் சிவகங்கை காலஞ்சென்ற விக்கினராஜா மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பழனித்துரை, குமாரசுவாமி, சிவசம்பு, சதாசிவலிங்கம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.
தகவல்:
சகோதரிகள், பெறாமக்கள்.

## உரிய சிகிச்சை பெறாத பெண் உடலில் கிருமி பரவிச் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 13
முன்னரே காய்ச்சல் இருந்தபோதும் அதற்கு உரிய சிகிச்சை பெறாததனால் உடல் முழுதும் கிருமித்தொற்று ஏற்பட்டு இளம் குடும்பப் பெண் பரிதாபகரமாக உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி கல்வயலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த மகாலிங்கம் சந்திராமணி (வயது – 37) என்பவரே சாவடைந்தவராவார்.
கடந்த ஒரு மாதமாக காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாக உறவினர்களால் கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு பனடோல் அருந்தியதாகவும் மறுநாள் காலை அவர் சடலமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.
நீதிவானின் பணிப்புரைக்கமைய திடீர் சாவு விசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டபின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.
அந்தப் பெண்ணின் உடற்கூற்றுப் பரிசோதனையின்போதே குறித்த பெண் உரிய மருத்துவ சிகிச்சையைப் பெறாததால் உடல் முழுதும் கிருமித் தொற்று ஏற்பட்டு உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ நிபுணரின் அறிக்கை கூறுகிறது. பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த–4–9)

## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை தர்மலிங்கம்



வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தர்மலிங்கம் (ஓய்வு பெற்ற கணக்காளர்-தனியார் துறை) நேற்று (12.06.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலம் சென்றவர் களான முருகேசு - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் ராஜேஸ்வரியின் அன்பு கணவரும் கோமதி (திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - நல்லூர்), லோஜன் (டுபாய்), தர்சினி(கணினிப்பயிற்றுனர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகாந்தன் , ஜீவா ஆகியோரின் அன்பு மாமனாரும் நோஷிகன், கர்சனா, சஷ்ரிகன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலம்சென்ற அன்னலட்சுமி மற்றும் அமிர்தலிங்கம்(அவுஸ்திரேலியா), கமலாம்பிகை (கனடா), சௌந்தரம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரனும் ராஜேஸ்வரன்(லண்டன்), யோகேஸ்வரன்(ஜேர்மனி), மதுரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரட்ணம் (கொழும்பு), ஆனந்தசோதி(ஜேர்மனி), ஆனந்தவாணி(ஜேர்மனி),சதா(ஜேர்மனி), ரவி(கனடா), ரகு(கனடா) காலம்சென்ற பத்மதாஸ் மற்றும் தவேந்திரா (கனடா), யுவேந்திரா (கொழும்பு) ஆகியோரின் அன்புமாமனாரும் சுகந்தினி, சிறிகரன்(அவுஸ்திரேலியா), பிருந்தன் (அவுஸ்திரேலியா), பிரேமி(அவுஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(14.06.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:-
077 6200805, 0777 878632
தகவல் :- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
28
*
05
*
1926



மறைவு
10
*
06
*
2015

சிவதலம் சிந்தனையாளர்

### தமிழரசு க. சின்னத்துரை (J.P)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட கதிர்காமு சின்னத்துரை அவரது ஆவரங்கால் ''தமிழரசி'' இல்லத்தில் கடந்த (10.06. 2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அண்ணர் திரு.திருமதி கதிர்காமு தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லபிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இராசலிங்கம் மற்றும் பாலசுந்தரம், செல்லப்பாக்கியம், பரமேஸ் வரி, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கதிரிப்பிள்ளை, சண்முகநாதன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சிறிவசந்தமல்லிகா, சிறி வசந்தேஸ்வரன், சிறிவசந்தமாலா, சிறிவசந்தறோசா, சிறிவசந்தநிலா, சிறி சிவதர்சினி, தர்மேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அண்ணரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதி அஞ்சலி நிகழ்வுக்காக மு.ப. 11.00 மணிக்கு ஆவரங்கால் இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல்தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''தமிழரசிவாசா''
வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால்.
தகவல்:
குடும்பத்தினர்.

## சடலமாக மீட்கப்பட்ட பெண் கொலை செய்யப்பட்டுள்ளார்

யாழ்ப்பாணம், ஜூன் 13
பூநகரியில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்ட பெண், ஏதோ ஒரு பொருளால் முகத்தில் வைத்து அமிழ்த்தப்பட்டு மூச்சுத் திணறலுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்பது உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.
அவரது வீட்டிலிருந்த பணம், நகைகள் என்பனவற்றையும் காணவில்லை என்று அவரது கணவன் முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பூநகரி சித்தன்குறிச்சி என்ற இடத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த கருணாநிதி லலிராணி (வயது 30) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அவர் 3 வயதுக் குழந்தையின் தாய்.
அவரது கணவன் நேற்றுமுன்தினம் அதிகாலை 3.40 மணியளவில் கடற்றொழிலுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டதாகவும் காலை 7 மணியளவில் வீடு திரும்பியபோதே சம்பவம் தெரியவந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.
குறித்த சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டது. நேற்று நடந்த உடற்கூற்றுப் பரிசோதனையின் போதே அவரின் வாய், மூக்கு என்பன தலையணை போன்ற ஏதோ ஒரு பொருளால் முகத்தில் அமுத்தப்பட்டு மூச்சுத் திணறல் ஏற்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்பது தெரியவருவதாகப் பரிசோதனை அறிக்கையில்கூறப்பட்டுள்ளது. (த–4)

## நல்லூர் ஆலயத்தில் சி.சி.ரி.வி கமராக்கள்



யாழ்ப்பாணம், ஜுன் 13
நல்லூர் கந்தசுவாமி கோயிலின் உள்ளேயும், வெளியேயும் சி.சி.ரி.வி கமராக்கள் கோயில் நிர்வாகத்தினரால் பொருத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இவை பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. நல்லூர் கோயில் திருவிழாக் காலத்தில், பெருமளவான பக்தர்கள் ஒன்றுகூடுவது வழமை. இதன் போது திருட்டு நடவடிக்கைகள் இடம் பெற்று வருவது வழமையாகியுள்ளது. பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தாலும், சிவில் உடையில் பொலிஸார் உள் வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்தாலும் தொடர்சியாகத் திருட்டு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இவ்வாறானதொரு நிலையில், நல்லூர் கோயிலின் முக்கிய இடங்களில்உள் வீதியிலும், வெளி வீதியிலும் சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றே இதனை மேற்கொண்டுள்ளது. 16 சி.சி.ரி.வி. கமராக்கள் வரையில் பொருத் தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பாஷையூர்
# ...ார் ஆலயப் பெருவிழா

## ...6.2015 -



...களையும் தம் அருஞ்செயல்களால் அன்போடு அரவணைக்கும் கோடி அற்புதர் ஆவார்

புனித அந்தோனியார் குழந்தை இயேசுவைக் காட்சியில் கண்டு கையில் ஏந்தியதாக கூறப்படுகிறது. இதனால்தான் புனித அந்தோனியார் ஒரு கையில் குழந்தை இயேசுவையும் மறு கையில் வேதாகம நூலையும் வைத்திருப்பதாக படத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது.

கோடி அற்புதர் புனித அந்தோனியார் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க அரசு நீதியோடும் நேர்மையோடும் பணியாற்றி எல்லோர் வாழ்விலும் மகிழ்வும் சுதந்திரமும் சுபீட்சமும் நிறைய தம் அருள் வளங்களை அள்ளிப் பொழிவாராக.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை ஊடக விரிவுரையாளர்
- யாழ் பல்கலைக்கழகம்

## பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம்

164 வருட சிறப்புமிக்க பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயமானது அதன் வருடாந்த திருவிழாவை கொண்டாட ஆயத்த மாகும் இவ்வேளையில், பங்குத்தந்தை அருட்திரு ரோய் பேடினன்ட் அடிகளாருக்கும், உதவிப் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்குமக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும், செபங்களையும் கூறி நிற்கின்றேன். மேலும் அதன் மகத்தான சிறப்புக் களில் ஒரு சிலவற்றை பகிர்ந்து கொள்கின்றேன். பாஷையூர் பங்கானது 1850ஆம் ஆண்டிலிருந்து தனிப் பங்காக செயற்பட்டு வருகின்றது. காலத்துக்குக் காலம் அர்ப்பணமிக்க பங்குதந்தையரின் மேற்பார்வையிலும் ஆர்வமிக்க பங்கு பொதுச்சபை உறுப் பினர்களின் பங்களிப்புடனும் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. கடல்வளம், மொழிவளம், கலைவளம் கொழிக்கும் பாஷை யூர்ப் பங்கானது யாழ்ப்பாண மாநகரின் ஓர் ஆசீர்வாதம் நிரம்பிய ஒரு சொத்தாகும். விளையாட்டுத் துறையிலும் சரி, கலைத் துறையிலும் சரி, கல்வித் துறையிலும் சரி நற்பிரசைகளை உருவாக்கி ஊருக்கும் உலகிற்கும் பெருமை தேடித் தருவது இவ் வூரின் தனிச் சிறப்பாகும்.

1844, 1845ஆம் ஆண்டுகளில் தியான சபை (ORATORIAN) குரு அருட்திரு கபிரியேல் ஜோகின் அடிகளாரால் ஆரம்பக் கோயில் கல்லால் கட்டப்பட்டது. இருப்பினும் இக்கோயில் இதற்கு முன்னைய காலத்தில் கிடுகுகளால் கட்டப்பட்டதாகவும் கருதப்படுகின்றது. 1906ஆம் ஆண்டு இக்கோவில் அருட்திரு கௌதியர் அடிகளாரால் புதிய பரிணாம வளர்ச்சி பெற்றது. பழைய கோவில் இடிக்கப்பட்டு ஒரு புதிய கோவில் கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து அருட்தந்தை விக்டர் டெஸ்லான்ஸ் அடிகளாரின் விசேட பங்களிப்பும் இக்கோவிலுக்குக் கிடைத்தது. 1911ஆம் ஆண்டுகளில் விசாலமான 106×38 அளவு கொண்ட யன்னல்கள் கோவிலின் மேல் பக்கத்திலும், இருமருங்கிலுமுள்ள சாலைகளும் (விராண்டாக்களும்) கட்டிமுடிக்கப் பட்டன. அருட்திரு பவுறில் அடிகளாரின் ஆன்ம தாகத்தில் 1918ஆம் ஆண்டு பெல்ஜிய நாட்டிலிருந்து பெறப்பட்ட உயி ரோட்டமுள்ள சிலுவைப் பாதைப் படங்கள் நிறுவப்பட்டன. எமது கோவிலின் 100ஆவது வருட நினைவுச் சின்னமாகிய சிங் காரத் தேர் 1950ஆம் ஆண்டிலிருந்து வெகுவிமரிசையாகப் பவனி வருகின்றது.

கோவில் திருவிழாவையொட்டி சிறப்பான பல அம்சங்கள் நடைபெறுவது வழமை. ஆனி முதலாம் திகதி கொடியேற்றம் இடம்பெறும். 3ஆம் திகதி ஊரின் துறைமுக வாயிலில் கடல் அந்தோனியார் என்று அழைக்கப்படும் சுருவத்தின் அண்டை சென்று வழிபாடு நடத்துவது தனிச்சிறப்பாகும். 4ஆம் திகதியிலிருந்து நவநாள்கள் தொடர்ச்சியாக சிறப்பு மறையுரைகள் மூலம் நடைபெறும்.

13ஆம் திகதி காலையில் திருவிழா திருப்பலி ஆயரின் தலைமையில் நடைபெறும். இன்று மாலை திருத்தேர் பவனி நடைபெறும். சக வீதிகளும் அழகாக அலங்கரிக்கப்பட்டு வர்ண மின் விளக்குகளால் சோடனை செய்யப்பட்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாகும். இவ்வரிய காட்சியை காண்பதற்கும், ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும், புனித அந் தோனியாரின் பரிந்து பேசுதலை பெறுவதற்கும் இனம், மதம், மொழி பேதமின்றி மக்கள் ஒன்று கூடுவர். கேட்டவருக்கு கேட்ட வரம் அளிக்கும் புதுமை வள்ளல், கோடி அற்புதர், நாவழியா வரத்தர் புனிதர் அந்தோனியாரின் ஆசீர்பெற மக்கள் வெள்ளம் ஆனி மாதம் முழுவதும் பாஷையூரை மக்கள் வெள்ளமாகவே காட்சியளிக்க வைக்கும். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரு விழாக் காலங்களில் மாத்திரமல்லாமல் தினசரி விஷேடமாக செவ்வாய்க்கிழமைகளில் இக்கோவிலை தரிசித்து புனித அந் தோனியாரின் பரிந்து பேசுதலால் ஆன்ம உள சுகம் பெறுவது அன்றாடம் காணும் காட்சியாகும். இத்திருவிழாவானது பாஷை யூர் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தும் ஓர் அழகான சந்தர்ப்பமாகும். இத்திருவிழாவிற்காக வெளிநாடுகளில் பணிபுரியும் பங்கு மக்களும், இலங்கையின் ஏனைய பாகங்களில் பணிபுரியும் ஊர்மக்களும்,பாஷையூர் பங்கு மக்களும் ஒன்றாக கூடுவர். இவ்வரலாற்று சிறப்புமிக்க புனித அந்தோனியார் அருளைப்பெற உங்கள் அனைவரையும் திருவிழாவிற்கு அழைக்கின்றோம்.

அருட்தந்தை கே.நே.ஏபிரகாம்
(முத்து-பங்குமகன்), நுவரெலியா.

புனித அந்தோனியாரின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்
உங்களுக்குத் தேவையான பாண், பணிஸ் பட்டர் கேக், ஐஸ்கிறீம், சோடா வகைகள்
சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

குமார்
பேக் ஹவுஸ்
T.P: 021 320 6392
சென்.செபஸ்தியான் வீதி, பாஷையூர்.

ஜனசக்தி காப்புறுதி

மனதிற்கு சக்தி - ஆயுள் காப்புறுதி
ஜனசக்தி பி.எல்.சி

கிருபா
லேணர்ஸ்

Regd No.DS/589
(அரச அங்கீகாரம்பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
Kiruba Learners
Govt.Approved A Grade Driving Training School
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 4353, 021 492 3200, 0777 225292

Luxon
Communication
I.D.D, Local, E.mail, Fax , Liminating, Scanning, CD Writing, Printing, Browsing, Western Union
60,Eachchamoddai Road, Jaffna.
T.P: 021 222 6897
Fax: 021 222 6169
E.mail: luxoncom@yahoo.com

ரெம்சி ஸ்ரோஸ்
பல் பொருள் வாணிபம்
2ஆம் குறுக்குத் தெரு
பாஷையூர்
யாழ்ப்பாணம்.



ஆகாஸ் பான்சி குட்ஸ்
தையல் தொழிலகம்
ஆண், பெண்களுக்கான ஆடைகள் குறித்த
நேர காலத்தில் ஓடருக்குத்
தைத்துக் கொடுக்கப்படும்.
பீச் றோட், ஈச்சமோட்டை.

New Nelson Learners
நியூ நெல்சன் லேணர்ஸ்
அனைத்து வாகனங்களுக்குமான சாரதிப் பயிற்சியும்.
சாரதி அனுமதிப்பத்திரமும் பெற்றுத்தரப்படும்.
89, Kandy Road, Chundukuli, Jaffna.
T.P: 021 222 4527, 077 358 1916 Fax : 021 222 9109
127, Pointpedro Road, Nelliyadi, Karaveddi, T.P: 021 492 3115
79, Ramalingam Veethy, Chavakachcheri, T.P: 021 492 3114

கீர்த்திகா ஸ்ரோஸ்
பல்பொருள் வாணிபம்
பிரபல பத்திரிகை முகவர்
கடற்கரை வீதி, பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி அருள்மிகு சிட்டிவேரம்



# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## - 13.06.2015 -



### ஆலய வரலாறு

ஈழத்திரு நாட்டின் சிரசு என விளங்கும் யாழ்ப்பாணத்தில் நீண்டுயர்ந்த பனை, தென்னை, நெல்வயல்கள், களனிகள் தோட்டங்கள் என வளம் பல கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பிரதான வீதியில் ஏறத்தாள 05 கிலோ மீற்றர் தூரத்தில் வரணி எனும் பழமை பேணும் பழம்பெரும் கிராமத்தில் சோலைகள், வாவிகள் சூழ்ந்து காணப்படும் இடத்தில் வீதியின் மேற்குப் புறமாக இந்தச் சுட்டிபுரம் ஆலயம் அமைந்துள்ளது.

முற்காலத்தில் இப்பகுதியில் சித்தர்கள் பலர் வாழ்ந்து வேதித்த இடமாதலால் இந்த இடம் சிட்டிவேரம் எனப் பெயர்பெற்றது. சிட்டி+வேரம் என்பதே காலக் கிரமத்தில் மருவி சுட்டிபுரம் என வந்ததென அறியப்படுகின்றது.

இந்த ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற சிறப்பைத் தருகின்றது.

மூர்த்தி. சிட்டிவேரம் கண்ணகை அம்பாள்
தலம் : வரணி சிட்டிவேரம் (சுட்டிபுரம்)
தீர்த்தம்: தும்புருவில்
தல விருட்சம்: பாலை

முன்னொரு காலத்தில் தும்புரு எனும் முனிவர் இத்தீர்த்தத்தில் நீராடி அம்பாளை பூசித்ததாகவும் அதனாலேயே இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் பல சித்தர்களும் யோகிகளும் இத் தீர்த்தத்தில் நீராடி அம்பாளை வழிபட்டதாகக் கூறப்படுகின்றது. இத்தீர்த்தத்தில் வெண்தாமரை, செந்தாமரை நீலோற்பலம், செங்கழுநீர் போன்றவற்றையும் பல மூலிகை அம்சங்களும் உள்ளன. ஈழத்திலே கண்ணகி வழிபாட்டுக்கு தனித்துவமான இடம் உண்டு. இவ்வழி பாடு தென்னிந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்ததென வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. கண்ணகி பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு சிலம்பை உடைத்து உண்மையை நிலைநாட்டி தாம் கொண்ட சினத்தால் மதுரையை எரித்து, சினம் தணிந்து, கடல் கடந்து இலங்கைக்கு வந்ததாகவும், இங்கு 10 இடங்களில் கோயில் கொண்டதாகவும் அவ்வாறாக கோயில் கொண்ட ஐந்தாவது இடமே சுட்டிபுரம் எனவும் கூறப்படுகின்றது.

இந்த ஆலயத்தில் புராதன காலம் தொடக்கம் கோவலன் கண்ணகி கதைபடிக்கப்பட்டு வருகின்றது. இதன் காப்புச் செய்யுள் கேட்கும்போது வடமராட்சி கிழக்கு குடாரப்பு எனும் கிராமத்தைச் சேர்ந்த கந்தர் வெற்றிவேல் என்பவரால் எழுதப்பட்ட ஏடாக கொள்ளப்படுகிறது.

இன்னும் பல சிறப்புக்களும் அற்புதங்களும் வாய்ந்த இவ்வாலயத்தில் கண்ணகித் தாயார் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்றார். நாமும் கண்ணகித் தாயை வழிபாடு செய்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்திபெறுவோமாக.

ஆலய பரிபாலன சபை

இந்தியன் மற்றும் இலங்கைத் தயாரிப்பு ஆடைவகைகளை தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
மணிகண்டன் புடைவையகம்
ஏ9 வீதி, கொடிகாமம்.
தொலைபேசி: 077 9568251

துர்க்கன் ரெறாசோ வேலைதா
ரெறாசொ பதித்தல் மற்றும் வர்ணப்பூச்சு, கட்டட வேலைகள், மாபிள்பதித்தல்,
அலுமினியப்பிற்றிங் போன்ற சகல வேலைகளுக்கும்.
உரி
பிரகாசம் - து
மயிலணி, சுன்
077 125 4594, 077

உ தயகுமார் களஞ்சியம்
சகலவிதமான பலசரக்கு பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சந்தை உட்புறம், கொடிகாமம்.

சிறி வெற்றிலைக்கடை
கோயில் அபிஷேகப் பொருள்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள், வாழைப்பழம், வெற்றிலைபாக்கு ஆகியன மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சந்தை உட்புறம், கொடிகாமம்.
077 278 4730, 077 844 9736

அம்பாள் அடியார்கள் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்
சின்னையா ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி, கொடிகாமம்.
SINNIAH STORES
Kandy Road, Kodykamam.

கண்ண
சேர்விஸ்
உரிமையாளர்:S
பருத்தித்துறை வீ
077 43

V.T.MODERNS MART
கதிரை, மெத்தை, ஆலயப்பொருள்கள், அன்பளிப்பு பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மற்றும் சகல விதமான பொருள்களுக்கும் நாடவேண்டிய இடம்
வீ.ரீ. மொடேர்ன்ஸ்மார்ட்
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
K.K.V: 077 315 1454

சகலவிதமான மளிகைப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளும் இடம்
இராஜேஸ்வரி பலசரக்கு மளிகை
ஏ9 வீதி, கொடிகாமம்.

கலைவர்த்தகக் கல்லூரி
பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்பு அழகுசாதனப்பொருட்கள், போட்டோகொப்பி போன்றவற்றிற்கு நாடுங்கள்.
ஸ்ரீகருணா மல்ரிசொப்
பருத்தித்துறைவீதி, வரணி.
077 077 3504

கிங்ஸ் பதிப்பக
KINGS PRINTE
Four colour works, Books, Bill Book, Certifica
Reports, Computer - Designing, Weeding Car
Education Exam Papers, Colour Printing, Phot
Screen Printing, Bennares, Rubber stsmps,et
T.P: 021 205 0495 kingsprint

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தாரர்
த்தல்,
உரிமையாளர்:
சம் - துர்காதரன்
, சுன்னாகம்
94, 077 246 2916

**Shanthan Elecrician**
**சாந்தன் எலக்றீசியன்**
உரிமையாளர்: இ.சாந்தருபன்
வீட்டு மின் இணைப்பு உபகரணங்கள் திருத்துதல், Dish இணைத்தல், Dishcard செயற்படுத்துதல், நீர்க்குழாய் பொருத்துதல், மோட்டார் திருத்துதல் மற்றும் T.V பழுது பார்த்தல் போன்ற அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
சந்தை வீதி, கொடிகாமம். 077 844 8024, 021 205 0305

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
**ரூபி நகைமாளிகை**
கண்டி வீதி, கொடிகாமம்.
077 617 3046, 077 241 8473, 021 205 0378

னகை
பிஸ் நிலையம்
பாளர்:S.சந்திரமோகன்
துறை வீதி, கொடிகாமம்.
077 437 8950

**இராசன் மரக்கறிக்கடை**
சந்தை உட்புறம், கொடிகாமம்.
Tel: 077 271 9921

**மகேந்திரன் ஸ்ரோர்ஸ்**
மளிகைப்பொருள்களைப் பெறுவதற்கு உகந்த இடம்.
வரணி, இயற்றாலை, வரணி.

தரமே என்றும் நிரந்தரம்,
**Rajese Tone**
**இராஜேஸ் Tone Prodections**
கண்கவர் வண்ணம் கலை அம்சம்
Video, Photo, பந்தல்சேவை, Sounds and light
மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.
077 7111 705, 077 1275 288


பகம்
NTER
, Certificates,
eding Cards,
nting, Photocopy,
stsmps,etc.
gsprint14@gmail.com

பலசரக்குப் பொருள்கள், கட்டடப்பொருள்கள், என்பவற்றிற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்
**மணியம்**
**களஞ்சியம் பல்பொருள் வாணிபம்**
பழைய பஸ்நிலையத்தில் இயங்கிய ஸ்தாபனம் புதுப்பொலிவுடன் எதிர்ப்புறமா[illegible] இயங்கி வருகிறது.
கண்டி வீதி, கொ[illegible]காமம்.

ஏ9 இல் இயங்கிய
**அருண் ரெக்ஸ்ரைல்ஸ்**
தற்போது கச்சாய் வீதியில் (பொலிஸ் நிலையம் அருகில்) புதுப்பொலிவுடன் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.
சகலவிதமான ஆடைத்தெரிவுகளுக்கும்
அருண்ரெக்ஸ்ரைல்ஸ்
T.P: 021 205 0329

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
**வதனி நகை மாடம்**
தங்க பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
கண்டி வீதி, கொடிகாமம். தொ.பே. 077 800 2724


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ய
# அந்தோனியா
# - 13.06

## மரணித்து இரத்தசாட்சியாக திகழவிரும்பியவரே கோடி அற்புதரானார்



பதுவை நகர் புனிதர் தூய அந்தோனியார் கோடி அற்புதரின் திருவிழா இன்று. தூய அந்தோனியாரின் திருத்தலம் நாடி பல்லாயிரக்கணக்கான மக்கள் செல்லும் அற்புதநாள். தேடிவரும் பக்தர்களின் குறைநீக்கும் அற்புதர் இவர். பாஷையூர் மண்ணில் எழுந்தருளி இருக்கும் இப் புனிதரின் பரிந்துரை எம் அனைவருக்கும் அவசியமானது. இப்புனிதர் மனிதர்களுள் மாணிக்கமானவர். நீண்டகாலம் வாழத்துடிக்கும் மனிதர்களுள் இயேசுவுக்காக மரணிக்க வேண்டும் என்பதற்காக தனது துறவற சபையை மாற்றிக்கொண்டவர். ஆனால் இறைதிட்டமோ வேறுவிதமாக மாறியது. ஆண்டவர் இயேசுவை தனது கரங்களில் தாங்கிக் கொள்ளவும் , கோடி அற்புதங்களை செய்யவும் இறைவன் அவர் மட்டில் விருப்பங்கொண்டார்.

இவரது பரிந்துரை எமக்கு இந்த நவீன காலத்தில் அவசியமானது. இது சொத்து சேர்க்கவும், வரங்கள் பெறுவதற்கும் மட்டுமல்ல. இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வதற்கே மிக முக்கியம். இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி வாழ்ந்த புனிதரின் வழியில் நாமும் பயணிப்போம். புது உலகம் நாம் படைப்போம்.

இவ்வாண்டு திருவிழா எம்பங்குக்கு மிக முக்கியமான விழா. எம் மண்ணின் மைந்தன் பாகிஸ்தான் ஆயர் அதிவணக்கத்திற்குரிய விக்ரர் ஞானப்பிரகாசம் அடிகளார் இப்பலியை தலைமை தாங்கி ஒப்புக் கொடுப்பது இரட்டிப்பான மகிழ்ச்சி தருகின்றது. ஆயரின் பணிகள் சிறக்க வாழ்த்தி செபிக்கின்றோம்.

எம் புனிதரின் பதி அழகுபடுத்தப்பட்டு வருகின்றது. புதிதாக அமைக்கப்பட்ட மெழுகுதிரி கடைத்தொகுதி இன்னும் பல அபிவிருத்தி திட்டங்களுக்கு வழிகாட்டி நிற்கின்றது. திருவிழாவை தொடர்ந்து இன்னும் பல பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளது. இதற்காக உங்கள் செபங்களையும் காணிக்கைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

இறைதாகம் கொண்டோரே தேடி ஓடி வாருங்கள் இறையருள்பெற்று வாழ்வடையுங்கள்.

தோழமையில் அருட்பணி சி.லீயோ ஆம்ஸ்ரோங்
பங்குத்தந்தை, தூய அந்தோனியார் ஆலயம், பாஷையூர்.

## பாஷையூர் புனித அந்தோனியார் கத்தோலிக்க மக்களை மட்டுமல்ல - இந்து சமய மக்களைய

யூன் மாதம் 13 ஆம் திகதி புனித அந்தோனியார் இவ்வுலக வாழ்வை முடித்து இறைவனோடு இணைந்து கொண்ட தினத்தில் புனித அந்தோ பெருவிழாவை உலக கத்தோலிக்க திருச்சபை வெகு சிறப்பாக கொண்டாடிவருகிறது.

யாழ் மறை மாவட்டத்தில் பாஷையூர் - மானிப்பாய் - பருத்தித்துறை - மணல்காடு - தாளையடி - வெற்றிலைக்கேணி - கரவெட்டி - மாதகல் - சு - அச்சுவேலி - நீர்வேலி - பண்டத்தரிப்பு - பெரியவிளான் - நாவற்குழி - அளம்பில் - பரந்தன் - மல்லாவி - குமிழமுனை - நாவல்நகர் - ஜெய ஸ்கந்தபுரம் - கிளாலி - கிராஞ்சி - 155 ஆம் கட்டை கிளிநொச்சி - யூனியன் குளம் - 13 ஆம் கட்டை பாரதிபுரம் - பல்லவராயன்கட்டு - வவுனிக்குளம் பாலையடி - கீரிக்குடா - ஜெயபுரம் - கள்ளப்பாடு - செல்வபுரம் - கேப்பாபிலவு - பள்ளிக்குடா - கௌதாரிமுனை - அல்லைப்பிட்டி - ஊர்காவற்துறை - - மண்டைக்கல்லாறு - கச்சதீவு - பாலைதீவு - கற்கடதீவு - குருசடித்தீவு போன்ற இடங்களில் புனித அந்தோனியார் ஆலயங்கள் அமைந்துள்ளன.

ஐரோப்பாவில் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் மாநகரில் 1195 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி வேத அன்னையி விண்ணேற்பு தினத்தன்று பிறந்த இவரின் பெயர் பர்ணாந்து என்பதாகும்.

வெறும் 36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த புனித அந்தோனியார் தம் அர்ப்பணிப்பு மிகக் பணியாலும் ஆற்றிய [illegible] புதுமை பதுவைப் பதியர் - நாவழியாப் புனிதர் - கோடி அற்புதர் - காணாத பொருள்களை காட்டிக்கொடுப்பவர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

1219 ஆம் ஆண்டு தனது 24 ஆவது வயதில் புனித அகுஸ்தீன் சபையில் சேர்ந்து குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் 1221 ஆம் ஆண் அகுஸ்தீன் சபையை விட்டு விலகிப் புனித பிரான்சீஸ்கன் சபையிற் சேர்ந்த போது பர்ணாந்து என்ற பெயரை மாற்றி மடத்தின் பெயரால் அந்தோ பெயரை எடுத்துக் கொண்டார்.

1231 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதி தனது 36 ஆவது வயதிலேயே இறந்து போன போது பதுவையில் அடக்கம் செய்யப்பட்டார்.

இவரின் கல்லறை 336 ஆண்டுகளின் பின்னர் தோண்டப்பட்ட போது அவரது நாக்கு அழியாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு இன்றும் பது கோவிலில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே தான் இவர் நாவழியாப் புனிதர் என அழைக்கப்படுகிறார்.

புனித அந்தோனியார் இறந்து ஓராண்டு நிறைவடைவதற்கு முன்னரே கத்தோலிக்க திருச்சபையால் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார் என்ப குறிப்பிடப்பட வேண்டிய தகவலாகும்.

36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்து இறந்த ஒருவர் - இன்றும் மக்கள் மனதில் அசைக்கப்பட முடியாத ஒரு புனிதராக - ஒரு கோடி அ கத்தோலிக்க மக்கள் மனதுகளில் மட்டுமல்ல - இந்து சமய மக்கள் மத்தியிலும் வாழ்ந்து வருவது ஒரு பெரும் புதுமையாகும்.

1946 ஆம் ஆண்டு புனித அந்தோனியார் கத்தோலிக்க திருச்சபையின் மறை வல்லுனராகத் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் பா பிரகடனப்படுத்தப்பட்டார் என்பது இவரின் மறைப்பணிக்கு மேலும் மெருகூட்டும் ஒரு தகவலாகும்.

இவர் லிஸ்பன் நகரில் இவர் பிறந்திருந்தாலும் பதுவைப் புனிதர் - புனித அந்தோனியார் என்றே அழைக்கப்படுகிறார் என்பது இங்கு நே வேண்டிய விடயமாகும். புனித அந்தோனியார் லிஸ்பன் நகரில் பிறந்திருந்தாலும் பதுவை நகரே அவரை உரிமை கொண்டாடுகிறது.

பதுவைப் பதியர் புனித அந்தோனியார் என்று இவர் அழைக்கப்படுவதற்கு பதுவைப் பதியில் புனித அந்தோனியார் தங்கியிருந்த 3 ஆண்டுகளி நிறைவேற்றிய அதிக அளவிலான புதுமைகளும் - இறுதியில் புனித அந்தோனியார் மரித்து அங்கு அடக்கம் செய்யப்பட்டதுமே காரணமாகும்.

புனித அந்தோனியார் கடவுள் அவருக்கு அளித்த விசேட கொடையால் - தமது வாழ் நாட்காலத்திலும் இறந்த பின்னரும் செய்த புதுமைக அருஞ்செயல்களாலும் - கோடி அற்புதர் புனித அந்தோனியார் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.


நவீன அழகிய தங்க, வைர நகைகளுக்கு சிறந்த இடம்
டோனிகா
நகைத் தொழிலகம்
நகை வியாபாரிகள்
நம்பிக்கை, நாணயம், நயமான சேவை
82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
T.P:077 888 6191

பானுயன்
அரிவு மில்
சகலவிதமான மர வகைகள் குறித்த தவணையில் பலகைகள், தீராந்திகள், தளபாட வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்.
Rg.No:T.D-589-V
உரிமையாளர்:T. சுதாகரன் T.P:077 7987006
48, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள்
கச்சான்
பிஸ்கட்
J/DS/BR/750
பதிவு இல.4456,
சேர்வைகள்: கச்சான், மா, சீ... மாஜரின், பால்... அங்கீகரிக்கப்ப... எசென்ஸ்
கச்சான் பிஸ்கட் தயாரிப்பகம்
இல.76/5, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.
077 312 6909
No.76/5, Eachchamoddai Ro... Jaffna, Sri Lanka.

தேவி ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
புதினப் பத்திரிகை முகவர்
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

NISHANANTHAA
Jewellery
நிஷானந்தா
ஜுவல்லறி
எழில் பொங்கும் தரமான தங்க நகைகளை யாழ். நகரில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Dealers in 22Ct, Gold, Jewelleries Gems & Jewellers
51 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். KASTHURIYAR ROAD, JAFFNA.
TEL: 021 222 7985

சுமதி
பல்பொருள் விற்பனை நிலையம்
தரமான நிர்மலா ஹார்வார் வலைகள் (யோயம்புத்தூர நீல வலைகள்) உட்பட ஏனைய சகல கடற்றொழில் உபகரணங்களையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
இல.843, கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
T.P: 077 549 0359, 077 658 8624


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி செலுத்துவோருக்கான கௌரவிப்பு நேற்று யாழில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் யாழ்.பிராந்திய காரியாலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வரி செலுத்துவோருக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.



நேற்று மாலை யாழ் பிராந்திய இறைவரி திணைக்கள ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் திருமதி கல்யாணி தஹநாயக்க கலந்துகொண்டதுடன் வரி செலுத்துவோருக்கான சிறப்பு அட்டைகளையும் வழங்கி கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் யாழ்.பிராந்தியத்தினால் வரி செலுத்துவோருக்கான சிறப்புரிமை அட்டை 9 பேருக்கு வழங்கப்பட்டது. இந்த வருடம் 18 பேருக்கு வெள்ளிச் சிறப்புரிமை அட்டைகளும், 6பேருக்குத் தங்கச் சிறப்புரிமை அட்டைகளுமாக 24 பேருக்கு இந்தச் சிறப்புரிமை அட்டைகள் வழங்கப்பட்டன.

நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டு வரவேற்புரையாற்றிய யாழ் பிராந்திய இறைவரி திணைக்கள ஆணையாளர் கருத்து தெரிவிக்கையில்;

யாழ். பிராந்திய இறைவரி திணைக்களம் நாட்டில் உள்ள அனைத்து இறைவரி திணைக்களங்களுடன் ஒப்பிடுகின்றபோது புள்ளி விவரங்களின் அடிப்படையில் அதிக வரிகளை பெற்றுக்கொள்கின்றது என்றும், ஆனால் இதுவரை சொந்தமான கட்டடத்தில் இயங்காததுடன் அனைத்து வசதிகளையும் உள்ளடக்காத நிலையில் இயங்கி வருவதாகவும் கவலை வெளியிட்டார்.

(த–ரி)

## ஆட்டைக் கடத்துவதற்கு முயன்றவர்கள் சிக்கினர்

வளவுக்குள் மேய்சலுக்குக் கட்டியிருந்த ஆட்டை வேலி முட்கம்பியை வெட்டிக் கடத்த முயன்ற சுன்னாகம் வாசிகளை ஊர் மக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்றது.

பழைய இரும்புப் பொருள்கள் கொள்வனவு செய்வது போல பட்டா வாகனத்தில் அந்தப் பகுதியில் நடமாடிய இருவர் வேலி முட்கம்பியை வெட்டி வளவில் கட்டி நின்ற ஆட்டைப் பிடித்து வந்து வாகனத்தில் ஏற்றியதை அவதானித்த ஊர் மக்கள் அவர்களைப் பிடித்து முறையான கவனிப்பின் பின்னர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த இருவரையும் சாவகச்சேரி பொலிஸார் ஆடு திருட முற்பட்டதாக வழக்குத் தாக்கல் செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(த–9)

## திட்டமிடல் அமைச்சின் கீழ் அரச சார்பற்ற நிறுவனங்கள்

கொழும்பு, ஜூன் 13

மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இனிமேல் பாதுகாப்பு அமைச்சு கட்டுப்படுத்தாது எனப் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவற்றைக் கட்டுப்படுத்தும் பணிகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கொள்கை திட்டமிடல் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் காலத்தில் சகல அரசசார்பற்ற நிறுவனங்களும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஒழுங்குபடுத்தலின் கீழ் இயங்கியதுடன் அவற்றுக்குக் கடும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(த–சி)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**உடனடி வேலைவாய்ப்பு**

கொழும்பில் இருந்து வெளியாகும் தமிழ்த் தேசிய நாளிதழின் யாழ். அலுவலகத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையோர் தேவைப்படுகிறார்கள்.

* பிராந்தியச் செய்தியாளர்கள்
* புகைப்படச் செய்தியாளர்
* பக்க வடிவமைப்பாளர்கள்
* ஒப்புநோக்குநர்கள்



ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையை 15.06.2015இற்கு முன்னர் கீழ்வரும் மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பிக்கவும்

jaffnaweekly@gmail.com


### கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் J/127 கொக்குவில் தென்மேற்குப்பிரிவில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி சிறீகாந்தன் கோமதியின் அன்புத்தந்தையார் சபாபதிப்பிள்ளை தருமலிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வ தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம் நல்லூர்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.

### எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா

மண்மடியில் 14.05.1960

கண்ணிடியில் 13.06.2007



ஆண்டுகள் எட்டு ஆனதுவோஅம்மா - நீங்கள் -எமை விட்டுச் சென்று
நாம் வாழும் காலம் எல்லாம் - உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சங்களில் என்றும் வாழும்

இல. 162A, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

திருமதி பரமேஸ்வரி நல்லைநாதன்

பிறப்பு 16 . 04 . 1937



இறப்பு 11 . 06 . 2015

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நல்லைநாதன் கடந்த (11.06.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு நல்லைநாதனின் (கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும், ஆனந்தி, சுகந்தி, பாமினி, சத்தியநாதன், தாரணி ஆகியோரின் அன்புத் தாயும், சடாட்ச்சரன், ஸ்ரீதாஸ், கருணாகரன், கல்யாணி, குமரகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், அபிலாஸ், சகானா, சுபாஸ், பிரகாஸ், நகீஸ், வர்ணன், சஞ்சய், நிவாஸ், திவேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நாளை (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கொக்குவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
தொலைபேசி: 021 222 6207

### புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய உற்சவம் அறிவித்தல்

எதிர்வரும் 15 .06.2015 ஆம் திகதி இடம்பெற வுள்ள வவுனியா,புளியங்குளம் அருள்மிகு புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழாவில் உணவு வகைகள் கையாளும் வர்த்தக நிலையங்கள் நடத்தும் உரிமையாளர்கள் யாவரும் சுகாதார விடயம் தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேச சபையினரின் அனுமதி பெற்று வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (அனுமதிகளை ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் தற்காலிக பணிமனையில் பெற்றுக்கொள்ள லாம்.)

ஆலயத்திற்கு வரும் பக்தர்களிற்கான அனைத்து வாகனத்தரிப்பிட வசதிகளும் பிரதேச சபையால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு:**

முச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டிருக்கும் ஆடம்பர பொருள்களுக்கு பிரதேசசபை பொறுப் பேற்காது என்பதை அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.


**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
பூச்சி நீக்கப்பட்ட ஜேர்மன் செப்பற் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 946 2841 (60869)

**பணிப்பெண் தேவை**
சிறிய குடும்பம் ஒன்றிற்கு, வீட்டில் தங்கிஇருந்து பணிபுரியக்கூடிய பணிப்பெண் தேவை. தொடர்பு:- 077 327 6502

**வீடு வாடகைக்குத் தேவை**
அரச உத்தியோகம் வகிக்கும் குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 077 182 1433
071 455 7065

**வாகனம் விற்பனைக்கு**
ISUZU Double Cap NP LLxxxx வாகனம் விற்பனைக் குண்டு.
தொடர்பு:- 078 880 3483
077 235 1028
(C 17649)
Kay.Farm (Pvt)Ltd ,Pallai.

**கணிதம் / விஞ்ஞானம் O/L**
6ஆம் வகுப்பில் இருந்து G.C.E O/L வரை தமிழ்/ ஆங்கில மொழிகளில் ஆங்கில மொழி மூல விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகின்றது. தனிப்பட்ட முறையி லும் பிரபல கல்லூரிகளில் மிகச் சிறப்பாகக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர்.
R.Balasubramaniyam B.Sc
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
பெற்றோர் மட்டும்.
தொடர்பு : 077 242 3400, 077 887 1217, 077 517 8727


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றப்பட்ட

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட 20ஆவது திருத்தச்சட்ட யோசனையை கூட்டமைப்பு அடியோடு நிராகரித்திருந்தது. இதன் பின்னர் திருத்தப்பட்ட 20ஆவதுதிருத்தச்சட்ட முன்மொழிவு ஜனாதிபதி மைத்திரிபாலவினால் அமைச்சரவைக்கு நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. அது அங்கீகரிக்கப்பட்டது.

மாற்றியமைக்கப்பட்ட புதிய 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமசந்திரனிடம் 'உதயன்' பத்திரிகை தொடர்பு கொண்டு கேட்டது. அவர் தெரிவித்ததாவது:

சிறுபான்மை மக்களின் பிரதிநித்துவம் பாதிக்கப்படாது என்ற உறுதிமொழி வழங்கப்படாமல், தற்போதுள்ள வடிவத்திலும் 20ஆவது திருத்தத்தை ஆதரிப்பது கஷ்டமான விடயம்.

ஆரம்பத்திலிருந்தே அரசிடம், தேர்தல் முறைமை மாற்றம் செய்யப்படும் பொழுது தொகுதிகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் செய்யக்கூடாதென்று கோரியிருந்தோம். அந்த எண்ணிக்கையில் குறைப்புச் செய்வதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

போரின் காரணமாக வடக்கு – கிழக்கில் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டுள்ளனர். பலர் புலம்பெயர்ந்துள்ளனர். இந்த நிலையில் விகிதாசார பிரதிநிதித்துவத்திலேயே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 9இலிருந்து 7 ஆகக். குறைந்துள்ளது. தொகுதிவாரியாக பிரிக்கப்படும்பொழுது தமிழ் மக்களின் பிரதிநித்துவம் மேலும் குறைவடையக்கூடும்.

15 வருடங்களுக்கு வடக்கு – கிழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் செய்ய வேண்டாம் என்பதைத்தான் அரசிடம் வலியுறுத்தி வருகின்றோம்.

இந்தத் திருத்தங்களால் மலைய மக்களுக்கும் பாதிப்பு ஏற்படப்போகின்றது. அதற்கு என்ன ஏற்பாடு செய்யப் போகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை இலக்கத்தில் மாற்றுவதால் மட்டும் பயன்ஏதுமில்லை. இலக்கத்தைக்கூட்டி, சிங்களப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் முயற்சிகளை ஏற்றுக் கொள்ள முடியாது. சிறுபான்மை மக்களின் பிரதிநித்துவம் பாதிக்கப்படாது என்று அரசு வெளிப்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் 20ஆவது திருத்தச் சட்டத்தை தற்போதுள்ள வடிவிலும் ஆதரிப்பது கஷ்டமானது – என்றார் சுரேஷ். (உ–5)

## திருத்திய

திருத்தச் சட்டம் தொடர்பிலான யோசனை கடந்த திங்கட்கிழமை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்பட்டிருந்தது. இந்த யோசனையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தொடர்ந்தும் 225ஆகப் பேணுவது என்றும், தொகுதி ரீதியாக 125 பேர் தேர்வு செய்யப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த யோசனைக்கு உடனடியாகவே பல தரப்புக்களிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. சிறுபான்மைக் கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. அந்த வடிவத்தில் 20ஆவது திருத்தத்தை ஏற்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முடிவெடுத்து அறிவித்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களும் ஜனாதிபதியிடம் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதனையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா திருத்தங்களை முன்வைக்குமாறு கட்சிகளிடம் கோரியிருந்தார். அதற்கமைய திருத்தங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவற்றை உள்ளடக்கியதாக திருத்திய வரைவு தயாரிக்கப்பட்டிருந்தது. இந்ததிருத்தச்சட்டம்,நேற்றுக்காலை கூட்டப்பட்ட விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

இதன்படி தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 இலிருந்து 237 அதிகரிக் கப்படும். தேர்தல் தொகுதி வாரியாக 145 பேரும், மாவட்ட மட்ட விகிதாசார அடிப்படையில் 55 பேரும், தேசியப் பட்டியலின் மூலம் 37 பேரும் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யும் வகையில் இந்தத் திருத்தம் அமையவுள்ளது.

எனினும் இந்தத் திருத்தமும் ஏற்றுக் கொள்ளும்படி இல்லை என்று அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளனர்.

இருந்தபோதும் அமைச்சரவை புதிய யோசனைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதை அடுத்து புதியநாடாளுமன்றத் தேர்தல்முறை தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு உடனடியாக வெளியிடப்படும் என்றுதெரிவிக்கப்படுகின்றது. (உ–5)

## புலம்பெயர்

உரையாற்றிய அவர், எதிர்க் கட்சியின் குற்றச்சாட்டுக்களை நேற்றுச் சபையில் அடியோடு நிராகரித்தார். "பயங்கரவாதிகள் எனக் கூறி புலம்பெயர் தமிழர்களை ஒதுக்க நாம் தயாரில்லை" என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

இலங்கையில் நல்லிணக்கத்தையும், இறைமையையும் பாதுகாத்து ஒன்றுபட்ட நாட்டைக் கட்டியெழுப்ப புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து புலம்பெயர்ந்தோரும் தயாராக உள்ளனர் எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், இலங்கைக்கு வந்து நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்றிட்டத்துக்கு புலம்பெயர் தமிழர்கள் ஆதரவளிக்க வேண்டும் என்றும் பகிரங்க அழைப்பு விடுத்தார்.

புலம்பெயர்தமிழர்களுடன்இணைந்து செயற்படுவதற்கு எதிர்க்கட்சியினர் தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார் அமைச்சர். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

**காலம் கனிந்துள்ளது**

புலம்பெயர் நாடுகளிலுள்ள இலங்கையர்கள், இங்கு பாடசாலைகளை அமைப்பதற்கும், வீடுகளை நிர்மாணிப்பதற்கும், சுகாதார வசதிகள், வாழ்வாதார நடவடிக்கைகள் ஆகியவற்றை அர்த்தமுள்ளதாக்குவதற்கும் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான காலம் கனிந்துள்ளது.

சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர் என எமது நாட்டிலிருந்து மக்கள் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்றனர். புலம்பெயர் தமிழர்கள் என்று கூறப்படுபவர்கள் கொம்பு முளைத்த பேய்கள் அல்லர். ஒரு நாட்டிலிருந்து வெளியேறி வேறொரு நாட்டுக்குச் சென்று குடியேறுபவர்களைத்தான் புலம்பெயர்ந்தோர் என்று கூறுவர்.

அயர்லாந்து, கிரேக்கம் உள்ளிட்ட பல நாடுகளிலும் புலம்பெயர் சமூகங்கள் உள்ளன. அதுபோல இலங்கையின் மிகப் பிரபலமான முக்கிய புலம்பெயர் மக்களும் இருக்கின்றனர். இவ்வாறாக, 15 இலட்சம் பேர் புலம்பெயர்ந்தவர்களாக இருக்கின்றனர். சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைவரும் இதில் உள்ளடங்குகின்றனர்.

**நாஸாவில் 10 விஞ்ஞானிகள்**

இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர்களில் நாஸா விண்வெளி ஆய்வு மையத்தில் 10 விஞ்ஞானிகள் இருக்கின்றனர். பல நாடுகளிலும் ஆசிரியர்கள், பாடகர்கள், வங்கிகளின் பிரதிநிதிகள் என உயர் பதவிகளை வகிக்கின்றனர். இவர்களைத் தேடிக் கண்டுபிடித்து எமது நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்கச் செய்ய வேண்டும்.

மாரவிலயில் வீதியோரத்தில் தையல் கடை வைத்திருந்த இளைஞர் ஒருவர் இன்று பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் 12 மாடிக் கட்டடத்துக்கு உரிமையாளராக இருக்கின்றார். பிரான்ஸின் உத்தியோக பூர்வ ஆடையை வடிவமைக்கும் பிரபலியமானவராகவும் இருக்கின்றார்.

அதுபோல நியூயோர்க் நகரில் பிரபல ஹோட்டல் விடுதிகளில் தலைமை சமையல்காரர்களாகவும் இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர்கள் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில், புலம்பெயர் தமிழர்களைப் பயங்கரவாதிகள் எனக் கூறி ஒதுக்குவதற்கு நாம் தயாரில்லை.

3, 4 தடவைகள் புலம்பெயர் தமிழர்களுடன் நாம் பேச்சு நடத்தியுள்ளோம். சிறு தரப்பினர் இன்னும் அந்த பிரிவினைவாத நிலைப்பாட்டில்தான் இருக்கின்றனர். ஆனால், பெரும்பான்மையானோர் பிரிக்கப்படாத இலங்கைக்குள் வர வேண்டும் எனக் கூறுகின்றனர்.

**வரவேற்கத் தயார்**

இலங்கையின் நல்லிணக்கம், இறைமையைப் பாதுகாத்து உறுதிப்படுத்தி புனர்நிர்மாண நடவடிக்கைகளை மீளக் கட்டியெழுப்பி, மக்கள் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட புலம்பெயர் இலங்கையர்கள் தயாராக இருக்கின்றனர். அவர்களை அன்புடன் வரவேற்க நாமும் தயாராக இருக்கின்றோம். அனைவரும் இணைந்து இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்வோம் – என்றார்.

## சர்ச்சைகளை

மீதான தடைகளை நீக்குவதற்காக பேச்சு நடக்கிறதா என்று எதிர்க் கட்சித் தலைவரும் சந்தேகம் எழுப்பியிருந்தார்.

வெளிநாட்டில் நடந்த எமது கூட்டம் முடிவடைந்த பின்னர் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தோம். எதற்காகக் கூட்டம் கூட்டப்பட்டது என அதில் கூறியிருந்தோம். காணிகள் விடுவிக்கப்படுதல், விடுவிக்கப்பட்ட காணிகளில் வீடுகள் அமைத்துக் கொடுத்தல், அதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்ளல் என்பன பற்றியும் கதைக்கப்பட்டது. அரசியல் கைதிகள் விடுதலை சம்பந்தமாகப் பகிரங்கப்படுத்தப்படாத உரையாடல்களில் ஈடுபட்டிருந்தோம். ஆனால் கூட்டம் பற்றிய செய்தி வெளியில் கசிந்துவிட்டது. அதனால் அது பெரிய சர்ச்சையாகக் கிளம்பியுள்ளது.

சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பதிலை வழங்கியுள்ளோம். ஆனால் என்ன பேசினோம், என்ன முடிவு எடுத்தோம் என்ற முழுமையான விடயங்களை நாங்கள் கூறப்போவதில்லை. பத்திரிகையாளர் முன்பாக [illegible] கிடையாது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. கஷ்டமான, சவாலான அரசியல் சூழ்நிலைகளில் அனைத்தையும் வெளிப்படுத்த முடியாது – என்று மேலும் தெரிவித்தார் சுமந்திரன். (உ–4,106)

## ஆட்சியில்

கடந்தஅரசு ஆட்சியில் இருந்த போது மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம், மஹிந் தோதய தொழில்நுட்பபீடம் எனப் பெயர் சூட்டி அவற்றின் அடிக்கல் நாட்டு விழாக்களுக்கு நான் பல பாடசாலைகளுக்குச் சென்றிருந்தேன். கட்டி முடிக்கப்பட்டவை மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுக் கூடமாகவோ அல்லது மஹிந் தோதய தொழில்நுட்பப் பீட மாகவோதான் திறக்கப்பட்டன.

ஆட்சி மாற்றத்தின் காரண மாகவோ பிரசாரணங்களாலோ மஹிந்தோதய என்ற அடை மொழி தற்போது மறைந்து தொழில்நுட்ப ஆய்வு கூடம் மற்றும் தொழில் நுட்பப்பீடம் என்று இன்றைய திறப்பு விழாக்கள் மாற்றமடைந்து விட்டன. எத்தனை மாற்றங்கள்!

இதை நான் இங்கு குறிப்பிடுவதன் நோக்கம், நாம் ஆட்சியில் இருக்கும்போது மக்களை மறந்து, நாட்டின் சுபீட்சத்தை மறந்து, எமது பதவி இறுமாப்பில் மற்றவர்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டு, பணத்தைத் தேடுவதில் மட்டும் குறிக்கோளாக இருப் போமாயின் எமக்கு ஏற்படக்கூடிய நிலைமை என்ன என்பதை இந்தச் சிறு சம்பவம் எடுத்துக் காட்டு கின்றது– என்றார் முதலமைச்சர். (உ–5)

## மேலும் 15

நேற்று யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் மாணவர்கள் உட்பட 15 பேரை பிணையில் விடுவித்த நீதிவான் ஏனையவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் 54 சந்தேக நபர்களும் அநுராதபுரம் சிறைச் சாலை அதிகாரிகளால் வழமை போன்று பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்றின் நுழைவாயில்களில் பாதுகாப்பு தடைகள் அமைக்கப்பட்டிருந்தன. தண்ணீரைப் பீச்சி அடித்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கும் வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. அதி ரடிப்படையினருடன் பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மன்றில் சமுகமாகி இருந்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நுவான் வெதசிங்க, கைது செய்யப்பட்டுள்ள 14 சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்குவதற்கு பொலிஸாருக்கு ஆட்சேபனை இல்லை என்றார். இதனையடுத்து நீதிவான் பெ. சிவகுமார் ஆவணங்களுடன் சத்தியக்கூற்றை அணைத்திருந்த 14 பேருக்கு பிணை வழங்கினார். அத்துடன் அவர்களினுடைய வாக னங்களும் இரண்டு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டன.

ஒவ்வொரு சந்தேகநபரும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டக் கற்கைநெறியை கற்பதற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் ஒவருக்கும் மன்றினால் பிணை வழங்கப்பட்டது. தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

மாதத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமை 9.00 –12 மணிக்கிடையில் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடுமாறும் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் பிணை நிபந்தனை ரத்துச் செய்யப்பட்டு வழக்கு முடியும்வரையும் விளக்கமறியலில் இருக்கவேண்டுமென்ற நிபந்தனையுடனும் பிணை வழங்கப்பட்டது. ஏனைய சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகள் முடிவுறாததால் அவர்களின் விளக்கமறியல் காலம் இம்மாதம் 26ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது. (உ–103)

## பெண்

அமைச்சர் கே.டி.எம்.சந்திராணி பண்டாரவினால், இதற்கான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டது. அதில், பொருளாதார, சமூக, சூழல் ரீதியாக மிகவும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள இந்தப் பிரிவினருக்கு முன்னுரிமைகள் வழங்கி செயற்படுவது அத்தியாவசியமானதாகும் என்று அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த வேலைத்திட்டம் வடக்கின் 5 மாவட்டங்களிலும், கிழக்கின் 3 மாவட்டங்களிலும், வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**முன்னாள் போராளிகளுக்கு உதவி**

இதேவேளை, முன்னாள் போராளிகளின் வாழ்வாதார உதவிக்கான கடன் திட்டங்களை நீடிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

போரின் இறுதியில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டதன் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான சுயதொழில் நிவாரணக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2012ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இந்த சுயதொழில் கடன் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு இறுதித் திகதி வரை 302 மில்லியன் ரூபா முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் மேலும் கடனைப் பெறுவதற்கான நோக்கில் 5 ஆயிரத்து 754 பேர் விண்ணப்பித்துள்ளனர். ஆகவே மேற்படி நிவாரணக் கடன் திட்டத்தினை அவசியமான மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மீள்குடியேற்ற புனர்நிர்மாண அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அமைச்சரவையிடம் கோரியிருந்தார். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, லங்காபுத்ர வங்கி மற்றும் இலங்கை சேமிப்பு வங்கியின் மூலம் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்த அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. (உ–5)

## உள்ளகப்

பதிலளித்த போதே மேற்கண்டவாறு அறி வித்தார் அவர்.

"கடந்த ஜனவரி மாதம் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவால் முன்வைக்கப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்தின் 93ஆவது இலக்கத்தில் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேசத் தலையீடுகள் அற்ற உள்ளகப் பொறிமுறையொன்று உருவாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்காக உள்ளகப் பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பல்வேறு பொறிமுறைகள் உள்ளன. இவற்றுள் எமது நாட்டுக்குப் பொருத்தமான அணுகுமுறை குறித்து நாம் பேச்சு நடத்தி வருகின்றோம். இந்த உள்ளகப் பொறிமுறை குறித்த அறிக்கை ஒன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும்"– என்றார் அமைச்சர். (உ–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபா 10 இலட்சம் கப்பம் செலுத்தி மீட்கப்பட்ட சிறுமி

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 13
வவுனியாவில் கடத்தப்பட்ட 5 வயதுச் சிறுமியொருவரை 10 இலட்சம் ரூபா கப்பம் செலுத்தி, அவரது பெற்றோர் காப்பாற்றியுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்வாறு கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் பிரபல வர்த்தகர் ஒருவரின் மகளான மேற்படி சிறுமி, பாலர் பாடசாலைக்குச் சென்று திரும்பியபோது இனந் தெரியாதோர் சிலரால் கடத்திச் செல்லப்பட்டார்.

இச்சிறுமியை விடுவிக்க வேண்டுமாயின் 30 இலட்சம் ரூபாவைக் கப்பமாக வழங்குமாறு குறித்த சிறுமியின் தந்தையை மேற்படி குழுவினர் அச்சுறுத்தியிருந்தனர்.

இருப்பினும், தன்னிடம் அந்தளவு தொகைப் பணம் இல்லை என்று சிறுமியின் தந்தை கூறியதை அடுத்து, 10 இலட்சம் ரூபாவை வழங்குமாறும் அப்பணத்தை வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் வைக்குமாறும் மேற்படி குழுவினர் தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய, குறிப்பிட்ட இடத்தில் பணத்தை வைத்ததை அடுத்து, அவர்கள் தங்களது மகளை விடுவித் தனர் என்று மேற்படி வர்த்தகர், வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் துள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

கப்பப் பணத்தைச் செலுத்துவதற்கு முன்னர், இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்திருந்தால், சந்தேகநபர்களை கைதுசெய்ய முடிந்திருக்கும் என்று தெரிவித்த பொலிஸார், எவ்வாறாயினும், இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்த பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அதன்படி விசாரணை மேற்கொண்டபோதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று கூறப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் தலைமறைவாகி விட்டனர் என்றும் அவர்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த–4,402)

# சிறுவர் தொழிலாளர் 1 லட்சத்துக்கு அதிகம்

கொழும்பு, ஜூன் 13
நாட்டில் தற்போது சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுவதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடாஷா பாலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவர்களைப் பொலிஸார் மற்றும் தொழில்திணைக்களத்துடன்இணைந்து தொழிலில் ஈடுபடுவதை முற்றாக ஒழிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை செல்லும் வயதில் உள்ள சிறுவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கும், பாடசாலைகளில் படிப்பை இடைநிறுத்திய மாணவர்களைத் தொடர்ந்து கல்வி கற்க இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் தற்போது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பில் தமக்கு உடனடியாக தகவல் வழங்குமாறு பொதுமக்களிடம் பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

தண்டனைச் சட்டத்தின் பிரகாரம் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் சிறுவர்களாகக் காணப்பட்டாலும் சிறுவர் மற்றும் இளையோர் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 16 வயதுக்கு குறைந்தவர்களே சிறுவர்களாகக் கருதப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் 14வயதுக்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (த–ரி)

# கணக்காளர் சேவை தரம் III நாடெங்கும் 168 பேர் தெரிவு

அச்சுவேலி, ஜூன் 13
இலங்கை கணக்காளர் சேவை தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 168 பேர் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர்களின் பெயர் விவரம் மற்றும் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளி ரீதியிலான தேசிய மட்டத்திலான தரநிலை என்பன பொது நிர்வாக நாட்டலுவல்கள் அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்மொழி மூலம் 23 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கணக்காளர் சேவை தரம் III க்கு ஆள்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை திறந்த நிலை, மட்டுப்படுத்தப்பட்ட நிலை என்ற வகையில் நடத்தப்பட்டது. இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்டது. திறந்த நிலையில் நடைபெற்ற பரீட்சையில் 99பேரும், மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நடைபெற்ற பரீட்சையில் 69பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திறந்த நிலையில் நடைபெற்ற பரீட்சையில் தமிழ்மொழி மூலம் தோற்றியோரில் 8பேரும், மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நடைபெற்ற பரீட்சை தமிழ்மொழி மூலம் தோற்றியோரில் 15பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் பெறுபேறு தொடர்பான விவரம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தனித் தனியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த–11)

# இ.தொ.க. குழுவினர் வடக்குக்கு வருகை



யாழ்ப்பாணம், ஜூன் 13
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் வடக்கு மாகாணத்திற்கு நேற்று இரு நாள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் முத்து சிவலிங்கம், செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் இரு நாள் பயணமாக வடபகுதிக்கு வந்து முக்கிய வணக்க ஸ்தலங்களுக்கும் சென்றனர்.

நாட்டில் தேர்தல் ஒன்று எதிர்பார்க்கப்படும் நிலையில் வடபகுதிக்கான பயணத்தின் நோக்கம் தொடர்பில் செய்தியாளர்கள் வினாவியபோது அவர்கள் பதில் ஏதும் தெரிவிக்க மறுத்துவிட்டனர். (த–101)

# கூட்டுறவாளர் வசதி கருதி இணக்க சபை அமைப்பு

வடமாகாண கூட்டுறவு அமைச்சில் நூறு நாள் வேலைத்திட்டத்தில் கூட்டுறவாளர்களின் வசதி கருதி இணக்க சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்துள்ளார்.

மூவர் அடங்கிய, இணக்க சபையின் தலைவராக யாழ்.பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தல் துறையின் தலைவர் இ.இரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மற்றும் ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கணேசமூர்த்தி, இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் த.தர்மராஜா ஆகிய இருவரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூவர் அடங்கிய இந்த இணக்க சபை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் செயற்படும். கூட்டுறவு பணியாளர் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இந்த இணக்க சபை ஊடாக தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கூட்டுறவுப் பணியாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எழுத்து மூலம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

கூட்டுறவுப் பணியாளருக்காக இணக்க சபை ஒன்று இதுவரை காலமும் அமைக்கப்படாததனால் பணியாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியும் வந்தனர். (த–17)

# யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகம் ஏற்பாட்டில் செயற்பாட்டு கை பொருத்தும் நடவடிக்கை

## இன்றும் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம், ஜூன் 13
ஆஸ்திரேலிய றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண றோட்டறிக்கழகம் ஏற்பாட்டில் போரால் காயமடைந்து அவயவங்களை இழந்தவர்களுக்கான நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் செயற்பாட்டுத் திறனுடைய கைகளைப் பொருத்தும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கைகளை இழந்தவர்களில் முதற்கட்டமாக 120 பயனாளிகளுக்கென நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்திட்டம் இன்றும் தொடரவுள்ளது.



யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்று வரும் இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமையும் தொடரவுள்ளதனால் பயனாளிகள் வந்து அதனைப் பெற்றுச் செல்லலாம் என்று யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தினர் கேட்டுள்ளனர். ஆஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருக்கும் 12 நிபுணர்கள் கைகளைப் பொருத்தி அதனை எப்படி இயக்குவது, கழற்றுவது, உள்ளிட்ட சகல வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்றனர்.

செயற்பாட்டுத் திறனுடைய அந்தக் கையை மனித உடலில் கை எந்த, ளவுடன் துண்டிக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் வைத்துப் பொருத்தப்படுகிறது. அதற்கு முன்னர் மனித கையில் கையுறை (சொக்ஸ்) போடப்படும். அதற்குமேல் அந்தச் செயற்பாட்டுத் திறனுடைய கை பொருத்தப்படுகிறது. அந்தச் செயற்பாட்டுத் திறனுடைய கையிலிருந்து 4 கவர்கள் நீண்டிருக்கின்றன. அந்தக் கவர் மனித கையில் உள்ள எலும்புப் பகுதியைப் பற்றிப் பிடித்துதிருக்கும் வகையிலாக அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கவரிலிருந்து நாடாக்கள் நீண்டுள்ளன. அவை செயற்பாட்டுக் கை பொருத்தப்படும் கையுடன் சுற்றியிருக்கும் கையில் அமைக்கப்பட்டிருப்பதால் தோலுடன் இணைத்து தேவைக் கேற்ப இறுக்கிக் கொள்ளலாம்.

மனிதன் சாதாரணமாக கைவிரல்களை எவ்வாறு மடிக்கவும் நீட்டவும் முடிகிறதோ அவ்வாறு அந்தச் செயற்பாட்டுத் திறனுடைய கைகள் மூலமாகவும் விரல்களை மடிக்கவும் நீட்டவும் கூடியதாக உள்ளது. தவிர சாதாரண கை போன்று கைமணிக்கட்டுடன் மேலும் கீழும் மடிக்கக்கூடியதாகவும் அந்தமணிக்கட்டுப் பகுதியை மறுபுறம் சுழற்றக் கூடியதாகவும் தேவையேற்படின் அந்தப் பகுதியில் கழற்றக்கூடியதாகவும் அந்தக் கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

கையின் அளவு சாதாரண மனிதரின் கைக்குள் அடங்கக்கூடியதாக உள்ளது. அதில் மேல்புறம் 3 விரல்களும் கீழ்ப்புறமாக 2 விரல்களும் உள்ளது. அந்த விரல்களைப் பயன்படுத்தி எழுதவும், பல்துலக்கவுமாக சாதாரண மனிதரின் கை போல் செயற்படுத்த முடிகிறது. உதாரணத்துக்கு ஒரு பேனாவை எடுத்து அந்தக் கையில் வைத்து விரல்களை மடித்து விட்டால் அந்தப் பேனாவால் எழுத முடியும். அந்த நிலையில் பேனாவைப் பறிக்கவும் முடியாது. வேலை முடிந்த பின்னர் மடிக்கப்பட்ட விரல்களை மறுகையால் நீட்டி பேனாவைக் கையிலிருந்து எடுக்க முடியும். அதற்கு கையின் மேற்பகுதியை அழுத்தினால்போதும். தானாகவே கைவிரல்களை நீட்டும் – கையை விரிக்கும். அந்த ஒவ்வொரு கையினதும் பெறுமதி சுமார் 50 ஆயிரம் ரூபா. அதன் நிறை 295 கிராம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கையில் கைப்பை உள்ளிட் சாதாரண நிறையுடைய பொரு களைத் தூக்கி செல்லமுடியும். சாத ரண பொருள்களைத் தூக்குவத கான வலிமையுடையதாகவே அ தச் செயற்பாட்டுக் கைகள் உள்ள தேவையான நேரங்களில் அ னைப் பொருத்திப் பயன்படுத்தலா தொடர்ந்து பொருத்தியபடியும் வி லாம். இடையிடையே கழற் கையுறையைத் தோய்க்கலா வியர்வை ஏற்பட்டு மனித கையி செயற்பாட்டுக் கை பற்றிப் பிடி ருக்கும் தன்மையைப் பேணவு மனித கையின் தோலினைப் பா காக்கவும் கையுறை போடப்ப கிறது. வடக்கிலுள்ள மாவட்டங்க லிருந்து மாத்திரமன்றி மட்டக்க பிலிருந்தும் பலர் வந்து அதனை பெற்றுச் செல்கின்றனர். அவ ளில் ஒரு கை, இரண்டு கைகளை யும் இழந்தவர்களும், மாணவ ளும், கர்ப்பிணிகளும், இளைஞ யுவதிகளும் உள்ளடங்குகின்றன தவிர, கண்பார்வை பாதிக்கப்ப சுமார் 100 பேருக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இன்று இ பெறவுள்ளது. என்று றோட்ட கழகத்தினர் தெரிவித்தனர்.

இதுமட்டுமன்றி போரினால் கால்க இழந்த சுமார் 750 பயனா ளுக்கு யாழ்ப்பாணம் றோட்ட கழகத்தினால் செயற்கைக் கால் பொருத்தும் நிகழ்வு அடுத்த மா இடம்பெறவுள்ளது. அவற்றுக்க பயனாளிகளை அடையாளப்ப தும் பணிகள் இப்போது இ பெற்று வருகின்றன என்று மே தெரிவித்தனர். (ற–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மேசைப்பந்தாட்டம்

## ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை கொக்குவில் இந்துக்கல்லூரி அசத்தல்



கொக்குவில் இந்துக் கல்லூரி



ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட 15வயது, 19வயதுப்பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும், 19வயதுப் பிரிவில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும் வெற்றி பெற்று சம்பியன் ஆகின.

**15 வயதுப்பிரிவு**

நேற்றுமுன்தின் வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மேசைப்பந்தாட்ட அரங்கில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி மோதிக் கொண்டது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சார்பில் டனுசனும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தழிழ் கலவன் பாடசாலை அணி சார்பில் ஜெசிகரனும் மோதிக் கொண்டனர். இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரன் டனுசன் 11:8, 8:11, 11:8, 6:11, 11:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சார்பில் லோகீதனும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தழிழ் கலவன் பாடசாலை அணி சார்பில் சரத்குமாரும் மோதிக் கொண்டனர். இதிலும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி வீரன் லோகீதன் 11:7, 11:6, 11:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சார்பில் கிருசாந்தும் ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சார்பில் மிரேசனும் மோதிக் கொண்டனர். இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி கிருசாந் 11:7, 11:4, 11:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற முதல் மூன்று செற்களையும் கைப்பற்றிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

**19 வயதுப்பிரிவு**

19 வயதுப்பிரிவினருக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி மோதிக் கொண்டது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணி சார்பில் நிவேதனனும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தழிழ் கலவன் பாடசாலை அணி சார்பில் துசியந்தனும் மோதிக் கொண்டனர். இதில் யாழ். இந்துக்கல்லூரி அணி வீரன் நிவேதன் 20:18, 11:7, 11:5 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

இரண்டவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணி சார்பில் ஆகாஸனும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சார்பில் ஹரி பிரகாஸனும் மோதிக் கொண் டனர். இதில் யாழ். இந்துக்கல்லூரி அணி வீரன் ஆகாஸன், 11:6, 9:11, 11:5, 9:11, 11:9 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணி சார்பில் கஜவதனனும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சார்பில் கிசரனும் மோதிக் கொண்டனர். இதில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி வீரன் கிசரன் 9:11, 11:9, 11:3, 11:9 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

நான்காம் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் திசேதனும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி சார்பில் ஹரி பிரசாந்தும் மோதிக் கொண்டனர்.இதில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி வீரன் ஹரிபிரசாந் 11:9, 11:9, 11:7, 12:10 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றர்.

இரண்டு அணியினரும் தலா 2 செற்களை வெற்றி கொண்டமையால் ஆட்டம் சமநிலையானது. இதனால் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக ஐந்தாவது ஒற்றையர் ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்காக யாழ்.இந்துக்கல்லூரி அணி சார்பில் ஆகாஸனும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தழிழ் கலவன் பாடசாலை அணி சார்பில் துசியந்தனும் மோதிக் கொண்டனர்.

வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் ஆட்டம் என்பதால் ஏனைய ஆட்டங்களைவிட இந்த ஆட்டத்தில் அதிகம் சூடுபிடித்தது. முடிவில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி வீரன் துசியந்தன் 6:11, 11:9, 11:3, 5:11, 11:6 என்ற செற் கணக்கில் வெற்றி பெற ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை சம்பியன் ஆனது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

***அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த் தக் கிண்ணம்***

யாழ்ப்பாணம், ஜூன் 13

வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை இடம்பெற்றும் நான்காவது காலிறுதி ஆட்டத்தில் வடதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

***யாழ்.மாவட்ட தாச்சித் தொடர்***

யாழ்.மாவட்ட தாச்சி விளையட்டுச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கீரிமலை உதயதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இருபாலை விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

***புனித தோமையார் வி.க.தொடர்***

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23-86)

***கலைவாணி வி.க.தொடர்***

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம்தனதுவெள்ளி விழாவை முன்னிட்டு பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 09 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பிறைட் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமரபாகு நியுட்டன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

***கொலின்ஸ் வி.க.தொடர்***

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுத்தோட்டம் சுடரொளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 4மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 5மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-108)

# சென்.மேரிஸ் - வதிரி டைமன்ஸ் இறுதியாட்டத்தில் இன்று மோதல்


சென் மேரிஸ்


டைமன்ஸ்

கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மின்னொளியில் இடம்பெறவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்டத்துக்கு முன்னதாக இரவு 7 மணிக்கு இடம்பெறும் 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இன்றைய நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மகளிர் விவாகரா பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சிவயோகன், பரஞ்சோதி, வடமாரட்சி உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் வரதராஜா, கரவெட்டி பிரதேச செயலர் சிவசிறி, பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் முகுந்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி மீடின், கிராம சேவையாளர் சுரேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. பாதுகாப்பான ஆரம்பம்



சிமித்தின் வாய்ப்பைத் தவறிவிடும் தீவுகள்.

ஆஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் மே.தீவுகளின் ஜமைக்கா நகரில் ஆரம்பமானது. ஆட்டத்தின் முதல்நாள் முடிவில் ஆஸ்திரேலியா 258–4 என்ற பாதுகாப்பான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகளின் தலைவர் ஹோல்டர் முதலில் களத் தடுப்பைத்தீர்மானிக்க களத்தில் வோர்ணருடன் மார்ஷ். தீவுகளின் வெயிலில் காய்ந்து கல்லாகிப் போன ஆடுகளங்களில் தீவுகளின் பவுன்சர்கள் எப்படி எகிறும் என்று சொல்லித்தான் புரியவேண்டுமா? முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ரெய்பலர் பவுன்சரில் மிரட்டினார். ஆடிப்போன வோர்ணரால் முழு தாக மூன்று பந்துகளைக்கூடத் தாக் குப்பிடிக்க முடியவில்லை. டக்குடன் வெளியேற முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே முதல் இலக்குச் சரிந்தது. சிமித் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் நிலைக்கத் தவறினார் மார்ஷ். பதினொரு ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப ஆஸ்திரேலியா 16–2. உபதலைவர் சிமித்துக்கு கைகொடுத்தார் தலைவர் கிளார்க். இருவித தலைமை இன்னிங்ஸ்களிலும் இருந்து ஆஸ்திரேலியாவின் ஆதிக்கம் ஆரம்பமானது. நிலைமயின் தீவிரத்தை உணர்ந்து இலக்குச் சரிவுக்கு இடம்கொடுக்கக் கூடாது என்ற முனைப்பில் இருவரும் நின்றதனால் இணைப்பாட்டம் ஆரம்பத்தில் ஆமை வேகத்திலேயே இருந்தது. பந்து 'பவர்பிளே' எல்லையை விட்டு தாண்டவில்லை என்று சொல்லிக் கொண்டாலும் பொருத்தமாகத்தான் இருக்கும். நேரத்துடன் சேர்ந்து பந்துப் பரிமாற்றங்களும் உருண்டோட பந்துகள் இருவருக்கும் பழக்கப்பட ஆரம்பித்தது. அடுத்தடுத்த பந்துப் பரிமாற்றங்களில் இருவரும் அடுத்தடுத்து விளாசிய சிக்சர்கள் மூலம் இணைப்பாட்டம் வலுபெறப்போகிறது என்பதைச் சொல்லாமல் சொன்னார்கள். அரைச்சதத்தை எட்டினார் சிமித். அரைச்சதத்தை எட்டும் தருவாயில் கிளார்க். தலைமை இன்னிங்ஸ் தடுமாறியது. விளைவாக ஆஸ்திரேலியாவின் நான்காவது இலக்காக கிளார்க் 47 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். இடத்தை நிரப்பினார் வோக்ஸ். கிட்டத்தட்ட கிளார்க் இல்லாத குறையை நீக்கினார் என்று சொல்லிக் கொள்ளும் படியான ஆட்டம். வோக்ஸை வைத்து மறு முனையில் சதத்தை எட்டினார் சிமித். சதத்தின் பின்பும் அவசரப்படவில்லை. ஆரம்பத்தில் இருந்த அதே நிதானம் தொடர்ந்தும் அப்படியே இருந்தது. மாறாக அவரசப்பட்டார் வோக்ஸ். விளைவு பவிலியனில் அமர வேண்டியிருந்தது. சிமித்துடன் இணைந்தார் வற்சன். களமிறங்கியவர்களிலேயே மிகவும் நிதானித்தவர் வற்சன் என்று தான் சொல்ல வேண்டும். சராசரி 35 இனை விட்டுதாண்டவேயில்லை. மொத்தத்தில் முதலாம் நாள் முடிவில் ஆஸ்திரேலியா 258–4. சிமித் 135 ஓட்டங்களுடனும் வற்சன் 20 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் மே.தீவுகள் சார்பாக ரெய்பலர் 3 இலக்குகளையும் ஹோல்டர் ஓர் இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். (ம)

# ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது மழை

## சமநிலையில் முடியலாம்



விஜய்

இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் முடிவில் இந்திய அணி 462–6 என்ற வலுவான நிலையில் உள்ளது.

ஆட்டத்தின் முதல் நாள் ஆரம்பமாவதற்கு முன்னரே மழை குறுக்கிட 90 பந்துப்பரிமாற்றங்களில் 56 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே வீசப்பட்ட முதல்நாள் முடிவில் இந்திய அணி 239–0 என்ற வலுவான நிலையில் இருந்தது. ஆட்டத்தின் இரண்டாம் நாளில் மழை தொடர்ந்து குறுக்கிட்டு மைதானத்தை பாதிப்படையச் செய்ய இரண்டாம் நாள் ஆட்டம் கைவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆட்டத்தின் மூன்றாவது நாளான நேற்று தவான் 150 ஓட்டங்களுடனும் விஜய் 89 ஓட்டங்களுடனும் களமிறங்கினார்கள். அடித்தாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவ்வாறான எந்த வியூகமும் இந்தியாவிடம் இல்லை. வழக்கமான டெஸ்ட் பாணியில் இருவரும் தொடர்ந்து பயணிக்க சதம் கண்டார் முரளி விஜய். 173 ஓட்டங்களுடன் தவானின் ஆட்டம் ஷகிப் அல் ஹசனால் நிறைவுக்கு வந்ததுதான் தாமதம் அதிரடிக்கு முனைந்த கோஹ்லி, ரோஹித் சர்மா இருவரும் அடுத்தடுத்து பவிலியன் திரும்பினார்கள். இந்திய அணி 398–3 என்ற நிலையில் இருந்த பொழுது மழையினால் ஆட்டம் தற்காலிகமாக நிறைவுக்கு வந்தது.

பின்னர் மழை விடுவதும் ஆட்டத்தைத் தொடர்வதுமாக இரு அணிகளின் வீரர்களும் மழையுடன் படாத பாடுபட்டனர். இடையிடையே கிடைக்கும் சந்தப்பங்களைப் பயன்படுத்தி ரஹானே விளாசுவதும் இலக்குகள் சரிவதுமாக மாறிமாறி நடைபெற்றது. நேற்று மட்டும் ஐந்து முறை மழை குறுக்கிட மேலதிகமாக 47 பந்துப் பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது. 270 பந்துப் பரிமாற்றங்கள் வீசப்பட்டிருக்க வேண்டிய இடத்தில் இது வரை 103 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுமே வீசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இந் தியா 462–6 என்ற நிலைமையில் உள்ளது. ஆட்டத்தின் நான்காம் நாள் இன்றாகும். (ம)

## முதல் பத்து வீரர்களுக்குள் மீண்டும் காஷ்யப்

சர்வதேச் பூப்பந்துத் தரவரிசையில் இந்திய வீரர் காஷ்யப் மீண்டும் முதல் 10 இடங்களுக்குள் முன்னேறியுள்ளார்.

நடப்பு வருடத்தின் ஆரம்பத்தில் தரப்படுத்தலில் ஆறாவது இடத்திலிருந்த காஷ்யப் சில தொடர் தோல்விகள் காரணமாக மே மாதத் தரப்படுத்தலில் 12ஆவது இடத்துக்கு பின்தங்கினார். இந்த நிலையில் சமீபத்தில் நடந்த இந்தோனேஷிய பூப்பந்துத் தொடரில் உலகின் முதல் நிலை வீரரான சீனாவின் சென் லாங்குக்கு அதிர்ச்சி தோல்வியளித்ததன் மூலம் மீண்டும் தரப்படுத்தலில் முன்னேற்றம் கண்டு பத்து இடங்களுக்குள் வந்துள்ளார். தவிர கடந்த 14 ஆண்டுகளில் உலகின் முதல்நிலை வீரரை வீழ்த்திய முதல் இந்தியர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். (ம)



காஷ்யப்

# வில்லியர்ஸே எனது முன்மாதிரி

– பட்லர்



பட்லர்

தென்னாபிரிக்க அணித்தலைவரும் அதிரடி வீரருமான வில்லியர்ஸ்தான் எனது முன்மாதிரி என்று இங்கிலாந்தின் இளம்வீரர் பட்லர் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாக நேற்று நடைபெற்ற ஒரு ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பட்லர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வில்லி யர்ஸ் தொடர்பாக பட்லர் மேலும் தெரிவித்ததாவது:–

'தென்னா பிரிக்க அணித் தலைவர் வில்லியர்ஸ் தான் எனது முன்மாதிரி. ஒவ்வொருவரும் அவரது முறைமையைப் பின்பற்ற முயல்கின்றனர். அவரைப் போலவே துடுப்பாட்டத்திலும் களத்தடுப்பிலும் அசத்தவேண்டும், இங்கி லாந்து அணிக்காக சிறப்பாக விளையாட வேண்டும் என்பது எனது விருப்பம்.' – என்றார். (ம)

## விடைபெறுகிறார் மாட் பிரையர்

பிரையர்



இங்கிலாந்து அணியின் இலக்குக் காப்பாளரும் அனுபவ வீரருமான மாட் பிரையர் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தார். இதன் மூலம் அவரின் 8 வருட கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமானார் பிரையர். அறிமுகமாகிய சில மாதங்களிலேயே காயம் காரணமாக அவதியுற்று அணியிலிருந்து தற்காலிகமாக நீங்கினார். மீண்டும் அணிக்குத் திரும்புவதும் காயமடைந்து வெளியேறுவதுமாக இவரது கிரிக்கெட் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் காயம் இவரைவிட்டு தொலைதூரம் செல்வதாகவில்லை. கடந்த வருடம் நடைபெற்ற இந்தியா – இங்கிலாந்து தொடரில் குதிக்காலில் பலமாக காயமடைந்தார். காயத்தில் இருந்து மீண்டு மீண்டும் சர்வதேச ஆட்டங்களுக்கு திரும்ப முயற்சித்த போதிலும் அவரது முயற்சிகள் எவையும் பயனளிக்கவில்லை. இந்த நிலையில் மிகுந்த கவலையுடன் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

ஓய்வு தொடர்பாக மாட் பிரையர் தெரிவித்ததாவது:– 'ஓய்வை அறிவிக்கும் இன்றைய தினம் (நேற்று முன்தினம்) என் வாழ்வின் சோகமான நாளாக கருதுகிறேன். மிகவும் பிடித்த கிரிக்கெட்டில் காயம் காரணமாக மீண்டும் விளையாட முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. அதிகம் சாதிக்க வேண்டும் என்ற கனவுடன் சர்வதேச கிரிக்கெட்டுக்குள் காலடியெடுத்து வைத்தேன். ஆனால் என்னை விடாது துரத்திய துரதிர்ஷ்டங்கள் காரணமாக எனது பயணம் பாதியிலேயே தடைப்பட்டுள்ளது. –என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையுடன் டோனி

இந்திய அணித்தலைவர் டோனி தனது மகள் ஷைணபாவின் பல அழகிய புகைப்படங்களை தனது முகப்புத்தகத்தில் வெளியிட்டுள்ளார்.

டோனிக்கு குழந்தை பிறந்ததன் பின்னர் உலகக்கிண்ணத் தொடர், ஐ.பி.எல். தொடர் என்று நீண்டகாலமாக தனது குழந்தையுடன் நேரத்தைச் செலவிடாமல் கிரிக்கெட்டில் கவனம் செலுத்திய டோனி ஓய்வு காலமான தற்பொழுது தான் குழந்தையுடன் அதிக நேரத் தைச் செலவிடுகிறார். இந்த நிலையில் குழந்தையின் சில புகைப் படங்களை தனது முகப் புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். (ம)



# இலங்கை-பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் இலங்கை அணி அறிவிப்பு

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடருக்கான மத்தியூஸ் தலைமையிலான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி, இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 5 ஒருநாள், இரண்டு 'ரி–20' ஆட்டங்களைக் கொண்ட நீண்ட தொடரில் விளையாடுகிறது. முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ள நிலையில் முதல் டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் புதன்கிழமை (17ஆம் திகதி) ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் டெஸ்ட் ஆட்டத்துக்கான 16 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

16 வீரர்களைக்கொண்ட டெஸ்ட் அணி:– அஞ்சலோ மத்தியூஸ் (அணித் தலைவர்), லஹிரு திரிமன்னே, கவுஷ்ஹால் சில்வா, திமுத் கருணாரட்ன, குமார் சங்ககாரா, தினேஷ் சந்திமால், கிருத்துவான் வித்தானகே, ஜெஹான் முபாரக், குஷால் பெரேரா, ரங்கன ஹேரத், தில்ருவான் பெரேரா, தரிந்து கவுஷ்ஹால், நுவான் பிரதீப், தமிங்க பிரசாத், துஷ்மந்த சமிரா, சுரங்க லக்மால். (ம)


மிஸ்பா – சங்கா


## யாழ்ப்பாண றோட்டறிக் கழகம் யாழ்ப்பாணம் Rotary
### இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

ஆஸ்திரேலியாவில் இருந்து வருகைதந்துள்ள றோட்டறி அங்கத்தவர்களின் அனுசரணையுடன் வாசிக்கும் திறன் குறைபாடுள்ள வர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

தேவையானவர்கள் இன்று (13.05.2015) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு **கல்லூரிவீதி, நீராவியடியில்** அமைந்துள்ள **இலங்கை வேந்தன் கலைக் கல்லூரிக்கு** நேரில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## Knowledge Universe
British College of International Studies

IELTS -Life Skills
IELTS-AC/G
i-Spoken (International)
16 Yrs in Teaching

உங்களுக்கு வசதியான நேரத்தில் சர்வதேச பரீட்சைகளுக்கான மற்றும் தொடர்பாடலுக்கான ஆங்கிலத்தை 16 வருட அனுபவமுள்ள முதுமாணி MBA(London)ஆசிரியரிடம் கற்கலாம்.
Web: http://edu.kugroup.info
KU Education - 0777302882
626,1/1,K.K.S Rd,Jaffna

## வாடகைக்கு

நல்லூர் கோயில் வீதி, பருத்தித்துறை வீதிக்கு அருகில் வீட்டின் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. முற்பணம் 2½ லட்சம் அரசாங்க பணி அல்லது ஓய்வு பெற்றவர்கள் மாத்திரம் தொடர்புகொள்ளவும்.
T.P; 077 2958009

## Sky Computers System

அனைத்து விதமான கணினிகளும் (Destop Pc, Laptop) உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.
TP: 21-222-1417
89, கண்டி றோட், யாழ்ப்பாணம்.(கச்சேரிக்கு அருகாமையில்)

## வருடாந்த ஒன்று கூடல்

இலங்கை விவசாயக்கல்லூரி பழைய மாணவர் பொது ஒன்றியம்-வட மாகாணம்
வருடாந்த ஒன்று கூடல் - 14.06.2015
இடம் - கிறீன் கிறாஸ் ஹொட்டேல்
Green Grass Hotel.
ஆசீர்வாதம் ஒழுங்கை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
காலம் - 14.06.2015 - ஞாயிறு காலை 10.00 மணி

மேற்படி நிகழ்வில் வடமாகாணத்திற்கான புதிய நிர்வாக அங்கத்தவர் தெரிவும், விவசாய டிப்ளோமா பட்டதாரிகளின் எதிர்கால முன்னேற்ற நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் வவுனியா குண்டசாலை விவசாய கல்லூரிகளின் டிப்ளோமா பட்டதாரிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி
செயலாளர்,
கு.புவனேந்திரா
(c 17646) தொடர்பு :- 071 154 0633

## காசி யாத்திரை

காசி யாத்திரை கோயில் குருக்கள் சமூகத்தவரையும், வயதானவர்களின் நலனையும் கருத்திற் கொண்டு நடைபெறும் புனித காசி யாத்திரை கொழும்பு-டெல்லி, டெல்லி-சென்னை. சென்னை-கொழும்பு. யாத்திரை முழுவதும் AC வாகன வசதி.

செல்லும் இடங்கள்:
காசி, கயா, குருசேத்திரம், ஹரித்துவார், ரிஷிகேஸ், ஆந்திரா, தாஜ்மஹால், அலகபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சீத்தாமடி, மதுரா, புத்தகாயா, இராமேஸ்வரம் காளகஸ்திரி தரிசிப்பதுடன் வேறு ஆலயங் களையும் தரிசிக்கலாம்.

* மூன்று வேளை சுத்தமான உணவு, குடி தண்ணீர், இரண்டு பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள்.
* ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

ஆரம்பம் :- 10.07.2015
நிறைவு :- 26.07.2015
யாத்திரிகர் :- 15
(C/16458) (10.6.3)

மேலதிக விவரங்களுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
T.P:0777680102, 0777362154

## யாழ். நகரில் பிரபல்யமான கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
## Mobile Phone Repairing Course

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

June 20 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 20, 21, 22, 23, 24 ஆகிய ஐந்து தினங்களில்

* ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
* சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
* தனிப்பட்ட கவனிப்பு.
* 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள் .
* சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:
* இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
* கையேடு

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்

Special Trainer
Ganesh Sir

பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

BTEC # 21, Sirimbiyadi Land, (off Stanley Road), Jaffna. 077 6131358


# 490 கோடிகளுடன் செரபோவா முதலிடம்

## அதிகம் சம்பாதிக்கும் வீராங்கனைகள் பட்டியலில்

உலகின் அதிகம் சம்பாதிக்கும் விராங்கனைகள் பட்டியலில் முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார் ரஷ்யாவின் ரென்னிஸ் வீராங்கனையான மரிய செரபோவா.

உலகின் அதிகம் சம்பாதிக்கும் நூறு வீராங்கனைகள் பட்டியலில் நடப்பாண்டில் 490 கோடிகள் வரை சம்பாதித்த செரபோவா முதலிடத்தில் உள்ளதுடன் மற்றொரு ரென்னிஸ் நட்சத்திரமான அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் நடப்பு ஆண்டில் இதுவரை 392 கோடிகள் வரை சம்பாதித்து இரண்டாவது இடத்தில் உள்ளார்.

வீர, வீராங்கனைகளுக்கான பட்டியலில் செரபோவா 26 ஆவது இடத்தையும், செரீனா வில்லியம்ஸ் 47ஆவது இடத்தையும் கைப்பற்றியுள்ளனர். ரென்னிஸ் தரப்படுத்தலில் செரீனா முதலிடத்திலும் செரபோவா 4ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


செரபோவா


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்
### திருமதி தனலட்சுமி ஆறுமுகம்



தோற்றம் 20.07.1934 — மறைவு 14.05.2015

14.05.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத்தாயார் திருமதி தனலட்சுமி ஆறுமுகம் அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று (13.06.2015) சனிக் கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி
குப்பிளான்,
ஏழாலை.

தற்போதைய முகவரி
முதலாம் ஒழுங்கை, பலாலிறோட்,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.


# களமிறங்கிறார் ஜிகோ

சர்வதேச கால்பந்து சம்மேளனத்துக்குள் நடைபெற்ற ஊழல் குற்றச்சாட்டுக்குப் பின்னர் அப்போதைய தலைவராக இருந்த செப்பிளாட்டர் பதவி விலகினார். இதனால் தலைவர் இல்லாமல் இடைக்கால நிர்வாகக் குழுவுடன் இயங்கி வருகிறது சர்வதேச கால்பந்து சம்மேளனம். இந்நிலையில் வெற்றிடமாகியுள்ள பதவிகளில் ஒன்றான தலைவர் பதவிக்கு தான் போட்டியிடப் போவதாக பிரேஸிலின் முன்னாள் ஜாம்பவான் ஜிகோ தெரிவித்துள்ளார். கால்பந்தில் நடந்த ஊழல் புகார்களைப் பார்க்கும் போது மிகுந்த வேதனை அளிப்பதாகவும் உழலின் பிடியில் சிக்கியுள்ள சர்வதேச கால்பந்து சம்மேளனத்தை கட்டிக்காப்பதற்காக தலைவர் பதவிக்கு போட்டியிடுவது தனது கடமையென்றும், அதற்குரிய திறமை தனக்கு இருப்பதாகவும் ஜிகோ மேலும் தெரிவித்துள்ளார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org